வெகுஜன அரசியல் மாத இதழ்
Registered as a News Paper in Sri Lanka
முரசம் 02
முழக்கம் 03
விலை ரூபா.30
ஜனவரி-பெப். 2013

# புதிய நீதி

புதிய நீதி
PUTIYA NEETHI


மன்னார் மீனவர்கள் வயிற்றிலடிக்கும் பேரினவாதமும் இந்தியாவும் 7


உச்சம் நோக்கி பயணிக்கும் சகோதர சர்வாதிகாரம் 5


ஜெனீவாவும் தமிழ்த் தேசியக் கனவுகளும் 7


சிரியாவில் நடப்பதென்ன? 14

## அரசாங்கம் எத்திசையில் பயணிக்கிறது!



### அரசு தனது அப்பட்டமான சர்வாதிகாரத்தை மறைப்பதற்கான ஒரு போர்வையாகவே பௌத்த மதத்தை பயன்படுத்துகின்றது

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் தலைமை தாங்கி வழிநடாத்தும் இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எத்திசையில் பயணிக்கிறது? இது பொதுமக்கள் மத்தியில் பொதுவாகவே கேட்கப்படும் கேள்வியாக இன்றுள்ளது. இதற்குரிய பதிலைத் தேடியறிவதற்கு அதிக சிரமம் தேவையில்லை. நாட்டின் பொருளாதார, அரசியல், சமூகப் பண்பாட்டுத் தளங்களில் நாளாந்தம் இடம்பெற்றுவரும் நிகழ்வுப் போக்குகளை உற்றுநோக்கும் போது அக்கேள்விக்கான பதிலை பெற்றுக்கொள்ள முடிகிறது.

நாட்டின் இன்றைய பொருளாதாரம் என்பது முற்றிலும் இறக்குமதியிலேயே தங்கியுள்ளது. திட்டமிட்ட தேசியப் பொருளாதாரம் என்பது மருந்திற்குக் கூடக் கிடையாது. இறக்குமதியும், தரகு வர்த்தகமும் மட்டுமே இடம்பெறுகிறது. இதனால் பெரும் தரகு முதலாளிகள் ஒருபுறமாகவும் அவற்றுக்கான இறக்குமதி விற்பனை வரிகள் மூலம் அரசாங்கமும் அதிக அளவில் பணம் குவிக்கின்றனர். நாட்டின் அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, சீனி, கோதுமை மா, மல்லி, மிளகாய் முதல் மீன், இறைச்சி, மறக்கறிவகைகள் யாவும் தங்குதடையின்றி விலையேறிச் செல்கின்றன. எரிபொருள் விலை அரசின் ஆதரவுடன் அரசின் கட்டுப்பாட்டை மீறியும் அதிகரித்துச் செல்கின்றது. இதன் உடனடி விளைவாக மின்சாரம், போக்குவரத்து, தண்ணீர் கட்டணங்கள் நாளாந்தம் உயர்ந்த வண்ணமே உள்ளது. இவற்றால் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும் வாழ்க்கைச் செலவை தாங்க முடியாது தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் மட்டுமன்றி கீழ் நடுத்தர வர்க்கத்தினரான அரசாங்க, தனியார்துறை ஊழியர்களும் திணறித் திண்டாடி வருகின்றனர். அவர்கள் கோரும் நியாயமான சம்பள உயர்வு தொடர்ச்சியாக மறுக்கப்பட்டும் வருகிறது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே இருந்து வரும் கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் மிகக்குறைந்த நாட்சம்பளமே கிடைத்து வருகிறது. அடுத்த மாதத்தில்(மார்ச்) புதிய கூட்டு ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இன்று அதுவும் இழுத்தடிக்கப்படும் சூழலே காணப்படுகிறது. எவ்வாறு கூட்டு ஒப்பந்தம் மூலம் கண்துடைப்பான ஒரு அதிகரிப்பை வழங்கி ஏமாற்றலாம் என்றே ஆலோசிக்கப்படுகின்றது. அதே வேளை, நாட்டின் விவசாயிகள் தமது உற்பத்திகளை பல வித நெருக்கடிகள் மத்தியிலேயே மேற் கொள்கின்றனர். அத்துடன் தமது உற்பத்திகளை நியாயமான விலைக்கு விற்கமுடியாது திண்டாடிவருகின்றனர். நெல், உப உணவுப்பொருட்கள், பழவகைகள் போன்ற உற்பத்திகளுக்கு முறையான உதவிகளோ திட்டங்களோ இல்லாத நிலையில் அவை சீரழிந்த நிலையிலேயே இருந்து வருகிறது.

நெல் கொள்வனவு என்பது இன்று அரச ஆதரவுப் பெற்ற மா∴பியாக்கள் கைகளுக்குச் சென்றுள்ளது. அரசு விவசாயிகளுக்கு உரிய உத்தரவாத விலையினைத் தொடர்ந்து மறுத்து வருகின்றது. கடந்த ஆண்டு விவசாயிகள் நெல்லுக்கு உரிய விலை கிடைக்காமல் விளைச்சல்களை வீதிகளில் தீயிட்டுக் கொளுத்திய வேதனையான நிகழ்வுகள் இடம்பெற்றன. விவசாயப் பொருள் விற்பனையில் தரகு வர்த்தகர்கள் தொடர்ச்சியாக பெரும் கொள்ளையடிக்கின்றனர். அந்நிய இறக்குமதிக்கு நாட்டின் கதவுகள் திறந்து விடப்பட்டு இறக்குமதி திட்டமிட்ட வகையில் ஊக்குவிக்கப்படுவதால், விளைச்சல் காலங்களில் உள்ளூர் உற்பத்திகளின் விலைகள் வீழ்ச்சியுறுவதால் விவசாயிகள் தமது முதலைக்கூட மீளப் பெறமுடியாது நட்டங்களும் பாதிப்புகளும் அடைந்து வருகின்றனர். யுத்தம் இடம்பெற்ற வடக்கு கிழக்கில்

பக்.02>>

## கொல்லப்பட்ட ரிசானாவும் கொல்லப்படாத ரிசானாக்களும்

**ரிசானாவின் சிரச் சேதத்தின் இரத்தத்துளிகள் ஆளுவோரின் முகங்களில்**

2013 ஜனவரி 10ம் திகதி சவூதி அரேபியாவிலிருந்து நெஞ்சை உலுக்கும் செய்தி வெளியாகியது. கடந்த ஏழு வருடங்களாக சவூதி அரேபியாவின் சிறையில் இருந்து வந்த இலங்கையின் இளம் பணிப்பெண்ணான ரிசானா நபீக் சிரச்சேதம் செய்யப்பட்டார் என்பதே அச் செய்தியாகும். சவூதியின் மன்னர் ஆட்சியானது தனது 'ஷரிஆ' சட்டத்தின் கீழ் அந்நாட்டின் சிறைக்கூடத்தில் ரிசானாவின் தலையைத் துண்டித்து மரண தண்டனையை நிறைவேற்றிக்கொண்டது. இதற்கு எதிராக காட்டுமிராண்டித்தனம், கொடூரம் என மனிதாபிமானம் உள்ளோரும் மனித உரிமை ஆர்வலர்களும் கடுங் கண்டனங்களை வெளியிட்டனர். அதேவேளை சவூதியின் ஆதரவாளர்களும் 'ஷரிஆ' சட்ட விசுவாசிகளும் அச்சிரச் சேதத்தை நியாயப்படுத்தி தமது கோர முகத்ததைக் காட்டிக்னர்.

ஆனால் நாம் காணவேண்டிய சமூக யதார்த்தமும் உண்மையும் இச்சிரச்சேதத்திற்கு அப்பால் உறைந்த நிலையில் இருந்து வருகிறது. திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பகுதி கிராமம் ஒன்றின் ஏழ்மையும் வறுமையும் குடிகொண்டிருந்த ஒரு ஓலைக் குடிசைக் குடும்பத்தில் இருந்தே ரிசானா பணிப் பெண் வேலைக்கு என சவூதிக்குச் சென்றார். அவரும் விருப்புடனும் பெற்றோரின் சம்மதத்துடனுமே சென்றார். ஆனால் 2005ம் ஆண்டில் அவர் அங்கு அனுப்பப்பட்டபோது அவரது பிறப்பு வயது பதினேழு மட்டுமேயாகும். ஆனால் அதனை இரண்டு வயதால் கூட்டிப் பத்தொன்பது எனப் பொய்யான பிறப்பு பத்திரம் தயாரிக்கப்பட்டே வேலைவாய்ப்பு முகவர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டார். இது அவளுக்கும் அவரது பெற்றோருக்கும் தெரிந்த விடயம். இது போன்ற செயற்பாடு மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு முன்வருவோருக்கு சாதாரணமாகவே செய்யப்பட்டு வரும் நடைமுறையாகும். வறுமையும் வாழ்க்கையின் நெருக்கடியும் அவர்களை அவ்வாறு செய்த்தூண்டுகின்றது. இந்த சமூக யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டே நாம் இப்பிரச்சினையை அனுக வேண்டும். மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு தரகுத் தொழிலில் வயது, பெயர், முகவரி, தொழிற்சான்றிதழ், சம்பளம், ஒப்பந்த காலம் போன்றவற்றில் ஏமாற்றும் மோசடிகளும் இடம்பெறுவது

பக்.02>>

## அதிகரித்து வரும் பாலியல் குற்றங்கள்

**உலக மயமாக்கலை அனுமதிக்கும் அரசே குற்றவாளி**

பௌத்தத்தை தலையில் வைத்துப் போற்றும் இலங்கையில் 2012ல் 900 பாலியல் வன்புணர்ச்சிகளும் 700 சிறுவர் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளதுடன் 17 சிறுவர் கொலைகளும் இடம்பெற்றுள்ளன. 2011ம் ஆண்டில் 1167 பாலியல் வன்புணர்ச்சி சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 317 சம்பவங்கள் மட்டுமே வழக்கிற்கு வந்துள்ளது. 2007ல் இருந்து 11 வரை 6343 பாலியல் வன்புணர்ச்சிகளும் சித்திரவதைகளும் இடம்பெற்றுள்ளன. இதில் 5158 சிறுவர் துஷ்பிரயோகங்கள் உள்ளடங்காது.

இலங்கையின் நிலை இவ்வாறிருக்க, வல்லரசுக் கனவில் இருக்கும் இந்தியாவில் ஒவ்வொரு 22 நிமிடத்திற்கும் 22 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகின்றார். ஒவ்வொரு 7 நிமிடத்திற்கு ஒரு முறை பெண்கள் மீதான வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகின்றது. ஒவ்வொரு 43 நிமிடத்திற்கு ஒரு பெண் கடத்தப்படுகின்றார். ஒவ்வொரு 42 நிமிடத்திற்கும் ஒரு வரதட்சணை சாவு நிகழ்வுகின்றது. பொலிஸில் முறைப்பாடாக பதிவாகியுள்ள 93000 பெண்கள் மீதான வன்முறைக் குற்றங்கள் இன்னமும் விசாரணைக்கே வரவில்லை. தமிழகத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் 1751ற்கும் அதிகமான பாலியல் வல்லுறவுக் குற்றங்கள் உட்பட பெண்களுக்கு எதிரான 14545 குற்றங்கள் பல ஆண்டுகளாக விசாரிக்கப்படாது முடங்கிக் கிடக்கினறன.

இந்த இலட்சனங்களில் தான் இந்தியா 'வல்லரசு கனவு' கான மகிந்த அன்ட் சகோதரர்கள் இலங்கையை "ஆசியாவின் அதியம்" ஆக கனவு கான்கின்றனர். இந்திய இலங்கை அரசுகள் பின்பற்றி வரும் நவ தரான்மைப் பொருளாதார கொள்கையும், உலக மயமாக்கலின் எதிர்வு கூறப்பட்ட பின் விளைவுகளும், சீரழிவுகளும்தான் காரணம் என்பதை யாரும் கதைக்க இன்னும் தயாராக இல்லாத நிலையிலும், சமூகத்தில் ஆணாதிக்க சிந்தனையும் சாதிய கொடுமையும் இருக்கும் வரையிலும் பெண்களுக்கு எதிரான வன்முறையை கட்டுப்படுத்தவே முடியாது என்பதே அனுபவம் கூறும் உண்மையாகும்.

## அரங்கேறவுள்ள கூட்டு ஒப்பந்த நாடகம்

### பெருந்தோட்ட மக்கள் முன்னுள்ள சவால்கள்

இவ்வருடம் மார்ச் 31ம் திகதியுடன் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக 2011ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட சம்பள கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகிறது. தொடர்ச்சியான வாழ்கைச் செலவு அதிகரிப்பினால் துன்புறும் தோட்டத் தொழிலாளர்கள் தமக்கான நியாயமான சம்பள உயர்வை எதிர்பார்த்து நிற்கின்றார்கள். கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் இந்த எதிர்பார்ப்பை தொழிலாளர்கள் சார்பாக கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் இ.தொ.கா, இ.தே.தோ.தொ.ச மற்றும் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி என்பன நிறைவேற்றுமா என்ற சந்தேகத்தில் அவர்கள் இருந்து வருகின்றனர். இந்த நியாயமான சந்தேகத்தேகம் ஒருபுறம் இருக்க வழமையாக கூட்டு ஒப்பந்த காலத்தில், சம்பள உயர்வை வழங்கும் நிலையில் பெருந்தோட்டக் கம்பனிகள் இல்லை என்று கூறி வந்த இலங்கை முதலாளிமார் சம்மேளனம் இம்முறை சட்ட ரீதியாக புதிய கூட்டு ஒப்பந்தம் செய்ய முடியாத நிலை தோன்றி இருப்பதாக கூறி வருகிறது. தோட்ட பொதுச் சேவையாளர் சங்கம் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையிலான முரண்பாடுகள் தொடர்பாக நடுத்தீர்ப்புச் சபையில் முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளையும் இதர சட்ட நடவடிக்கைளையும் காட்டி தொழிலாளர்களுடனான கூட்டு ஒப்பந்தத்தை செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளதாக கூறுகின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம் தொடர்பாக செய்யப்படும் கூட்டு ஒப்பந்தமும் தோட்ட பொதுச் சேவையாளர் சங்கத்துடன் செய்யப்படும் கூட்டு ஒப்பந்தமும் தனித்தனியானவையாக ஒன்றில் ஒன்று எவ்விதத்திலும் தங்கி இருக்காத நிலையில் இவ்வாறான சட்ட அடிப்படையற்ற கருத்தை இலங்கை முதலாளிமார் சம்மேளனம் கூறி இருப்பதன் உள் நோக்கங்களை நாம் புரிந்து கொள்ள முடியும்.

மூன்று இலட்சத்திற்கும் மேலான தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக தீர்மானிக்கப்பட உள்ள சம்பள கூட்டு ஒப்பந்தம் முழு மலையக மக்களின் வாழ்கையிலும் தாக்கத்தை பல்வேறு மட்டங்களில் ஏற்படுத்தக் கூடியதாகும். 2011ம் ஆண்டு 22ம் இலக்க சம்பள கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகளும் 2003ம் ஆண்டு 13ம் இலக்க(முதன்மை)



கூட்டு ஒப்பந்தமும் உள்ளடக்கத்திலும் நடைமுறை பிரயோகத்திலும் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை மீறுவதாகவே இருந்துள்ளன.

கடந்த சம்பள கூட்டு ஒப்பந்தத்தில் தோட்டத் தொழிலாளர்கள், அடிப்படைச் சம்பளமாக ரூபா 500ஐ எதிர்பார்த்து தொழிற்சங்க பேதங்களை கடந்து போராடியபோதும் வெறும் 380 ரூபாய் அடிப்படை சம்பளத்திற்கு இணங்கி தொழிற்சங்கங்கள் அப்போராட்டத்தைக் காட்டிக்கொடுத்ததை தோட்டத் தொழிலாளர்கள் மறக்க நியாயம் இல்லை. அத்தோடு அந்த ஒப்பந்தத்

பக்.02>>

# அரசியற் தலைவர்களா! அரசியற் கொத்தடிமைகளா!

**தன் மகளைக் கொன்றவர்களிடமிருந்தோ அவர்களின் முகவர்களிடமிருந்தோ ஒரு சல்லிக் காசும் பெற மாட்டேன் என்று சொல்லித் தன்மானம் என்றால் என்ன என்று ஒரு பாடங்கற்பித்த ரிஸானாவின் தாய் ஒரு வீரத்தாயாக மெச்சத்தக்கவர்.**

நமது நாட்டின் முஸ்லிம் தலைவர்கள் எவருமே இன்று முஸ்லிம் சமூகத்தைப் பற்றிய அக்கறையுடையவர்களல்ல. முஸ்லிம் தேசியம் முஸ்லிம்கள் செறிவாக வாழும் இடங்களில் முன்னெடுக்கப்பட்ட போதும் முஸ்லிம்களின் தேசியஇன உரிமைகளைத் தெளிவாக முன்வைக்கும் அக்கறை முஸ்லிம் தலைவர்களிடம் இருக்கவில்லை. மாற்று அரசியல் என்று முஸ்லிம் தேசக் கோட்பாட்டை முன்வைத்துப் பிரதேச அடிப்படையில் தம்மை நிலைநிறுத்த முயன்றவர்களுக்கும் தமிழர் விரோத அரசியலைவிட வேறு எதுவும் கிட்டவில்லை. மலையகத் தமிழ்ர் அரசியல் போல முஸ்லிம் அரசியலும் தனிமனித ஈடேற்றத்திற்கான அரசியல் பேரங்களின் அரசியலாக முடங்கிப் பலகாலம். இப்போது ஏகப் பெரும்பான்மையான முஸ்லிம் தலைமைகள் ராஜபக்ஷ ஆட்சியுடன் ஒண்டிக்கிடக்கிறார்கள். மற்றவர்கள் யூ.என்.பியுடன் கூட்டுச்சேர்ந்து என்றவாறு அதிகாரத்திற்கு வரலாம் என்று கனவு காணுகிறார்கள்.

இன்று முஸ்லிம்கள் சிங்களப் பேரினவாதிகளால் வெளிவெளியாகவே இலக்கு வைக்கப்படுகின்றனர். பாராளுமன்றத்தில் ஒரு முக்கிய அமைச்சர் ஒரு பள்ளிவாசலும் இடிக்கப்படவில்லை என்று அறிவித்தபோது அதை மறுத்து ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும் வாயே திறக்கவில்லை. இது ஏன்? அது ஏனென்று விளங்க வேண்டுமானால், ரிஸானா என்ற ஏழைப்பெண்ணை முறையான நீதி விசாரணையின்றி சவூதி அராபியாவின் ஆளும் குடும்பங்களால் வக்கிரப்படுத்தப்பட்ட "இஸ்லாமிய" சட்டங்களின்படி கொடுமையாகத் தண்டித்ததைத் தட்டிக் கேட்க முஸ்லிம் தலைவர்கள் எனப்படுகிற எவருமே துணிய வில்லை. மாறாக ரிஸானாவின் குடும்பத்தினருக்கு சவூதியின் பாவத்தைக் கழுவி துடைக்கும் பண முடிச்சுக்களைக் காவிச்செல்ல அவர்கள் ஆயத்தமாக இருந்தனர். இது மிக அருவருப்பானது.

இவர்கள் அனைவருக்கும் செருப்பால் அடிப்பது போல ரிஸானாவின் தாயார் தன் மகளைக் கொன்றவர்களிடமிருந்தோ அவர்களின் முகவர்களிடமிருந்தோ ஒரு சல்லிக் காசும் பெறமாட்டேன் என்று சொல்லித் தன்மானம் என்றால் என்ற என்று ஒரு பாடங் கற்பித்தார். வடபுலத்தில் ஒரு வருடத்திற்கும் சற்று முன்னர் 5ம் வகுப்புப் பரீட்சையில் சிறப்பாகத் தேறியதற்காக பரிசு பெற்ற ஒரு 10 வயதுச் சிறுவன் அமைச்சரின் காலில் விழ மறுத்து தன்மானம் பற்றிய ஒரு பாடம் புகட்டியதை மறந்திருக்க மாட்டோம். கிழக்கைச் சேர்ந்த ரிஸானாவின் தாய் ஒரு வீரத்தாயாக மெச்சத்தக்கவர். ஆனால் சவூதியின் கூலிப் படைகள் இப்போது ரிஸானாவின் மரண தண்டனையை எதிர்ப்போர் முஸ்லிம்களல்ல என்று ஏசித் திரிகிறார்கள். ரிசானாவின் மரண தண்டனையை எதிர்ப்போர் முஸ்லிம்களோ இல்லையோ அதை ஆதரிப்போர் மனிதர்களா என்ற கேள்வி நம் முன் எழவேண்டும்.

முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படுகிற இவ் வேளைகளில் முஸ்லிம்கள் சிலர் மட்டுமே தைரியமாக முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைப் பேசுகிறார்கள். அவர்கள் சவூதி ஆட்சியின் பொட்டுக்கேடுகளைப் பற்றித் துணிந்து பேசுகிறார்கள். இலங்கை முஸ்லிம்களின் உரிமை மறுப்பைப் பற்றிப் பேசுகிறார்கள். முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் இத்தகையவர்களின் கையில் உள்ளதே ஒழியப் பதவிக்காகவும் பணத்துக்காகவும் சோரம் போகும் முஸ்லிம் தலைமைகளின் கையில் இல்லை.

முற்போக்குச் சிந்தனையும் நியாய உணர்வும் உள்ள முஸ்லிம்கள் ஒன்றுபட்டு ஒரு புதிய முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்துக்கு வழிகாட்ட வேண்டும். இது இன்றைய சூழலில் மிக அவசியமானது. ஒரு மாற்று முஸ்லிம் அரசியல் இல்லாமல் முஸ்லிம்களின் பேரால் நடக்கும் அரசியல் ஏமாற்று வேலைகளை முறியடிக்கவோ முஸ்லிம்களி உரிமைகட்காகப் போராடவோ வாய்ப்பில்லை.

## புனர்வாழ்வு முகாமில் தோழர் சுகேசனன்



2007ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மலையகத்தில் கைது செய்யப்பட்ட ஐந்து புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தோழர்களில் இன்னும் விடுவிக்கப்படாமல் இருப்பவர் தோழர் சுகேசனன். கடந்த ஆறு வருடங்களாக விசாரணையும் இன்றி வழக்கும் தாக்குதல் செய்யப்படாதும் தடுத்து வைக்கப்பட்டிருந்த தோழர் சுகேசனன் இப்போது வவுனியா புனர்வாழ்வு முகாமில் இருந்து வருகின்றார். அவரைப் போன்று பல ஆயிரக்கணக்கானோர் கொடுஞ் சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும், புனர்வாழ்வு முகாம்களிலும் எவ்வித விசாரணையோ, வழக்கோ, உரிய பதிவுகளோ இன்றி வைக்கப்பட்டுள்ளனர். தோழர் சுகேசனனுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையிலேயே, நீதிமன்றம் ஒரு வருட புனர்வாழ்வு அளித்து அவரை புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பி வைத்தது. அவர் ஏலவே 5 மாத புனர்வாழ்வை பூர்த்தி செய்துள்ள நிலையில் இன்னும் 7 மாதங்கள் புனர்வாழ்வு முகாமில் இருக்கவேண்டியுள்ள்து. அவர் குற்றச்சாட்டுக்கள் எதுவும் அற்ற நிலையில் அரசியற் காரணங்கட்காக ஐந்து வருடங்கள் சிறையில் அடைத்துவைக்கப்பட்டார். பின்னரே புணர்வாழ்வுக்கு மாற்றப்பட்டார். தோழர் சுகே, தொழிலாளர் உழைக்கும் மக்கள் மீதும் கட்சியின் மீதும் உள்ள பற்றாலும் விசுவாசத்தாலும் பல்வேறுவகையான கடும் உடல் உபாதைகளுக்கும், துன்ப அலைகளுக்கும், பல்வேறு இன்னல்களுக்கும் மத்தியிலும் தளராத மனவுறுதியுடனும் எஃகு போன்ற வர்க்க குணாம்சத்துடனும் இருந்துவருகின்றார் என்பது நம் கரங்களை உயர்த்தி வாழ்த்து கூறவைக்கிறது.

1>> அரங்கேறவுள்ள கூட்டு ஒப்பந்த...

தில் உயர்த்தப்பட்ட அடிப்படை சம்பளத்திற்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய இரண்டு மாதகால (01.04.2011 தொடங்கி 31.05.2011 வரை) ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியன முதலாளிமார் சம்மேளனத்துக்கு தாரைவார்க்கப்பட்டன. ஒப்பந்தத்தில் காணப்படும் நெகிழ்வுத்தன்மைகளை தமது நலனுக்கு தோட்ட நிர்வாகம் பயன்படுத்தி வருகிறது.

வேலை நேரம், நாட் சம்பளத்துக்கான இலக்கு (கொழுந்து கிலோ அடிப்படையிலும், இறப்பர் பால் அளவு அடிப்படையிலும் ஏனையவை வேலையின் தன்மை அடிப்படையிலும்) ஆகியவற்றை தோட்ட நிர்வாகம் தான்தோன்றித் தனமாக தீர்மானித்து தொழிலாளர்களின் உழைப்பை மேலும் மேலும் சுரண்டி வருகின்றனர். அதேபோல் சில தோட்டங்களில் ஞாயிறு, பௌர்ணமி தினங்களில் வேலை செய்யும்போது 1½ நாட்சம்பளம் (அடிப்படை நாட் சம்பளமான ரூ.380 மற்றும் இலக்கு பூர்த்திக்கான ரூ.30ஐ சேர்த்து) ரூபா 615 வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை மீறி அந்நாட்களுக்கு கைகாசுக்கு வேலை வழங்குவது, அந்நாட்களுக்கு 1 ½ சம்பளம் வழங்குவதாயின் சாதாரண நாள் வேலை அளவை விட மேலதிக இலக்குகளை வழங்குவது போன்ற கூட்டு ஒப்பந்த விதிகளை மீறும் விதத்தில் கம்பனிகள் செயற்பட்டு வருகின்றன. மேலும் பெருந்தோட்டங்களில் தோட்ட நிர்வாகத்தினால் மரபு ரீதியாக வழங்கப்பட்டு வந்த பல நலன்புரித் திட்டங்கள் ஏற்கனவே இல்லாமல் செய்யப்பட்டுள்ள நிலையில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் இவற்றுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்காது தோட்டக் கம்பனிகளின் இலாப வெறிக்கு கூட்டுக்களவானிகளாய் இருந்து வருகின்றனர்.

இப்பின்னணியில்தான், தனித்து சம்பள உயர்வுக்கான சம்பளக் கூட்டு ஒப்பந்தம் என்ற நிலையைக் கடந்து 2003ம் ஆண்டு 13ம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் கூட்டு ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதும், புதிய விடயங்களை சேர்ப்பதன் ஊடாக தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளில் கை வைக்க முடியாத நிலையை ஏற்படுத்துவதும் அவசிமானதாகும். பெருந்தோட்டக் காணிகளை சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கி தோட்டத் தொழிலாளர்களை தொழில் உரிமைகள் அற்ற கொத்தடிமை நிலைக்கு கொண்டு செல்லும் பாதையில் இன்றைய அரசாங்கத்தின் கொள்கை காணப்படுகிறது. 2013ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட கம்பனிகளால் பயன்படுத்தப்படாத 37 ஆயிரம் ஏக்கர் நிலத்தை சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்க ஏற்பாடாகியுள்ளது. ஒரு சிறு துண்டு காணி இன்றி உழைத்து வரும் மலையக மக்கள் உழைத்து செழுமைப்படுத்தி நிலங்களை நில உரிமையற்ற மலையக மக்களுக்கு வழங்காது அவற்றை இனவாத கண்ணோட்டத்துடன் உள்ளூர் முதலாளகளுக்கு வழங்கப்படுவதை தடுப்பதற்கும், மலையக மக்களின் வாழ்வாதாரமான பெருந்தோட்டங்களைப் பாதுகாக்கவும் தோட்டத் தொழிலாளர்கள் இன்று ஐக்கியப்பட்டு போராட வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

இந்நிலையில் இந்த கூட்டு ஒப்பந்த நிபந்தனைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கும் வரப்போகும் கூட்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளில் தங்களின் கோரிக்கைகளையும் உரிமைகளையும் உறுதி செய்ய வேண்டியவர்களாக தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். தோட்டத் தொழிலாளர்கள் இவ்வாறு தமது தொழில் உரிமைக்காக பங்குபற்றுவதனை உறுதி செய்ய மலையக மக்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிரான ஜனநாயக முற்போக்கு சக்திகள், ஆசிரியர்கள், இளைஞர்கள், மாணவர்கள், ஊடகவியாலாளர்கள் மற்றும் ஏனைய அரச தனியார் துறை ஊழியர்கள் தங்களின் பங்களிப்பை வழங்க வேண்டியத் தேவை உள்ளது. அத்தோடு தேசிய மட்டத்தில் மலையக மக்களின் உரிமைகட்கு குரல் கொடுக்கும் முற்போக்கு ஜனநாயக சக்திகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழில் மற்றும் சம்பள உரிமைக்கு நேர்மையாக குரல் கொடுக்கும் போது அவர்களை மக்கள் தயக்கமில்லாமல் அரவனைத்துச் செல்வதுடன் அவர்களுடன் ஐக்கியத்தையும் பேண வேண்டும். அப்போதே இம்முறை கூட்டு ஒப்பந்தத்தில் குறைந்தபட்ச வெற்றியையேனும் நாம் பெற முடியும். மொத்தத்தில் தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைக்கான போரட்டத்தை தலைவர்கள் அதிகாரத் திமிரில் வழிநடத்துவது என்ற நிலை மாறி தலைவர்களை தொழிலாளர்கள் வழிநடத்தும் நிலை வரும் போதே தொழிலாள்ர்களுக்கான வெற்றி உறுதி செய்யப்படும்.

1>> அரசாங்கம் எத்திசையில்.....

விவசாயிகளின் நிலை இன்றும் மிகமோசமான நிலையிலேயே உள்ளது. பெரும்பாலான விளைநிலங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளிளேயே உள்ளது.

இந்த அரசாங்கம் அபிவிருத்தி என முழங்கி நிற்பது விவசாயத்திலோ, கைத்தொழில்களிலோ அன்றில் சிறு கைத்தொழில்களிலோ அல்ல. நாட்டையும் பொருளாதாரத்தையும் நவ கொலனித்துவமாக்கிக் கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையே அபிவிருத்தி என்று கூறுகிறார்கள். வீதிகளை அகலித்து நவீனப்படுத்துவது, அதிவேக வீதிகளை அமைப்பது, துறைமுகங்களைக் கட்டுவதும் விஸ்தரிப்பதும், விமானநிலைய நிர்மாணங்களை விரிவுப்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகிறது. இவற்றின் மூலம் அந்நிய இறக்குமதிகள் விரைவாகவும், தங்கு தடையின்றியும் நாடு முழுவதும் சென்றடைய வழிவகை செய்யவும், உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவுமே மேற்கொள்ப்படுகிறது. தலைநகரிலும் பிரதான கடலோரங்களிலும் பல தரங்களிலான உல்லாச விடுதிகள் கட்டி திறக்கப்படுகின்றன. இவை யாவற்றுக்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன வழிகாட்டுகின்றன. அத்துடன் சீன, இந்திய வங்கிகளும் முதலீட்டாளர்களும் நாட்டிற்குள் தாராளமாகக் கடைவிரித்து வருகின்றனர். இத்தகைய சூழலில் நாட்டின் பொருளாதாரம் நாட்டு மக்களுக்கானதாக இல்லை என்பது தெளிவாகக் காணப்படுகிறது. ஏகப்பெரும்பான்மையான சாதாரண உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரமும், வாழ்க்கைச் செலவுமே நாட்டின் பொருளாதாரத்தின் நிலையினை அளவிடும் அளவு மானியாகும். அதேவேளை செல்வந்தர்கள், அரசாங்கத்தரப்பினர், அமைச்சர்கள், ஜனாதிபதியின் சகோதரர்கள், உறவினர்கள், அவர்களைச் சுற்றியிருப்போர் மென்மேலும் சொத்து சுகம் பெற்று மேலே மேலே சென்று கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் மக்களது அன்றாட வாழ்வுரிமைகள், எழுத்துப் பேச்சு உரிமைகள், ஊடக சுதந்திரம் என்பவற்றை படிப்படியாக மறுத்து பாசிசம் உச்சநிலை நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கின்றது. பாசிசத்தையும், கொள்ளையடிப்பையும் பாதுகாக்கத் தேவையான சட்டங்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவை அரசின் போக்கை எதிர்ப்போர் மீது பிரயோகிக்க உருவாக்கப்பட்ட சட்டங்களேயாகும். மகிந்த அரசு தமக்குத் தேவையான சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றும் அதே வேளை பாதுகாப்புப் படைகளை நவீனப்படுத்தி விரிவாக்கியும் வருகிறது. புலிகளும் பயங்கரவாதமும் மீள வரக் காத்திருக்கின்றன என்னும் பரப்புரையின் கீழ் படைபலத்தைப் பெருக்கி வருகின்றனர். இது உண்மையில் தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமன்றி, தென்னிலங்கை மக்களிடமிருந்து எந்நேரமும் எழக்கூடிய எதிர்ப்புக்களையும் முறியடிக்கவே அரசாங்கம் இத் தயாரிப்புகளில் ஈடுபட்டு வருகிறது. தென்னிலங்கையில் எழக்கூடிய மக்கள் எழுச்சிகளை எதிர்கொள்ளத் தக்க வகையில் கலகத்தடுப்பு படைகள் பலப்படுத்தப்படுவதாக அரசாங்க அமைச்சர்கள் வெளிப்படையாகவே கூறுகின்றனர்.

இன்றைய ஆட்சியானது தனது தரகு முதலாளித்துவ பேரிவாத ஆட்சியை முன்னெடுப்பதற்கு பௌத்த மதத்தை ஒரு கவசமாகக் கொண்டுள்ளமை வெளிப்படையானதாகும். ஜனாதிபதி தன்னை ஒரு தீவிர பௌத்தம் காக்கும் தலைவராகவே காட்டி வருகிறார். இது சிங்கள மக்களை மதிமயங்க வைக்கும் செயலேயாகும். இது அரசியல் இருப்பிற்கும் ஆட்சி அதிகாரத்திற்குமான ஒன்றே அன்றி பௌத்தக் கோட்பாடுகளுக்கு இசைவானவை அல்ல. வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட கொடிய யுத்தத்தில் குறிப்பாக இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கௌதம புத்தரின் போதனைகளும் பௌத்த தர்மமும் எவ்வகையிலும் எந்த இடத்திலும் பின் பற்றப்படவில்லை. அரசு இன்று தமது அப்பட்டமான சர்வாதிகாரத்தை மறைப்பதற்கான ஒரு போர்வையாகவே பௌத்த மதத்தைப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறான சூழலில் நாட்டின் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் நாடு முன்னெப்போதும் கண்டிராத சமூகச் சீரழிவுகள் பெருகி வருகின்றன. நாடு முழவதும் பௌத்த பிக்குமாரைக் கொல்வது முதல் விகாரைகளில் புத்தர் சிலைகளையும் புராதணப் பொருட்களை கொள்ளையடிப்பது, கொலை கொள்ளை, கற்பழிப்பு வரை இடம்பெறுவது மட்டுமல்லாது பௌத்த பிக்குமாரே சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வரும் செய்திகளை அடிக்கடி காணமுடிகிறது. குறிப்பாகப் பெண்கள், சிறுமிகள் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படுவது இயல்பானதொன்றாக இருப்பதை அன்றாடச் செய்திகள் காட்டுகின்றன. இளம் தலைமுறையினரிடம் மோசமான பண்பாட்டுச் சீரழிவுகள் இடம்பெறுகின்றன. இதில் அவர்களைக் குறைகூறிக் குற்றம் சுமத்த முடியாது. நமது சமூகத்தில் திணிக்கப்பட்ட நவதாராள பொருளாதாரமும் நவ கொலனியத்தை நடைமுறைப்படுத்தி வரும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுமே மேற்படி சமூகச் சீரழிவின் ஊற்று மூலங்களாகும். இவற்றின் மூலம் இளந்தலைமுறையினர் சமூக அக்கறையற்று மனிதநேயத்தைத் தொலைத்து வெறும் யந்திரங்கள் போன்று வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றர். எத்தகைய குறுக்கு வழியாயினும், பணம் சேர்ந்தால் சொத்துப் பெருகினால் போதும் என்ற பயங்கரச் சுயநலச் சூழல் விரிவடைந்துவருகின்றது. மேற்குலகிலும் இந்தியாவிலும் வந்து கொண்டிருக்கின்ற நச்சுப் பண்பாட்டு அம்சங்களே நமது மக்கள் மத்தியில் ஊடுருவி ஆதிக்கம் செலுத்தும் சிந்தனையாகக் காணப்படுகின்றன.

இவற்றை எல்லாம் மகிந்த சிந்தனையின் கீழ் ராஜபக்ஷ சகோதரர்களின் குடும்ப ஆட்சியானது தமது இருப்பிற்கும் எதிர்காலத்திற்கும் உரியனவாகப் பயன்படுத்தி வருகிறது. இவற்றை பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டு அடிப்படைகளில் விளங்கிக் கொள்வதும் விழிப்படைவதும் இன்றைய தேவையாகும். அரசியல் விழிப்படையும் உழைக்கும் மக்களால் மட்டுமே அணிதிரளவும் போராடவும் முடியும். எனவே வெகுஜனப் போராட்ட மார்க்கத்தில் முன்செல்ல வேண்டிய தேவை உழைக்கும் மக்களுக்கு முன்னால் வரலாற்றுக் கடமையாக இருக்கிறது.

# தமிழக அரசியற் கோமாளிகளும் நமது ஊடகங்களும்

"பூனைக்கு விளையாட்டு எலிக்கு சீவன் போகின்றது" என்று ஒரு பழமொழி. தமிழகத்து அரசியல் பூனைகள் ஈழத் தமிழர் பிரச்சினை என்ற ஒரு எலியை வைத்து இன்னமும் விளையாடிக் கொண்டே இருக்கின்றன. இந்த விளையாட்டின் முக்கிய நோக்கம் தமக்கான கவன ஈர்ப்பு மட்டுமே. இலங்கைத் தமிழரின் இன்னல்கள் பற்றிய கவலை தமிழகத்தில் உள்ளவர்களிடம் வலுவாக உள்ளது. ஆனால் அவர்களால் பயனுற எதையும் செய்ய இயலாத படி அவர்களை ஏமாற்றி தமிழக இனவாத அரசியல் நடத்துகின்ற கூட்டத்தாரும் பல்வேறு ஏமாற்றுத் தலைமைகளும் செயற்படுகின்றன. தேர்தலில் தோற்ற பிறகு கருணாநிதிக்கு தமிழீழம் கூட நினைவிற்கு வந்துள்ளது. கருணாநிதியின் கடைக்கு எதிர் கடை விரிக்க ஜெயலலிதாவுக்கும் முடிகிறது. அதற்கும் அப்பால் கோபால சாமி, சீமான், நெடுமாறன், போன்றோரின் விசமத்தனமான கோமாளித்தனங்களும் அரங்கேறுகின்றன. எனினும் இவற்றில் எதுவுமே டில்லி தர்பார் இலங்கைக்காக வைத்துள்ள திட்டத்தை மாற்றியதுமில்லை, மாற்றப்போவதுமில்லை.

தமிழக அரசியற் கூத்தாடிகள் நடத்துகின்ற நாடகங்கள் வெறும் ஈழத் தமிழர் ஆதரவுடன் நிற்பதில்லை. தேவையற்ற வன்முறைகளுக்க தீ மூட்டுகின்றன. குறிப்பாக அண்மைக் காலங்களில் சிங்களவர்கள் மீதான தாக்குதல்களும், அண்மைய இல

## விழலுக்கு நீர்ப்பாய்ச்சல்

ங்கை வங்கி மீதான தாக்குதலும் யாருக்கு பயனளிக்கின்றன, யாருக்குக் கேடாக முடிகின்றன என்பதையிட்டு நாம் சிந்திக்க வேண்டும். இத்தகைய செயல்களால் நமது தேசியப் பிரச்சினையின் தீர்வு எவ்வகையிற் பயன்பெறும் என்று நமது ஊடகங்கள் நினைக்கின்றன? சிங்களத் துவேஷமான உளறல்களுக்கும் வன்செயல்கட்கும் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள் கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தமிழக ஏடுகள் கொடுப்பதாக நான் நம்பவில்லை. இந்தத் தகவல்களால் தமிழர்கள் மகிழ்வார்களாக இருந்தால் அவர்கள் இன்னும் முப்பதாண்டுகட்குத் தமிழகத்தின் அயோக்கியத் தலைமைகளிடம் ஏமாற ஆயத்தமாக உள்ளனர் என்றே சொல்ல வேண்டும். தமிழக அரசியல் தலைமைகளின் நாடகங்களைப் பற்றி நமது மக்கள் அறிவது கூட முக்கியமானது. நமது ஊடகங்கள் அதைச் சொல்வதில்லை.

இன்னொருபுறம் மேற்கூறியவாறான விடயங்கட்கு நமது தமிழ் நாளேடுகள் வழங்குகின்ற முக்கியத்துவம், தென்னிலங்கையின் பேரினவாதிகளின் கவனத்தை ஈர்க்கின்றது. இவ்வாறான விடயங்களை அவர்கள் தமிழக-தமிழீழவாதச் சதி என்று சித்தரிக்கிறார்கள். நியாயமற்ற ஒவ்வொரு வன்செயலும், சிங்களப் பகைமையான கருத்தும் சிங்கள் மக்கள் நடுவே தமிழர் பற்றிய ஐயங்களையும், வெறுப்பையுமே தூண்டிவிட வல்லன. இன்று முழுச் சர்வதேசமும் சிங்கள மக்களுக்கு எதிராகச் சதி செய்கின்றது என்ற மாயையை வளர்த்து அதன் மூலம் தன்னைத் தக்க வைக்க முயலுகிற மகிந்த சிந்தனை ஆட்சிக்கு தமிழகத்தின் சுயலாப அரசியல் வாதிகளின் செயல்களும் அவற்றுக்கு நமது நாளேடுகள் வழங்குகின்ற முக்கியத்துவமும் உதவுகின்றன.

இந்தப் பயனற்ற காரியங்களை விடுத்துத் தமிழ் மக்கள் தமது நிலைமையையும் தமது தேவைகளையும் சரிவர அறியவும் தமக்கான அரசியற் போராட்டப் பாதையை வகுக்கவும் நமது தமிழ் ஊடகங்கள் உதவ வேண்டும். தமிழகச் செய்திகட்கு நாம் வழங்கும் முக்கியத்துவம் போல தமிழக ஏடுகள் நமது செய்திகட்கு வழங்குவதில்லை. இங்கே என்ன நடக்கிறது என்றே பலருக்குத் தெரியாது. எனவே உண்மை நிலைமைகளைத் தமிழகத்திற்குத் தெரியப்படுத்தும் முயற்சிகளில் நமது ஊடகங்களில் இறங்க வேண்டும் என்பதுடன் தமிழகத்தின் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை பிரச்சினைகளுக்கு உரிய முக்கியத்துவம் தரப்படல் வேண்டும். அண்மைய காலமாக இடம்பெறும் கூடங்குளம் மக்கள் போராட்ட செய்திகளில் மக்களின் போராட்ட தீரமும் தமிழக அரசின் அடக்குமுறையும் படுகொலைகளும் நமது ஊடகங்களால் இருட்டடிப்பு செய்யப்பட்டமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியன.

தமிழகத்தின் அரசியற் கோமாளித்தனங்கள் சிலருக்கு ஒரு நிமிட நேரக் கிறுகிறுப்பை ஊட்டலாம். அதன் பிறகு அதனால் ஒரு பயனும் கிடையாது. நமக்கு பேச, சிந்திக்க, நிறைவேற்ற நிறைய விடயங்கள் உள்ளன. இனியேனும் அவற்றைப் பற்றி சிந்திப்பது நல்லது. உணர்ச்சிவசமான குறுந் தமிழ்த் தேசியவாத அரசியலுக்கு அப்பால் அறிவு பூர்வமான, அர்த்தமுடைய, யதார்த்தத்திற்குப் பொருந்தி வரக்கூடிய 'மக்கள் அரசியலை' பேச முன்வரல் வேண்டும்.

திருமுருகன்

# வவுனியா நகரசபைத் சுகாதாரத் தொழிலாளர் போராட்டமும் வெற்றியும்

வவுனியா நகரசபைத் சுகாதாரத் தொழிலாளர்கள் தமது தொழில் உரிமைகள் மறுக்கப்பட்டதையடுத்து அனைத்து சுகாதாரத் தொழிலாளர்களும் ஒன்றினைந்து கடந்த வருட நடுப்பகுதியில் ஐந்து நாட்கள் விட்டுக் கொடுக்காத போராட்டம் நடாத்தினர். அதன் மூலம் தமது கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளனர். மேலதிகாரி ஒருவரின் தகாத நோக்கத்திற்கு இணங்க மறுத்த பெண் தொழிலாளி ஒருவருக்கு இடமாற்றம் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போராட்டத்தின் பின்பு அப்பெண் தொழிலாளியின் இடமாற்றம் இரத்துசெய்யப்பட்டது. அத்துடன் ஆறு வருடங்களுக்கு மேலாக தொழில் செய்து வரும் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாது இருந்து வந்ததுஇ ஆனால் இப்போது ஐம்பது பேருக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொழிலாளர்களின் நலன்புரி விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட 14 990 280. ரூபா நிதியானது ஒரு வருடத்திற்கு மேல் அதற்குரிய வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படாது இருந்து வந்தது. ஆனால் இப்போராட்டத்தின் பின்பே அப்பணத்தினால் தொழிலாளர்களுக்கான ஓய்வு அறை, குளியல் அறை என்பன கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரை காலமும் அப்பணம் வெறுமனே இருந்ததா? அல்லது எங்காவது சென்று வந்ததா? எவ்வாறாயினும் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு பின்பே மேற்படி பணம் பயன்படுத்தப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆட்சி செலுத்தும் நகர சபை நிர்வாகத்தில் தமிழ் சுகாதாரத் தொழிலாளர்கள் தமது உரிமைகளைப் பெற ஐந்து நாட்கள் போராட வேண்டியிருந்தது. இது எதனைக் காட்டுகின்றது என்றால், எவ்வளவுக்கு தமிழ்த் தேசியம் பற்றி உரத்து குரல் கொடுத்தாலும் தமிழர்கள் மத்தியில் பணக்கார தமிழர் ஏழைத் தமிழர், உயர்சாதித் தமிழர் தாழ்ந்த சாதித் தமிழர், முதலாளித் தமிழர் தொழிலாளித் தமிழர் என்ற வேறுபாடு இருந்து வருவதைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நிருப்பித்துள்ளனர்.

# அந்நியர்களுக்கு தாரை வார்க்கப்படும் காணிகள்

மகிந்த சிந்தனை ஆட்சியின் கீழ் தொடர்ந்து இந்திய அமெரிக்க பிரித்தானிய, சீன மற்றும் அந்நிய நாடுகளின் கம்பனிகளுக்கு காணிகள் விற்கப்பட்டும் நீண்டகால குத்தகைக்கும் (99 வருடங்களுக்கு) கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்நிய சக்திகளின் ஊடுருவல், தலையீடு என மேடைகளில் உரத்துக் குரல் கொடுத்துக் கொண்டு அதே அந்நிய சக்திகளுக்கு வளமிக்க பயன்தரும் காணிகள் தாரை வார்க்கப்படுகின்றன. தலைநகரில் மட்டுமன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு தேவைகளுக்காக அவை வழங்கப்படுகின்றன.

மீரிகம பகுதியில் 122 ஏக்கர் காணியை பிரித்தானிய பல்கலைக்கழகமொன்றிற்கு 99 வருட குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. தனியார் பல்கலைக்கழகம் வேண்டாம், அந்நியப் பல்கலைக்கழகம் வேண்டாம் என மாணவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், பொதுமக்கள் போராடிவரும் இத்தருணத்திலேயே பிரித்தானியப் பல்கலைக்கழகத்திற்கு 122 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. எனவே உயர் கல்வி முழுமையாகத் தனியார் மயமாக்கப்படுவதும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் பெட்டிக்கடைகள் போல் பெருகப்போவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதே வேளை கொழும்பு 07 ஹோர்டன் பிளேஸில் 112ம் இலக்கத்தில் 122 பேர்ச் காணி சீனாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் காரியாலயம் அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பணிப்புரையின் படி வரிவிலக்குடன் சீனாவுக்கு விற்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் வளமான காணிகள் அந்நியக் கம்பனிகளுக்கும் பல்தேசிய நிறுவனங்களுக்கும் விற்கப்பட்டு 99 வருட குத்தகைக்கு விடப்படுவது ஏற்கனவே இடம் பெற்று வந்ததாகும். அதேவேளை வடக்கு கிழக்கின் நிலங்கள் காணிகள் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்காகவும் இராணுவ நிலைகொள்ளலுக்காகவும் அபகரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிட வேண்டியதாகும். அரச நிலங்களாயினும் தனியார் நிலங்களாயினும் இன்றைய அரசாங்கம் கேள்வி நியாயமின்றி தமது விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு அத்துமீறியும் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமலும் கையாண்டு வருகின்றது. இதுவே ராஜபக்ஷ சகோதரர்களின் சர்வதிகார ஆட்சியின் போக்காகும்.

# அதிகரித்துச் செல்லும் அடக்குமுறைச் சட்டங்கள்

## தடுப்பு காவலை 48 மணித்தியாலம் வரை நீடிக்கும் புதிய திருத்த சட்டம்
## பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய திருத்த சட்டம்

இதுவரை காலமும் இலங்கையின் குற்றவியல் நடபடிமுறை கோவையின் பிரிவுகளுக்கு அமைய குற்றவில் குற்றமொன்றுக்காக முன் அனுமதி இன்றி கைது செய்யப்படும் குற்றவாளியொருவரை 24 நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே பொலிஸார் தன்னிச்சையாக தமது தடுப்புக்காவலில் வைத்திருக்கலாம். மேலும் கைது இடம்பெற்று 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் குறித்த நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட நீதவான் நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்படல் வேண்டும். மேலதிகமாக தடுத்து வைத்து விசாரணை செய்ய வேண்டுமானால் நீதவானின் முன் அனுமதியைப் பெற வேண்டும். அவ்வாறில்லாமல் ஒருவரை நீதவானின் முன்னனுமதியின்றி 24 மணித்தியாலங்களுக்கு மேல் தடுத்து வைப்பது என்பது அரசியலமைப்பு உறுதி செய்யும் அடிப்படை உரிமையை மீறுவதாகும். தமது ஆட்சி அதிகாரத்திற்கு எதிரான அரசியல் சக்திகளையும் போராடுவோரையும் தடுத்து வைத்துப் பழிவாங்கிக் கொள்ள இத்தடுப்புக்கால எல்லை நீடிப்பு தாராளமாக உதவப்போகின்றது. உண்மையில் இது பொலிஸ் நிலைய சித்திரவதைகளுக்கு உரிய காலத்தை வழங்கி, பொலிஸாருக்கு ஏலவே சட்டத்தால் சீவி விடப்பட்டுள்ள கொம்பை கூர்மையாக்கி விட்டுள்ளது.

குற்றவியல் நடபடிமுறைக்கான திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு சில நாட்களின் பின்னர் தீவிரவாத பரவலை தடுக்கின்றோம் என்ற பெயரில் பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய திருத்த சட்டத்தினை மகிந்தரின் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. இது மீண்டும் மக்களின் அடிப்படை உரிமைகள் மீது விழுந்த அடியாகக் காணப்படுகின்றது. புதன்கிழமை அன்று(2013.02.06) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவிருந்த இச்சட்டமூலத்தில் பயங்கரவாதம் என்பதனை இச்சட்டம் எவ்வாறு வரையறுக்கின்றது என்பது தொடர்பில் எதிர்க் கட்சிகள் பலத்த எதிர்ப்பை வெளியிட்டன. இவ்வெதிர்ப்பினால் வெறும் ஒரு நாள் மட்டுமே மீண்டும் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் இச்சட்டமூலத்தை விவாதிக்க விட்டதுடன், கூட்டத்தில் ஆலோசிக்கப் படாததும் முன்மொழியப்படாதுமான விடயங்களையும் உள்ளடக்கி வெள்ளியன்று(2013.02.08) தனது கைப்பொம்மை பாராளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டு இந்த அரசு சட்டமூலத்தினை சட்டமாக்கியுள்ளது.

இப்புதிய பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்கும் சட்டத்தின்படி அரசியல், மத ரீதியான கருத்தைப் பரப்பும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் போரில் பங்கு கொள்ளாதவர்களுக்கு காயம் ஏற்படுத்துதல், கொலை செய்தல், சித்திரவதை செய்தல் அரசு மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களுக்கு அழுத்தம் கொடுத்தல், அச்சுறுத்தல் விடுத்தல் பயங்கரவாதமாகக் கருதப்படும். இச்சட்ட மூலத்தின் ஏற்பாடுகள் நேரடியாகவே மக்களினதும் அரசியல் கட்சிகளினதும் அரசியல் உரிமைகளையும், கருத்துச் சுதந்திரம் மற்றும் மதத்தை பின்பற்றுவதற்கான மக்களின் அடிப்படை உரிமைகளையும் இல்லாமல் செய்கின்றது.

முன்னைய 48 மணித்தியால தடுப்புக்காவல் திருத்தச் சட்டம் வருவதற்கு முன்னரே பொலிஸார் சாதாரண பொது மக்களை ஏதேனும் சாதாரண குற்றங்களுக்காக கைது செய்தாலே 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் ஆஜர் செய்யவேண்டும் என்ற நடைமுறையைக் கடைபிடிப்பதில்லை. இதில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் அரசியல் காரணங்களுக்காகவும் கைது செய்யப்படுபவர்கள் அரச பயங்கரவாதத்தினால் படும் துன்பம் உலகறிந்தது. கடும் கிரிமினல் குற்றங்களுக்காக ஆதாரத்துடன் கைது செய்யப்படும் குற்றவாளிகள், அரசியற் புள்ளிகள், பணபலம் படைத்தோர், தொழில் அதிபர்கள் இந்நிலைகளுக்கு முகம் கொடுப்பதில்லை என்பதையும் உலகறியும்.

தொடரும் இத்தகைய அடக்குமுறைச் சட்டங்களின் கீழ் இனிவரும் நாட்களில் கைதுகளும் பொலிஸ் அடக்குமுறைகளும் உச்சநிலையைத் தொடலாம். அடக்குமுறைக்கு சட்டரீதியான அனுமதியில் குழப்பம் அல்லது தடை காணப்பட்டால், தமது இருப்பை தக்கவைக்க தேவையான அளவு இது போன்ற அடக்குமுறைச் சட்டங்களை மகிந்த சகோதரர்கள் தமது கைப்பொம்மை பாராளுமன்றில் நிறைவேற்றிக் கொள்ளலாம். அவ்வாறான அடக்குமுறை சட்டங்கள் தொடர்பில் அரசியலமைப்பியல்பு பற்றி கேள்வி எழும் போது தமக்கேற்ற தீர்ப்பைப் பெற தேவையான நீதித்துறையும் தயார் நிலையில் உள்ளது. மக்கள் எழுச்சிகளை அடக்கவே கண்ணீர் புகைக் குண்டுகள், லத்திகள், இறப்பர் தோட்டாக்கள், தடுப்புக்கவசங்கள் உட்பட விசேட ஆயுத தளபாடங்கள் பெருமளவில் இறக்கப்பட்டிருக்கின்றன என்பதை வெளிப்டையாகக் கூறி அரசாங்கம் நாட்டு மக்களிடம் சண்டித்தனம் காட்டுகின்றது.

அரச யந்திரத்தின் அடக்குமுறைக் கரங்களை பலமூட்டியுள்ள இச்சட்டங்களின் கீழ் பாதிக்கப்பட போகின்றவர்களுக்கு சட்டத்தின் கீழ் பெறக்கூடிய குறைந்தபட்ச நிவாரணங்களுக்கான வழிகள் யாவுமே மூடப்பட்டு விட்டன. மகிந்த சகோதரர்கள் தம்மை தற்காத்துக் கொள்ளவும் தமது கொள்ளையடிப்பை இலகுபடுத்திக் கொள்ளவும் அடக்குமுறைச் சட்டங்களை விரிவுப்படுத்துவர் என்பதில் ஐயமில்லை.

அரசாங்கம் தனது அரச யந்திரத்தை அடக்குமு றைச் சட்டங்களாலும் ஆயுத வன்மையாலும் பலப்படுத்தி வருகின்றது. இந்த ஃபாசிச குடும்ப ஆட்சி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என்ற பேதமின்றி தமக்கெதிரானக எழக்கூடிய சகல மக்கள் எழுச்சிகளையும் எதிர் கொள்ள தயாராகி வருகின்றது. இந்நிலையில் மக்கள் முன்னுள்ள கேள்வி "நாம் என்ன செய்யப் போகின்றோம்?" என்பதே.

# மலையக சமூகத்தை விளங்கிக் கொள்ளலும் வினையாற்றலும்

**மாற்றம் எது?**

சு. விஜயக்குமார்

மனிதன் என்றாலும் சமூகம் என்றாலும் மாற்றமின்றி ஒரே நிலையில் நிற்பதில்லை. சமூகம் மனிதர்களினால் இயக்கப்படுகிறது. மனிதர்கள் புறக் காரணிகளினால் இயக்கப்படுகிறார்கள். வேறு வகையில் சொல்வதானால் மனிதர்கள் சமூகத்தினால் இயக்கப்படுகின்றார்கள். இந்த இயக்கம் என்பது மாற்றத்தையே குறித்து நிற்கிறது. மாற்றம் தொடர்ச்சியாக நிகழ்ந்துகொண்டே இருக்கும். ஒவ்வொரு மனிதனும் பிரிக்க முடியாத அகப், புறக்காரணிகளின் தாக்கத்திற்கு உட்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறான். இந்த இயக்கம் மனிதனிலும் சமூகத்திலும் இடையறாது மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை ஒவ்வொருவரும் சாதகமான மாற்றங்கள் என்று எதிர்நிலையான மாற்றங்கள் என்று கூறுகின்றனர். மலையகத்தில் இடம்பெற்று வரும் பாரிய நீர்மின் உற்பத்திச் செயற்பாடுகள் ஒருவருக்கு அபிவிருத்தியாகவும் இன்னுமொருவருக்கு அழிவாகவும் தெரிகின்றன.

மலையக ஆசிரியர் நியமனங்கள் அரசியல்வாதிகளின் தயவாற் கிடைத்ததாக ஒருவரும் பல அரசியல் பொருளாதார சமூக காரணிகளால் அரசு அப்படியொரு நியமனத்தை வழங்க நிர்ப்பந்திக்கப்பட்டதாக இன்னொருவரும் விளக்கம் தருகின்றனர். இந்த மாறுபட்ட விளக்கங்கள் விடைகள் வெளிப்பட காரணம் என்ன? மக்களின் வாழ்நிலை, கல்வி, அரசியல் அதிகார மையங்களின் செயற்பாடுகள், அதிகார நிலைகள் மீதான சார்பு, மனித அடையாளங்கள், வரலாறு, கருத்தியல், ஊடக பரப்புரைகள் என பல்வேறு காரணிகள், சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை சாதக மாற்றங்களா அல்லது எதிர்நிலை மாற்றங்களா என ஒருவர் மதிப்பிடுவதற்கான உரைகற்களாக இருக்கின்றமையே இதற்கான காரணமாகும். எனவே சார்பு நிலையில் நின்று கொண்டே மாற்றங்களின் சாதக எதிர்நிலை மாற்றங்கள் தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

மலையகத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை அளவிடுவதற்குப் பொதுவான அளவீடு ஒன்று இருக்க முடியாதா? "மாற்றம் எவ்வளவு தூரம் மக்கள் சார்பானது என்ற அளவீட்டைப் பயன்படுத்தலாம்". எனினும் அதுவும், மறுக்க முடியாதவாறு, சார்பு நிலைப்பட்டதே. ஆனால் மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்றவகையில் அவர்களின் வரலாறு, அரசியல், பொருளாதார வாழ்நிலை, புவியியல் காரணிகள் என பல்வேறு காரணிகளை உள்வாங்கி அவர்களின் முன்னோக்கிய அசைவியக்கத்திற்கு வழிவகுக்கும் மாற்றங்களை நாம் சாதகமான மாற்றங்கள் எனலாம். இதன் போது, மேலோட்டமான காரணிகளை கொண்டு மக்கள் சார்புத் தன்மையை மதிப்பிட முடியாது. குறித்த மாற்றங்கள் அடிப்படையில் எதனை வேண்டி நிற்கின்றன என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பது அவசியமானதாகும்.

மேல் கொத்மலைத் திட்டத்தினால் லயத்தில் வாழ்ந்த சில மக்களுக்கு தனி வீடு கிடைக்கிறது. வீதிகள் அகலப்படுத்தப்படுகின்றன. பல பொது வசதிகள் அதிகரிக்கின்றன. இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கிறது என்பன வெளிப்படையாக நமக்கு தெரியும் மாற்றங்கள். எடுத்த எடுப்பில் இவை சாதகமான மாற்றங்கள் எனத் தெரிகின்றன. எனினும் அவற்றை மட்டும் வைத்து அத் திட்டத்தினை மதிப்பிடுவது அதன் உண்மையான மறுபக்கங்களைப் பார்ப்பதைத் தவிர்த்துவிடும். உண்மையில் அம் மறுபக்கங்களே




குறித்த திட்டத்தின் உண்மையான நோக்கங்களாகவும் இருக்கின்றன. தேசிய மின் தொகுதிக்கு 150 மெகவாட் மின் சக்தியை இணைக்கும் மேல் கொத்மலைத்திட்டம், அண்மைக்காலமாகப் பாரிய நீர்த்தேக்கங்களை அமைத்து மின் உற்பத்தி செய்வது உலகில் தவிர்க்கப்பட்டு வரும் நிலையில், இலங்கையில் எத்தனையோ நீர்வீழ்ச்சிகள் இருந்தும் மலையக மக்கள் செறிந்து வாழும் தலவக்கலை போன்ற முக்கியப் பிரதேசத்தில் தலவாக்கலை நகரத்தை அழிக்கும் விதத்தில் (முற்போக்கு அரசியல் சக்திகளின் தலைமையிலான போராட்டம் காரணமாக திட்டம் பின்பு மாற்றப்பட்டது) மேல் கொத்மலைத் திட்டம் ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்ற கேள்வியானது, மேலே கூறிய விதமாக மேலோட்டமாகப் பார்த்துவிட்டு அந்தத் திட்டம் மக்கள் சார்பானது என்ற முடிவிற்கு வருவதன் அபாயத்தை எடுத்துக் காட்டுகிறது.

சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு மலையக மக்களின் குடிப் பரம்பலைச் சிதைப்பதும் அப்பிரதேசத்தை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகனடப்படுத்தி மலையக மக்களை இராணுவ அடக்கு முறைக்குள் வைத்திருப்பதுமான நோக்கங்கள் மேல் கொத்மலை திட்டத்தின் பின்னணியில் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக இப் பிரதேச மண்ணின் இயற்கையான ஈரலிப்பு தன்மையில் காரணமாக மேல் கொத்மலை நீர்தேக்கமானது நீண்டகாலத்தில் மண் சரிவுகளுக்கும் ஏனைய இயற்கை அனர்த்தங்களுக்கும் உட்படும் வாய்ப்பு உள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் சிறு நில அதிர்வுகள் இப்பிரதேசங்களில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வருகின்றன. எனவே மேல் கொத்மலைத் திட்டம் மலையக மக்களுக்கு சார்பானதா என்பது தொடர்பாக இந்த விடயங்களை வைத்து நோக்கும் போது, அது மக்கள் சார்பாக இல்லை என்ற முடிவிற்கு ஒருவர் வரமுடியும்.

ஒருவர் அதனை மறுப்பாராயின் அது அவரின் மக்கள் சார்பற்ற தன்மையின் பிரச்சினையாகும். அரசியல் சந்தர்ப்பவாதம், சுய இலாபம் அல்லது அறியாமையின் விளைவாகவும் இது ஏற்படலாம். மலையக மக்களிற் பலர், இவ்வாறான அடிப்படையில் மலையக மக்களுக்கு எதிரான நடவடிக்கைளை எதிர்த்துப் போராட முன்னிற்காமைக்கு மாற்றம் தொடர்பாக அவர்களிடம் ஏற்படுத்தப்பட்டுள்ள கருத்துருவாக்கம் ஒரு முக்கிய காரணமாகும். இது தொடர்ச்சியாகப் பிற்போக்கு அரசியல் தொழிற்சங்க தலைவர்களாலும் அவர்களின் கையாட்களாலும் பல மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மலையகத்தை விளங்கி வினையாற்ற முனையும் எவரும் மாற்றங்களின் மக்கள் சார்புத் தன்மையை மதிப்பிடுவதற்கான வல்லமையைப் பெற்றுக் கொள்வது அடிப்படைத் தேவையாக உள்ளது.

# மாத்தளை இயற்கை அனர்த்தம்

## பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும்!



**பெருந்தோட்டங்களை பாதுகாக்கும் மக்கள் ஒன்றியம்**

அன்மைய காலங்களில் மலையகம் உட்பட இலங்கை முழுதும் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளதுடன் மழையும் இடைவிடாது பெய்துகொண்டே இருக்கின்றது. முகாம்களில் தங்கி இருப்போருக்கான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அதற்கான நிதியினை ஒதுக்கியுள்ளதுடன் மாவட்ட செயலாளர்களுக்கூடாக அவற்றை பகிர்ந்தும் வழங்கி வருகின்றது. அத்துடன் பாதிக்கப்பட்டோரை சந்தித்து தனிப்பட்ட ரீதியிலும் பலர் உதவி வருவது பாராட்டத்தக்கது.

அவ்வகையில் பெருந்தோட்டங்களை பாதுகாக்கும் மக்கள் ஒன்றியத்தின், மாத்தளைப்பிராந்திய அமைப்பெனும் வகையில் நாம் சம்பவ இடங்களுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு முகாம்களில் தங்கியிருக்கும் மக்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடினோம். மாத்தளை மாவட்டத்தை பொருத்தவரையில் உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவு, இறத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு, மற்றும் அம்பகங்கோரளை பிரதேச செயலாளர் பிரிவு, கலேவல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாத்தளை புறநகர்ப்பகுதிகளிலும் உள்ள மக்கள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள அனைவருக்கும் பாதுகாப்பான, நிலப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட பகுதிகளில் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு எதிர்காலங்களில் வழங்கப்பட வேண்டும் என்பதே மிகமுக்கியக் கோரிக்கையாகும்.

மேலும் பாதுகாப்புக்கருதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளவர்களை சில அதிகாரிகள் முறையற்ற வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்தி தம்மை இழிவுபடுத்துவதாக மக்கள் எம்மிடம் முறையிட்டனர். இது "மரத்திலிருந்து விழுந்தவனை மாடு முட்டிய கதையாக" காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களை புண்படுத்தும்படியான வார்த்தைகள் பேசாது பொறுப்புடன் நடத்த வேண்டும் என்பதுடன் அவ்வாறான செயல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். மேலும் பாதிக்கப்பட்டுள்ளோரில் பெரும்பாலானோர் பாடசாலைகளிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர், பாடசாலை விடுமுறை முடிந்து பாடசாலைகள் இயங்க ஆரம்பித்துள்ள நிலையில் மக்களது நிலை கேள்விக்குறியாக உள்ளது. இவ்விடயம் தொடர்பாக கல்விக்காரியாலயங்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. உடனடியாக இவ்விடயம் கவனத்தில் எடுக்கப்பட்டு மாணவர்களின் கல்விக்கும் பாதிப்பின்றி மக்களுக்கும் பாதிப்பின்றி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும். பிள்ளைகளின் கல்வி தொடர்பாகவும் அக்கறை செலுத்த வேண்டியுள்ளதுடன் எவ்வித பாதுகாப்பு உத்தரவாதமும் இன்றி மக்களை குடியிருப்புகளுக்கு அனுப்ப முடியாது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஒரு அடி நிலம் கூட சொந்தமில்லாத பெருந்தோட்ட மக்கள் சுமார் 200 வருடங்களாக தமது கடுமையான உழைப்பால் பெருங் காடுகளை பெருந்தோட்டங்களாக்கியவர்கள். இப்பெருந்தோட்டங்கள் இன்று வரை அரச நிர்வாகத்திற்குள் உள்வாங்கப்படாதவைகளாகும். இவை கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழேயே நிர்வகிக்கப்படுகின்றன. உள்ளூராட்சி சபைகள் சட்டத்திற்கமைய பெருந்தோட்டங்கள் உள்ளூராட்சி சபை நிர்வாகத்தில் உள்ளடங்காது. இதனால் அரசின் அனர்த்த நிவாரணம் போன்ற அரசின் ஏனைய மக்களுக்கு கிடைக்கும் உதவிகள் இப்பெருந்தோட்டங்களுக்கு வழங்கப்படுவதில்லை. அரசின் தேசிய அபிவிருத்தி திட்டங்கள், தேசிய வீடமைப்பு போன்றனவும் தேசிய சுகாதார சேவையும் பெருந்தோட்டங்களுக்கு உரியனவல்ல. பெருந்தோட்டங்களும் அதன் தொழிலாளர்களும் அவர்களின் வாக்குரிமை தவிர்த்து உண்மையில்

>>12

புதிய நீதி
Puthiya Neethi
පුදිය නීදි
முரசம் 02, ஜனவரி-பெப் 2012, பக்கம் 16, விலை ரூ.30. முழக்கம் 03
இல. 15/4இ மகிந்தாராம வீதி, கல்கிசை
தொ.பேசி: 0716 745 642, 0779 774 427 தொ.நகல்: 0112 473 757
WEB: www.ndpsl.org Email: puthiyaneethi2012@gmail.com

# அரசாங்கமும் அரசியல் தீர்வும்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை என்பது உலகறிந்த விடயம். தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களினதும் ஏனைய சிறுபான்மை சமூகங்களதும் இன, மொழி, மத, பிரதேச அடிப்படையிலான முரண்பாடுகள் பிரச்சினைகளை உள்ளடக்கியதே தேசிய இனப்பிரச்சினை என்பதாகும். இத்தேசிய இனப் பிரச்சினை கடந்த நூற்றாண்டில் இருந்து வளர்க்கப்பட்டு வந்த ஒன்றாகும். ஒவ்வொரு கால கட்டத்திலும் கொலனிய ஆட்சியாளர்களும் அதன் பின் ஆட்சி அதிகாரம் பெற்ற நிலவுடைமை வழிவந்த முத லாளித்துவ பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் தேசிய இனப்பிரச்சினையை வர்க்க சக்திகளைப் பிரித்தாளும் சூழ்ச்சி அடிப்படையில் கையாண்டு வந்துள்ளனர். பாராளுமன்ற ஆட்சி அதிகாரத்தைப் பெறும் வழிமுறைகளில் ஆளும் பேரினவாதக் கட்சிகள் தேசிய இன முரண்பாட்டைப் பயன்படுத்தி வந்தனர்.

அதன் பிரதான பகுதிகளே வடக்குக் கிழக்குத் தமிழர் மீதான பாகுபாடு, புறக்கணிப்பு, இனவெறி, இனவன்முறை என்பன. இவற்றின் வளர்ச்சி இராணுவ ஒடுக்குமுறை, யுத்தம் என விரிவாக்கப்பட்டு வந்தது. அதேவேளை மலையகத் தமிழ் மக்கள் வர்க்க, இன அடிப்படைகளில் ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். அவ்வாறே முஸ்லீம் மக்களும் மத, பிரதேச ரீதியில் புறக்கணிப்புகளுக்கும் இன்னல்களுக்கும் உள்ளாகி வந்துள்ளனர்.

தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட அகிம்சை மற்றும் ஆயதப் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டன. இறுதியாக 2009 மே 19ம் திகதியுடன் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு, யுத்தம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலே வெற்றி கொள்ளப்பட்டதாக பிரகடனம் செய்யப்பட்டது. பௌத்த சிங்களப் பேரினவாதம் வெற்றிப் பெருமிதத்துடன் அதனையே ஒரு வலிமையான திரையாக்கி, அதற்குப் பின்னால் மகிந்த ராஜபக்ஷ சகோதரர்களின் சர்வாதிகார ஆட்சியாக யுத்த வெற்றியை விரிவுப்படுத்திக் கொண்டது. ஆனால் இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் ஒருசில வாரங்கள், நாட்களில் அழிவுற்றனர். எஞ்சியோர் அவலங்களுக்கு மத்தியில் எஞ்சி நின்று இன்றும் துன்பதுயரங்களின் மத்தியில் அல்லற்பட்ட வாழ்வை வாழ்ந்து வருகின்றனர்.

இன்னும் இரண்டு மாதங்களில் 2009 மே 19ம் திகதி பெற்ற இராணுவ வெற்றியின் நான்காவது ஆண்டு விழாவினை ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும் கொண்டாட ஆயத்தமாகி வருகின்றனர். ஆனால் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது தொட்டோ நினைத்ததோ கூடப் பார்க்கப்படவில்லை. இது தற்செயலான ஒன்றல்ல. இது ராஜபக்ஷ சகோதரர்களது ஆட்சியினது திட்டமிட்ட தீர்வு மறுப்பின் உறுதியான வெளிப்பாடாக இருந்து வருகிறது. அதாவது அரசியல் தீர்வு என்ற ஒன்று தேவை இல்லை. இராணுவ நிர்வாகத்தின் கீழ் வடக்கு கிழக்கு இருப்பது நாட்டின் பாது காப்பிற்கு அவசியம். அதன்கீழ் தாங்கள் கூறும் "வடக்கின் வசந்தம்", "கிழக்கின் உதயம்" என்பனவற்றின் ஊடான அபிவிருத்தி என்பது மட்டும் தமிழ் மக்களுக்கு போதுமான துமாகும். மீள்குடியேறிய மக்களின் வாழ்வைப் புனரமைத்துக் கொடுப்பதோ, உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரிலும் முகாம்களுக்கு என்ற பெயரிலும் இராணுவம் உள்ளிட்ட முப்படைகளும் பிடித்து வைத்திருக்கும் நிலங்கள், வீடுகள், கடலோரங்கள் மற்றும் வாழ்வாதார மையங்களை கையளிப்பதோ அரசாங்கத்தின் கவனத்திற்கோ கவலைகட்கோ உரிய விடயங்கள் அல்ல. அதேபோன்று சிறைகளில் தடுப்பு முகாம்களில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டோரின் விடுதலையோ அன்றி காணாமல் போனோர் பற்றிய அக்கறையோ ஆட்சியினரின் அக்கறைக்குரிய விடயங்கள் அல்ல. ஆனால் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களில் கடலோரங்களில் தூரநோக்கிலான திட்டமிட்ட சிங்கள மக்களுக்கான, இராணுவத்திற்கான குடியேற்றங்களும் நில நீர் அபகரிப்புகளும் இடம்பெற்று வருகின்றன. இது தேசிய இனப்பிரச்சினையின் மையப் புள்ளியாகும். இன, மொழி பிரதேச தனித்துவங்களை சிதைத்துச் சிதறடிக்கும் நோக்கமுடையதாகும். பாரம்பரிய பிரதேசங்களில் இனவிகிதாசாரத்தை திட்டமிட்டே மாற்றியமைப்பதாகும். இதுபோன்ற பல்வேறு செயற்பாடுகள் படையினரதும் பொலீஸ் நிர்வாகத்தினதும் துணையுடன் மேற்கொள்ளப்படுகிறது.

இத்தகைய சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஏனைய தமிழ்த் தரப்புக் கட்சிகள் நேர்மையான இடதுசாரிக் கட்சிகள், அரசியல் தீர்வைக் கொண்டு வருமாறு வற்புறுத்துகின்றனர். பெயரளவில்தானும் இந்தியா, அமெரிக்கா, மேற்குலக நாடுகள், ஐ.நா.சபை போன்றனவும் அரசியல் தீர்வைக் கொண்டுவருமாறே குரல் வைக்கின்றன. அவர்கள் தத்தமது உள்நோக்க அடிப்பயில் கூறினாலும் அரசியல் தீர்வு என்பது நாட்டிற்கும் தமிழ், முஸ்லிம், மலையக தேசிய இனங்களுக்கும் சிங்கள உழைக்கும் மக்களுக்கு அவசியமானதாகும். உள்முரண்பாடுகளும் உள் உடைவுகளும் இல்லாத ஒரு நாட்டினாலேயே தனது இறைமையையும் சுதந்திரம் சுயாதிபத்தியத்தைப் பேண முடியும். அவை ஆள்வோருக்கும் ஆளும் வர்க்கத்தினருக்கும் மட்டும் உரியவை அல்ல. இறைமையும் சுதந்திரமும் ஜனநாயகமும் மக்களுக்குரியவை. அது ஒரு இனத்திற்கோ மதத்திற்குரிய ஒன்றல்ல. இந்நாட்டின் பல்லினத் தேசியங்களைக் கொண்ட மக்களுக்குரியவையாகும்.

ஆனால் ராஜபக்ஷ சகோதரர்களது ஆட்சி இலங்கையின் தலைவிதியைத் தாங்கள் மட்டுமே தீர்மானிப்பவர்கள் என்ற இறுமாப்பு நிலையில் வைத்து விடயங்களை முன்னெடுக்கின்றனர். ஐ.நா. சபையிலும் அதன் மனித உரிமைகளை பேரவையிலும் ஏனைய சர்வதேச அரங்கிலும் தமது செயற்பாட்டில் தலையிட வேண்டாம் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றனர். அதற்காக இந்தியா, அமெரிக்கா, மேற்குல நாடுகளுடனான கடதாசி விளையாட்டில் சீனத் துரப்புச் சீட்டை வைத்து விளையாடுகின்றனர். இதனால் இந்தியாவும் அமெரிக்க மேற்குலகமும் தாம் நினைத்ததைச் சாதிக்க முடியாது பின்வாங்குவதும் முன்நோக்க முயல்வதாகவும் இருந்து வருகின்றனர்.

அரசாங்கத்திடம் அரசியல் தீர்வுக்கான எவ்வித திட்டமோ தீர்மானமோ இல்லை என்பது அப்பட்டமானதாகும். அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியிடமோ அல்லது ஜே.வி.பி.யிடமோ தீர்வுத்திட்ட ஆலோசனைகள் எதுவும் கிடையாது. அதேபோன்று அரசாங்கத்தில் அங்கம் பெறும் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ்க் கட்சிகளிடமும் தீர்வு பற்றிய திட்டம் கூடக் கிடையாது. அவர்களுக்கு அரசாங்கத்தோடு இருப்பதால் பதவிகளும், பணமும் கொஞ்சம் அதிகாரம் செலுத்த வாய்ப்பும் இருந்தால் அதுவே போதுமானதாகும் என்பதே அவர்களது நிலைப்பாடாகும். இவர்கள் எல்லோரையும் விடச் சோகமானவர்களாகக் காணப்படுவோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாரகும். தாமே தமிழ் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட தலைமையினர் எனக் கூறிக் கொள்வோரிடம் எத்தகைய தீர்வுத் திட்டயோசனைகளை வைத்திருக்கிறீர்கள் என்றால், ஆளுக்கொரு நியாயம் எனக் கூறி அதுவே கொள்கை போன்று நீட்டி வாசிப்பார்கள். அவர்களது ஒரே நோக்கும் போக்கும் எக்காலத்திலும் பாராளுமன்றப் பதவிகள் பெற்று சுகம் பெறுவதுடன் தமிழ் மக்களின் பாரம்பரிய பழைமைவாத ஆதிக்க அரசியல் சக்தியாக இருக்கவேண்டும். அதன் இருப்பை எப்போதும் தக்க வைத்திருக்க வேண்டும் என்பதாகும். இதனையே சில தரப்புக்கள் தமிழ்த் தலைமைகளின் ஐக்கியம் எனக் கூறி பாராமன்றப் பதவிகளில் பங்கு கேட்டு நிற்கிறார்கள்.

இவை அனைத்திற்கும் அப்பால் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியிலும் ஏனைய முஸ்லீம், மலையகத் தேசிய இனங்களின் மத்தியிலும் புரட்சிகர கொள்கை நடைமுறைகளுடனான தலைமைத்துவங்கள் உருவாக வேண்டும். அவை அம்மக்கள் மத்தியில் இருந்தே தோன்ற வேண்டும். தூர நோக்கும் யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டவர்களாகவும் இருத்தல் அவசியம். சிங்கள மக்களுக்கு நேசக்கரம் நீட்டக் கூடிய வகையிலான முற்போக்கு ஜனநாயக சிந்தனை கொள்ளக் கூடிய சிங்கள முற்போக்கு ஜனநாயக இடதுசாரிகளை உள்ளடக்கிய சக்திகள் துணிவுடன் அரங்கிற்கு வரவேண்டும். அப்போதுதான் நின்று நிலைக்கக் கூடிய அரசியல் தீர்வுகாணப்பட முடியும். இது எந்தவொரு பேரினவாத தரகு முதலாளித்துவ ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க அரவணைப்பு அரசாங்கத்தின் கீழும் சாத்தியப் படக் கூடிய ஒன்றல்ல.

*ஆசிரியர் குழு*

# உச்சம் நோக்கி பயணிக்கும் சகோதரர்களின் சர்வாதிகாரம்

**இன்று இலங்கையில் மகிந்த சிந்தனை என்பதன் ஊடாக தரகு முதலாளித்துவ ஃபாசிச ஆட்சி இடம்பெறுகிறது. அத்தகைய தரகு முதலாளித்துவமானது ஏகாதிபத்திய உலக மேலாதிக்க சக்திகளோடும். பிராந்திய மேலாதிக்க சக்திகளுடன் இணைந்து நிற்பதனையும் காண முடிகிறது.**

*வெகுஜனன்*



இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் ஆட்சி அதிகாரத்தில் சகலவற்றையும் தீர்மானிப்பவர்களாகவும் செயற்படுத்துவோராகவும் இருந்து வருகிறார்கள். அதற்கு வசதியாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இருந்து வருகிறது. அதற்கு மேலும் வலுச் சேர்த்து தனிநபர் பாசிச சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும் வகையிலேயே அரசியலமைப்பிற்கு பதினெட்டாவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன் மூலம் சகோதரர்களின் குடும்ப ஆட்சியின் சர்வ அதிகார நிலை மேலோங்கி நிற்கிறது. இவர்களுடன் நாட்டின் மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகள் இணைந்து நிற்கின்றன. இதனால் இன்று இலங்கையில் மகிந்த சிந்தனை என்பதன் ஊடாக ஒரு தரகு முதலாளித்துவ ஃபாசிச ஆட்சி இடம்பெறுவது தெளிவாகிறது. அத்தகைய தரகு முதலாளித்துவமானது ஏகாதிபத்திய உலக மேலாதிக்க சக்திகளோடும் பிராந்திய மேலாதிக்கவாதிகளுடனும் இணைந்து நிற்பதனையும் காண முடிகிறது.

இவ்வாறு ஜனநாயகப் போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பாசிச சர்வாதிகரத்துடன் கூடியதரகு முதலாளித்துவ ஆட்சி அதிகாரம் நாட்டு மக்கள் அனைவரையும் வாட்டி வதைத்த வண்ணமே உள்ளன. ஒரு புறத்தில் பொருளாதார நெருக்கடிகளும் அதன் காரணமான பிரச்சினைகளும் வளர்ந்தபடியே உள்ளன. தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் அரசாங்க தனியார்துறையினர் உட்பட உழைக்கும் மக்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் போன்ற அனைத்து தரப்பினரும் பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அதேவேளை தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாது மென்மேலும் இன ஒடுக்குமுறை வெவ்வேறு வடிவங்களில் தமிழ் முஸ்லீம் மலையகத் தேசிய இனங்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டும் வருகிறது. யுத்தத்தால் உயிர் உடைமை இழப்புகள் உட்பட தமது வாழ்வாதாரங்களை இழந்த வடக்கு கிழக்கு மக்கள் குறிப்பாக வன்னிப் பெருநிலத்து மக்கள் ஆட்சியினரால் கவனிக்கப்படாத மக்களாகவே விடப்பட்டுள்ளதுடன் அவர்களின் விளைநிலங்களும் அரசால் அபகரிக்கப்பட்டும் வருகின்றது.

யுத்த முடிவோடு மிக் அலங்காரமாக வாசிக்கப்பட்ட வடக்கின் வசந்தமும் கிழக்கின் உதயமும் இன்று உச்சரிப்பார் இன்றி இருந்து வருகிறது. தேசிய இனப் பிரச்சினை, அரசியல் தீர்வு. அதிகாரப் பகிர்வு என்பனவற்றை மகிந்த சகோதரர்கள் உச்சரிப்பதே இல்லை. அவர்களது தாரக மந்திரமாகக் காணப்படுவது 'ஒரே தேசம், ஒரே மக்கள், ஒரே குரல்' என்பதாகவே க்காணப்படுகிறது. இது பௌத்த சிங்கள நாடு, பௌத்த சிங்கள மக்கள், சிங்கள மொழியிலான தனிக் குரல் என்பதாகவே காட்டப்படுகிறது. இந்நாட்டில் பல்லினத் தேசியங்களையும் பல மதங்களையும் பாரம்பரிய பிரதேசங்களையும் கொண்ட மக்கள் வாழ்ந்து வந்த வரலாற்றுத் தொடர்ச்சியும் அதன் இன்றுவரையான இருப்பும் மறுக்கப்படுகிறது.

இவ்வாறு செய்வதன் மூலம் சிங்கள மக்கள் குறிப்பாக ஏகப் பெரும்பான்மையான, உழைக்கும் மக்கள் திசை திருப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஆளுவோரின் பேரினவாதக் குரல் தமது நலன்களுக்கானவை என்ற போலி நம்பிக்கையில் அவர்கள் இருந்து வருகின்றனர். யுத்தம் முடிவடைந்த பின்னரான கடந்த மூன்றரை வருடங்களில் புலிகளின் தோல்வியையும் தமது வெற்றியையும் பற்றிப் பேசிக் கொண்ட அதே வேளை நாட்டின் உழைக்கும் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. இது இன்று மட்டுமன்றி யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவும் இடம்பெற்று வந்தவையேயாகும். கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் மாறி மாறி வந்த பேரினவாத தரகு முதலாளித்துவ அரசாங்கங்கள் யுத்தத்தின் மீது சிங்கள மக்களின் கவனத்தைத் திருப்பி வைத்துக் கொண்டு தனியார் மய தாராளமய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல்களை பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டுத்தளங்களில் வேரூன்றச் செய்து வளர்த்து வருகின்றன. அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் இந்தியாவும் சீனாவும் மற்றும் சில நாடுகளும் இலங்கைக்குள் தத்தமது நலன்கள் தேவைகள் நாடி ஊடுருவிக் கொள்கின்றன. அன்று ஜே.ஆர் தொடக்கம் இன்றைய எம்.ஆர் வரை அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்தினதும் வழிகாட்டலிலேயே வழிநடந்து வந்திருக்கிறார்கள். அன்றிலிருந்து இன்றுவரை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றனவே இலங்கையின் பொருளாதாரத்திற்கு வழிகாட்டி நிற்கின்றன. இந்த உண்மையைச் சிலர் மறைத்தும் மறுத்தும் மகிந்த சிந்தனை அரசாங்கத்திடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு இருந்து வருவதாகக் கணக்குக்காட்ட முற்பட்டுள்ளனர்.

ஆனால் இன்றைய ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சியானது ஜனநாயகப் போர்வையில் '.'.பாசிச சர்வாதிகாரம்' நோக்கியே சென்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு அவர்களது கைகளில் இருந்து வரும் சக்திமிக்கதாக மாற்றிக் கொண்ட நிறைவேற்று அதிகாரமும், பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் எதனையும் செய்யலாம் என்ற நிலைக்குக் கொண்டு வந்துவிட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அன்றாட பாவனைப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து ஏற்றப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. குறிப்பாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மக்களின் நுகரும் சக்திக்கு அப்பாற்பட்டதாகி வருகின்றன. உதாரணமாக ஒரு கிலோ அரிசி வாங்கி ஐந்து பேர் கொண்ட குடும்பத்தில் ஆக்கப்பட்ட நிலை இன்று அரைக் கிலோ அரிசியுடன் சமைக்கப்படும் நிலைக்குக் கீழ் இறங்கியுள்ளது. எரிபொருட்களின் விலை அதிகரிப்புகளால் போக்குவரத்து உட்பட சகல சேவைத்துறைகளும் கட்டண உயர்வை நடைமுறைப்படுத்துகின்றன. இவை அத்தனைக்கும் மத்தியில் சம்பள உயர்வு என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வருகிறது.

அரசாங்க, தனியார் துறைகளில் சம்பள உயர்வு மறுக்கப்படும் அதேவேளை அமைச்சர்கள் பெறவேண்டிய வழிகளிலும் அதற்கு அப்பாலான குறுக்கு வழிகளிலும் பெரும் பணம் குவிக்கின்றனர் என்பது இட்டுக்கட்டும் ஒன்றல்ல. அபிவிருத்தி என்பதன் ஊடாக எல்லாவற்றிலும் தரகுப் பணம் என்பது சத்தமின்றியே சென்றடைய வேண்டியவர்களின் கைகளுக்கும் பைகளுக்கும் சென்றடைந்து கொண்டே இருக்கின்றன. ஊழல் மோசடி என்பன உச்சமாகி நிற்கின்றன. அதனாலேயே கணக்கு விபரம் தெரிவிக்காது இரகசியம் பேணும் சுவிஸ் வங்கியில் இலங்கையர் பணம் குவிந்து கொண்டிருக்கிறது.

இந்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க, தனியார்த் துறை தொழிலாளர்கள் சம்பள உயர்வு மறுக்கப்பட்டது. அவ்வாறே கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் குறைந்த சம்பளத்தை வழங்கிவரும் பெருந்தோட்டத் தொழில்துறையின் மலையகத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு மறுக்கப்படுவதற்கான பரப்புரைகளை முன்னெடுக்க பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் ஆரம்பித்துள்ளது. சம்பள உயர்வு கோரிக்கைகளை பலவீனப்படுத்த வழமை போல நட்டக் கணக்கு காட்டத் தொடங்கியுள்ளனர்.

ஏற்கனவே மாவின் விலையேற்றமானது தோட்டத்தொழிலார்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

>>12

# நீதித்துறைக்கு எதிரான மிரட்டல்

## ஜே.ஆர். ஜயவர்தன தொடக்கிவைத்த நடைமுறை இன்று உச்சத்தை எட்டியுள்ளது

மோகன்

முதலாளிய சனநாயக நாடுகளிற் பாராளுமன்றமும் நீதி மன்றமும் ஒன்றிற்கொன்று சுயாதீனமாய் இருக்க வேண்டும் எனப்படுகிறது. பொலிஸ், அரச நிருவாகம் போன்ற துறைகளிலும் அரசியற் குறுக்கீடு ஏற்கப்படுவதில்லை. இவ்வாறான அதிகாரப் பிரிப்பும் சுயாதீனமும் துறைகள் ஒழுங்காகச் செயற்பட முக்கியமானவை எனப்படுகிறது.


எனினும் பின்தங்கிய முதலாளிய நாடுகள் பலவற்றிலும் —குறிப்பாக முதலாளிய சனநா யகம் வெளியிலிருந்து புகுத்தப்பட்ட நாடுகளில்— ஆளும் அதிகார வர்க்கம் தனது ஆதிக்கத்தை அரச நிருவாகத்தின் ஒவ்வொரு துறையிலும் அப்பட்டமாகவும் —தேவையான போது— சட்டத்துக்கு முரணாகவும் செலுத்தி வந்துள்ளது. ஆளும் அதிகார வர்க்க அக முரண்பாடுகளும் அரச நிருவாகத்தில் பலவாறான குறுக்கீடுகளாக அமைகின்றன.

இலங்கையில் அரச நிறுவனங்கள் பெருமளவும் அரசியல்மயப்பட்டுள்ளன. அதன் பய னாக தேர்தல்களில் அரச வளங்களின் துஷ்பிர யோகம் வழமையாகிவிட்டது. காவற் துறை இப் போது ஆளுங்கட்சியின் நலன் பேணும் கருவி யாக உள்ளது. பாதுகாப்புத் துறையும் அரசியல் மயப்பட்டுள்ளது. எனவே ஆளுங்கட்சி —சரியா கச் சொன்னால் மிகுந்த அரசியல் அதிகாரங் கொண்ட அதன் ஒரு சிறு பகுதி— நாட்டின் மீதும் மக்கள் மீதும் பூரண அதிகாரம் செலுத் தும் நிலைக்கு வளர்ந்துள்ளது. தனது அதிகா ரத்தை முழுமைப்படுத்த அது எடுக்கும் முயற்சிகட்குத் தடையாக நிற்கும் எதையும் அடித்து விழுத்த அது தயங்காது.

அரசாங்கத்திற்கும் (அல்லது பாராளுமன்றத்திற்கும்) நீதித் துறைக்குமிடையே காலத்திற்குக் காலம் முரண்பாடுகள் எழுகின் றன. ஆயினும், அவை பெரும்பாலும் சுமுகமாகத் தீர்கின்றன. நீதித் துறை என்பது இருக்கும் சமூக அமைப்பைப் பேணுதற்கான ஒரு கருவி என்பதை நாம் மறக்கலாகாது. உயர் நீதிமன்றத்தின் மூலம் தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சிறுபான்மைத் தேசிய இனங்களின் நலன்கட்கு எதி ரான அரசியற் செயற்பாடுகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. எனினும், அரசியல் யாப்பை வியாக்கியானம் செய்யும் உரிமை போன்ற சில சூழ்நிலைகளில், பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டங்களின் வியாக்கியானத்தில் நீதிமன்றத்தின் அதிகாரம் சரியாகப் பயன்பட்டுள்ளது.

எப்போதேன் நீதிமன்றத்தின் நிலைப்பாடு ஆளுந்தரப்பின் நோக் கங்களுடன் கடுமையாக முரண்பட்டால், சட்டங்களை மாற்றுவது முதலாகப் பலவேறு முயற்சிகளில் ஒரு அரசாங்கம் இறங்கலாம். இலங்கையின் குறிப்பான ஒரு சிக்கல் ஏதெனின் உயர்நீதிமன்ற நீதவான்களின் நியமனங்களிலும் நீதியரசர், சட்டமா அதிபர் போன்றோரின் நியமனங்களிலும் பல்வேறு பதவி உயர்வுகளிலும் எல்லையற்ற நேரடி அரசியற் குறுக்கீடு உள்ளது. அதை இயலு மாக்கியவற்றில் முக்கியமானது 1978இன் நிறைவேற்றதிகார அர சியல் யாப்பு எனவும் நாம் அறிவோம்.

ஜனாதிபதியின் அதிகாரத் துஷ்பிரயோகத்தின் அபாயங்களை உணர்ந்து, அரசின் முக்கியமான பதவிகட்கான நியமனங்கள் உட் பட்ட சில அலுவல்களில் சனாதிபதியின் நேரடி அதிகாரப் பிரயோ கத்தைத் தவிர்க்குமாறு சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்காலத்தில் 17வது சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனினும் அரசாங்க ஒத்துழைப்பின்மையால் அது என்றுமே செம்மையான நடைமுறைக்கு வரவில்லை. மேலும் முரணாக, மகிந்த ராஜபக் சவின் இரண்டாம் பதவிக்காலத்தின் போது சனாதிபதியின் பதவிக் காலத்தின் மீதான கட்டுப்பாட்டை நீக்குவதுடன் 17வது திருத் தத்தை மறுதலிக்கும் விதமாகவும் 18வது சட்டத் திருத்தம் கொண் டுவரப்பட்டது.



மகிந்த ராஜபக்ச ஆட்சியில் முன்னெப்போதுமில்லாதளவு எதேச்சதிகாரமாக நிறைவேற்றதிகாரம் பயன்படுவதை எல்லாரும் அறிவர். எனினும் பாராளுமன்றப் பெரும்பான்மையின் கைகள் கட் டிப்போடப்பட்டுள்ளன. ஆட்சியை எதிர்த்து மக்களை அணிதிரட்ட டும் ஆற்றல் பாராளுமன்ற எதிர்க்கட்சிகளிடம் இல்லை. இச் சூழலில், சில விடயங்களிலாவது அரசின் அடாவடித்தனங்கட்கு எதிரான சில தீர்ப்புக்களை நீதிமன்றங்கள் வழங்கியுள்ளன. முக்கி யமாக, அரசாங்கம் மாகாண சபைகளின் கட்டுப்பாட்டிலுள்ள நிதியைக் குறிப்பிட்ட ஒரு அமைச்சரின் கைகளுட் கொண்டுவரும் நோக்குடன் நிறைவேற்ற (தற்போது நிறைவேற்றப்பட்டுவிட்டது) இருந்த 'திவி நெகும' சட்டவாக்கத்தை ஒன்பது மாகாண சபைக ளும் ஏற்க வேண்டியிருந்தது. வட மாகாணத்திற்கான சபை இல் லாததால் அச் சபை வழங்கவேண் டிய அங்கீகாரத்தை மாகாண ஆளுநர் வழங்கினார். இந்த ஒழுங் கீனத்தின் துணையுடன் சட்டவாக்கத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றம் அரசாங்க முயற்சிக்கு எதிராகத் தீர்ப்பளித்தது.

அதைவிடச், சில காலம் முன்பு, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மீதும் அழுத்தம் செலுத்தும் நோக்கில், தன்னை வந்து சந்திக்குமாறு அவர்களை ஜனாதிபதி பணித்ததை நீதியாசரும் பிற உயர் நீதிமன்ற நீதவான்களும் மறுத்ததும் ஒரு உறுத்தலான விடயமாகும். நீதி யரசரின் குற்ற விசாரணைப் பிரேரணையிற் கூறப்பட்ட கார ணங்கள் உண்மையான காரணங்களல்ல. அதன் நோக்கம் சனாதி பதிக்கு முற்றுமுழுதாகப் பணிவில்லாத ஒரு நீதியரசரை நீக்கும் முயற்சி மட்டுமே என்பதில் தொடக்கத்திலிருந்தே இரகசியமில்லை. எனவே பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்ட போதே நீதி யரசரின் பதவி நீக்கம் உறுதிப்பட்டுவிட்டது. அத் தெரிவுக் குழுவிலிருந்த ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலருக்கு நீதி யரசருடன் தனிப்படப் பகை இருக்க நியாயமிருந்தும் அவர்கள் தெரிவுக்குழுவிற்கு நியமிக்கப்பட்டனர். அந் நியமனங்களைப் பற்றிய ஆட்சேபனைகள் புறக்கணிக்கப்பட்டன. இவை, எந்த நிபுணரும் ஆராய்ந்து சொல்லாத எளிய ஒரு உண்மையைக் கூறின.

தெரிவுக்குழுவின் ஆளுங் கட்சி உறுப்பினர்கள் சிலரது கேவ லமான நடத்தை காரணமாக நீதியரசரும் அவருடைய சட்டத் தரணிகளும் வெளிநடந் தமையும் எதையும் பாதிக் கவில்லை. எதிர்க் கட்சி உறுப்பினர்களின் வெளி யேறலும் எதையும் பாதிக் கவில்லை. தெரிவுக்கு ழுவின் நியமனம் முத லான அதன் ஒழுங்கீனங் கள் பற்றி விசாரிக்க நீதி மன்றத்திற் தோன்றுமாறு உயர் நீதிமன்றம் விடுத்த ஆணைகளும் அதன் தீர்ப்புக்களும் பாராளு மன்றச் சபாநாயகரால் செல்லாதன என்று புறக் கணிக்கப்பட்டன.

ஒழுங்கீனமான குற்ற விசாரணை மூல மான பதவிநீக்கம் பாரா ளுமன்றத்துக்கும் நீதித் துறைக்கும் இடையே முர ண்பாடுகளையும் எதிர்கா லப் பிரச்சனைகளையும் உருவாக்கும் என எச்சரிக்கப்பட்டது. அது அயல் உறவுகளைப் பாதிக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டது.

தியரசர் புதவி நீக்கம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்கள் மேலை நாடுகளின் பழைய அதிருப்திகளுடன் சேர்ந்து மேலும் அழுத்தங்களைக் கொண்டு வரலாம். ஆனால் இந்த ஆட்சியைக் கவிழ்க:கும் தேவை "சர்வதேச

இப் பதவி நீக்கத்தை விடப் பாரிய குற்றங்களை இலங்கை அரசாங்கம் செய்திருக்கிறது. அதற்காக அதைச் "சர்வதேச சமூகம்" தண்டிக்கவில்லை. இப் பதவி நீக்கம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்கள் மேலை நாடுகளின் பழைய அதிருப்திகளுடன் சேர்ந்து மேலும் அழுத்தங்களைக் கொண்டுவரலாம். ஆனால் இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் தேவை "சர்வதேச சமூகத்திற்கு" இன் னமும் வரவில்லை. இந்த ஆட்சி உலக வங்கியையோ சர்வதேச நாணயநிதியத்தையோ உலக மயமாக்கல் வேலைத்திட்டத்தையோ எதிர்க்காமல் நன்கு ஒத்துழைக்குமாறு அழுத்தங்களைப் பிரயோ கிக்க போதுமான அளவுக்கு வசதியாக அதன் குற்றங்கள் உள்ள வரையும், குற்றங்கட்கான தண்டனைகள் தேவையற்றன.

அரசு சற்றேனும் தடுமாறத் தெரிந்தால் அது அரசின் பலவீ னமாகத் தெரியும். அதனால் எதிரணியினர் உற்சாகமடைவர் என்பதே ஏந்த அடக்குமுறைச் சர்வாதிகார ஆட்சியினதும் சிந்தனைப் போக்காகும். ராஜபக்ச ஆட்சி அதற்கு விலக்கல்ல. நீதியரசரின் பதவி நீக்கம் நீதித்துறைக்கெதிரான பெரும் மிரட்டல் என்பதில் ஐயமில்லை. அது இந்தநாடு தனிமனித, குடும்ப சர்வாதிகாரத்தை நோக்கி எடுக்கும் முக்கியமான ஒரு அடி என்பதில் ஐயமில்லை.

அதைத் தடுப்பதானால் ஒடுக்கப்பட்ட மக்களால் மட்டுமே அது இயலும். அவர்களை அணிதிரட்டடாமல் நீதிமன்றத்தையும் சட்ட நுணுக்கங்களையும் சர்வதேசச் சமூகத்தையும் பற்றிக் கதைத்துக் கொண்டிருப்பது பயனற்றது.

# முப்பரிமாணம்

செல்வா

1. இல்லத்தரசியான பார்வதி இரவு எட்டு மணி செய்தியைப் பார்த்துவிட்டு இந்த நாடு எங்கே போகிறது என்று எனக்குத் தெரியவில்லை. எந்த நாளும் சிறுவர் துஸ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான பாலியல் வக்கிரம். கொலைகள் பற்றிய செய்திகள் இல்லாத நாளே இல்லை. நமது பிள்ளைகளை வீட்டை விட்டு வெளியே அனுப்பக் கூட பயமாக இருக்கிறது என்று தனது கணவரிடம் ஆதங்கத்தை கொட்டினாள். அதற்கு கணவர் சொன்னார் ஊரில் நடப்பதெல்லாம் நமக்கு ஒன்று செய்யமுடியாது. நாம் அவற்றை செய்யாமல் இருந்தால் சரி, மற்றது இந்தக் குற்றங்களை செய்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் முறையாக நடவடிக்கை எடுத்தால் சரியாகிவிடும் என்றார்.

2. பத்திரிக்கை செய்தி ஒன்றை படித்த வேகத்தில் அரசாங்க உத்தியோகத்தரான விமலரட்ன தனது நண்பரிடம் திருடர்களையும் கொலைகாரர்களையும் பிடித்த உடனேயே சுட்டுக்கொல்ல வேண்டும் என்று போபத்துடன் கூறினார். ருவன் சிரித்துக்கொண்டே பிடிபடாமல் கொள்ளை, கொலைகளை செய்பவர்களை என்ன செய்வது என்று திருப்பி கேட்க, விமலே சென்னார் உண்மைதான் அப்படி நடப்பதை நாம் எப்படி தடுக்க முடியும் என்று கூறும் போதே அவரது கோபமும் குறைந்தது.

3 ரிஸான நபீக் என்ன குற்றம் செய்தாள்? அவளுக்கு மரண தண்டனை கொடுப்பது அநீதியானது. உண்மையான குற்றவாளி இலங்கை அரசாங்கம் தானே என்று நஸ்லிமா தனது நண்பி கமலேஸ்வரியிடம் கூறினாள். ஆம்! 17 வயது சிறுமியை வெளிநாட்டு வெளிநாட்டு வேலைக்கு அனுப்பியது கொடுங்குற்றம் என்று ஆமோதித்த கமலேஸ்வரி,




உண்மையான குற்றவாளிக்கு தண்டனைகள் கிடைக்காத போது, மரண தண்டனை வழங்கினால் கொலைகள் கொள்ளைகள் குறைந்து விடும் என்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்றாள்.

✹ கொலைகள், கொள்ளைகள், பாலியல் வக்கிரங்கள் இடம்பெறுவதை தடுக்க ஒரே வழி மக்கள் ஒருவரையொருவர் நேசிக்கும் சமூக சூழல் ஏற்படுத்துதேயாகும். இதை உணராத வரை குற்றங்கள் இடம்பெறுவதையும், அதைத்தடுக்க ஒரேவழி கொடியத் தண்டனைகளை அமுல்படுத்துவதும் என்பதும் காலாவதியாகிப்போன மனித குலத்துக்கு எதிரான செய்தியாகும். இது திரும்ப திரும்பச் சமூகத்தில் பேசப்படுவதை தடுத்து உண்மையான பின்னனிக் காரணங்களை கண்டறிவதும், பல அரங்குகளில் விவாதிப்பதும் வினையாற்றுவதும் கட்டாயமானதாகும்.

## தோழர் சந்திரகுமார் வாழ்வும் மரணமும்

தோழர் சந்திரகுமார் மறைந்து ஏழு ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளது. அவர் எம்மிடம் இருந்து மறைந்து போனாலும் அவர் கொள்கையாலும். அவர் மேற்கொண்ட செயற்பாட்டாலும் எம் மக்கள் மத்தியில் இன்னமும் வாழ்கின்றார். தோழர் சந்திரகுமார் எப்போதும் சிறுவர்கள் புடைசூழவே இருக்கும் ஒருவர்.

தோழர் சந்திரக்குமார் ஆற்றிய மக்கள் பணியும். கட்சிப் பணியும். இலக்கியப் பணியும் காலத்தால் அழியாதவை. அவர் இட்டுச் சென்ற வழித்தடத்தில் நாம் முன்னேற வேண்டியதே நம்முன்னுள்ள கடமை. மாக்சிய. லெனினிய. மாவோ சிந்தனையை ஏற்று தனது இறுதி மூச்சுவரை ஒரு கம்யூனிசப் போராளியாகக் கட்சியின் பணிகளை எ.ஃகு போன்ற மனவுறுதியுடன் அதிகாரத்திற்கு அஞ்சாமல் வாழ்ந்தவர். அவர் மக்களின் இருப்பிற்கு எதிராக கொண்டு வரப்பட்ட மேல்கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் போராட்டத்தில் ஆற்றியக் களப் பணியும், பிந்துனுவெவ புணர்வாழ்வு முகாம் படுகொலைக்கு எதிரான மக்கள் போராட்டத்திலும் ஆற்றிய களப் பணியும், ஸ்தாபனத்தை போர் குணத்துடன் கட்டுவதிலும் ஆற்றியப் பணிகளும் சொல்லில் அடங்காதவை. அது ஒரு கம்யூனிஸ்ட் எவ்வாறு வாழவேண்டும். எவ்வாறு வர்க்கக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்கு ஒரு முன்னுதாரனம்.

கட்சியின் வெகுஜன அமைப்புக்களை கட்டுவதிலும், ஆசிரியர் தொழிற்சங்கத்தை கட்டுவதற்கும் இட்ட அடித்தளங்கள் ஸ்தாபனத்தைக் கட்டுவதில் முக்கிய பங்காற்றின. தோழரின் அர்த்தமுள்ள வாழ்வை நாம் முன்மாதிரியாகக் கொண்டு வர்க்க கடமையாற்ற ஒன்றுபடுவோம்.

தோழர் சந்திர குமார் எழுதிய ஆத்திச் சூடியின் சில வரிகள்....

அரசியல் பயில்
ஆயதம் செய்
இயக்கம் செய்
ஈடுபாடு கொள்...

பெண்ணை மதி
பேரம் பேசாதே
பொருள் முதல்வாதம் அறி
போர் செய்
மனிதம் காக்க
மாக்சியம் கல்
மாவோவை அறி
மிரட்டலுக்கு அஞ்சாதே
மீண்டெழு
முதல் படையாய் இருந்து
முதலாளியத்தை அழி...

# ஜெனீவாவும் தமிழ்த் தேசியக் கனவுகளும்

இவ்வாண்டு ஜெனீவாவில் ஐ.நா சபையின் மனித உரிமைகள் சபை இலங்கைக்கு எதிராக இரண்டு ஆண்டுகள் முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்தின் தொடர்ச்சியாக மேலும் கடுமையான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் சாடைகள் கூட்டத் தொடருக்குச் சில மாதங்கள் முன்னரே காணப்பட்டன. இலங்கை சார்பாக அளிக்கப்பட்ட நீண்ட விளக்கங்கள் ஜெனீவாவில் எழவிருக்கும் கேள்விகட்கு உரிய விடைகளாக அமையவில்லை என்பதுடன் போர்க் கால மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களும் பற்றிய எவ் விசாரணையையும் மேற்கொள்ள இலங்கை அர சாங்கம் இதுவரை எதையுமே செய்யவில்லை என்பதும் தெட்டத் தெளிவானவை.

தனக்கெதிரான தீர்மானத்தைத் தவிர்க்க இலங்கை அரசாங்கம் சென்றமுறை எடுத்தளவு முயற்சியை இம்முறை எடுத்ததாகக் கூற இயலாது. அதேவேளை, இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்து மேற்குலக நாடுகள் விடுத்துவரும் அறிக்கைகள் சிங்களப் பேரினவாதிகட்கு எரிச்சலூட்டுகின்றன. சிங்கள, ஆங்கில நாளேடுகளில் அந்த எரிச்சல் அப்பட்டமாகவே வெளிப்பட்டாலும், சென்ற முறையளவு தீவிரமான எதிர்ப்புக் குரல்கள் எழவில்லை. அதற்கான காரணங்களுள் ஒன்று, தீர்மானங்களின் தவிர்க்க இயலாமையாக இருக்கலாம். அதைவிட, மேற்குலகை மேலும் பகைக்கும் விதமாகச் செய்யும் பிரசாரம் எதுவும் இனி நாட்டினுள்ளும் அரசாங்கத்திற்கு அதிகம் உதவ மாட்டா என்பதுடன், சர்வதேச அரங்கில் இலங்கை அரசாங்கத்தின் மீது மனித உரிமை போர்க்குற்றங்கள் என்ற பேர்களில் கொண்டுவரக் கூடிய அழுத்தங்களை அவை வலுப்படுத்தக்கூடும் என்பதும் ஒரு காரணமாயிருக்கலாம்.

சென்றமுறை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொனி கடுமையாக இல்லாமைக்குத் திரை மறைவில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே நடந்த சமரசங்கள் ஒரு காரணம் எனப்படுகிறது. எனினும் மேற்குலக அழுத்தங்கள் பல தளங்களிலுந் தொடருவதைக் காணகிறோம். மனித உரிமைகள், சனநாயக உரிமைகள், ஊடகச் சுதந்திரம் என்பன போன்ற பல்வேறு அடிப்படைகளில் இலங்கை மீது மேற்குலக நாடுகள் நேரடியாகவும் ஐ.நா. மூலமும் தீர்மானங்களை நிறைவேற்ற வாய்ப்பாகவே இலங்கை அரசாங்கம் நடந்துவருகிறது. இவ்வாறு, தனக்கெதிரான பொறிகளை இலங்கை அரசாங்கம் தானே அமைத்தும் வந்துள்ளது.

எனினும் மேற்குலகம் இலங்கை அரசாங்கத்தின் மீது செலுத்தும் நெருக்குவாரங்களின் நோக்கம் போர்க் குற்றங்களை முறையாக விசாரித்தறிவதோ நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதோ போராற் பெரும் இழப்புக்களைப் பெற்றோருக்குப் புனர்வாழ்வளிப்பதோ அல்ல. தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு மேற்குலக அக்கறைக்குரிய விடயமும் அல்ல. அவர்களது கவலைகள் உலக மேலாதிக்கத்திற்கான அவர்களது திட்டங்கட்கு இலங்கையின் பங்களிப்புப் போதாதிருப்பது மட்டுமே.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இலங்கை மீதான பல்வேறு கடும் விமர்சனங்களின் நடுவிலும் இலங்கைக்குப் பெருந்தொகையான கடன்கள் வழங்கப்படுகின்றன.



**தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு மேற்குலக அக்கறைக்குரிய விடயமும் அல்ல. அவர்களது கவலைகள் உலக மேலாதிக்கத்திற்கான அவர்களது திட்டங்கட்கு இலங்கையின் பங்களிப்புப் போதாதிருப்பது மட்டுமே**

அவற்றின் மூலம் இலங்கை மீதான மேற்குலகப் பொருளாதார ஆதிக்கம் வலுப்படுகிறது. எனவே, இலங்கையால் மேற்குலகை மீறித் தனது பொருளாதாரத்தை வழிநடத்த இயலாதுள்ளது. கல்வி, மருத்துவத் துறைகளில் அரசாங்கச் செலவுக் குறைப்பும் தனியார் துறையின் ஆதிக்கத்தின் வளர்ச்சியும் சுற்றுலாத் துறையை நோக்கிய பொருளாதாரத் திசைதிருப்பலும் அந்நிய மூலதன ஊடுருவலும், சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் அழுத்தங்களாலேயே என நாம் அறிவோம். எனினும் மேற்குலகு (குறிப்பாக அமெரிக்கா) சீனாவைச் சுற்றி வளைக்கவும் ஈரான் மீது கடும் நெருக்குவாரங்களைச் செலுத்தவும் பல நாடுகள் தடையாக உள்ளன. இலங்கையும் அவற்றுள் ஒன்றாகக் காணப்படுகிறது. எல்லாரையும் வழிக்குக் கொண்டுவர இயலாவிடினும், இலங்கையை வழிக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களும் பற்றிய விசாரணைகளும் பிற மிரட்டல்களும் அடங்கும். இந்த அடிப்படையில் நோக்கினால், ஜெனீவாவில் இலங்கை பற்றிய தீர்மானத்தின் நோக்கமும் பயனும் விளங்கும்.

தமிழ்த் தேசிய அரசியற் தலைமைகள் வழமை போன்று மேற்குலகின் மீதும் இந்தியாவின் மீதும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான பாரத்தைச் சுமத்திவிட்டுக் கிடக்கின்றன. தமிழருக்குப் நம்பிக்கையூட்டும்படி பயனுள்ளதாக எதையுமே சொல்லவியலாத தமிழ் ஊடகங்கள், ஐ.நா. மனித உரிமைகள் சபையையும் மேற்கு நாடுகளின் அறிக்கைகளையும் வைத்துத் தம் முன்பக்கங்களை நிரப்புகின்றன. இந்த அலை ஓய்ந்த பிறகு சீமான், கோபாலசாமி முதலாகக் கருணாநிதி, ஜெயலலிதா வரையானோரின் பிதற்றல்கள் பெரிய எழுத்துத் தலைப்புச் செய்திகளாகும் என எதிர்பார்க்கலாம்.

சென்ற ஆண்டின் பிற்பகுதியில் தமக்கு அமெரிக்காவுக்கு அழைப்பு வந்திருப்பதாகப் பெரிதாகச் செய்திகளை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இப்போது தென்னாபிரிக்கா சென்று திரும்பியுள்ளனர். போகவேண்டிய இடம் அதுவல்ல ஜெனீவா என்று சில கடும் விமர்சனங்களைக் கண்ட பின்பு, ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் த.தே.கூ. அறிக்கை விடுத்தள்ளது. தங்களைக் கேட்டு மனித உரிமைகள் சபையோ வேறு எந்த அயல் நிறுவனமுமோ எதையுமே செய்யாது எனவும் தமது அறிக்கை பேரினவாதிகட்கே உதவும் எனவும் த.தே.கூ. தலைவர்கள் அறிவார்கள். எனவே, இவ்வாறான அறிக்கைகளும் நமது பத்திரிகைகளின் பரபரப்பும் தமிழ் மக்களைப் போராட்டப் பாதையில் அணிதிரளாது தடுக்கும் முயற்சிகள் மட்டுமே.

ராஜபக்ச ஆட்சி கடும் மேற்குலக நெருக்குவாரங்கட்குட்பட்டு வருவதைப் பற்றி ஐயமில்லை. அதன் பயனாக அந்த ஆட்சியின் போக்கில் மாற்றங்கள் நிகழலாம்; அல்லது ஒரு ஆட்சிக் கவிழ்ப்புக்கான நடவடிக்கைகள் தொடங்கலாம். எனினும் மேற்குலகு கொண்டுவரக்கூடிய எந்த மாற்றமும் இலங்கையின் எந்தத் தேசிய இனத்தினதும் உழைக்கும் மக்கள் பிரிவினதும் நன்மைக்கானதல்ல என்பதுதான் நம் முக்கிய கவனிப்பிற்குரியது. எனவே ஒரு மாற்று அரசியலையும் அதை முன்னெடுக்கக்கூடிய ஒரு ஐக்கிய முன்னணியையும் அதற்கு ஒத்துழைக்கக்கூடிய முற்போக்கான ஒரு தமிழ்த் தேசியத்தையும் கட்டியெழுப்புவதைப்பற்றி யோசிப்போமாக.

## மன்னார் மீன்பிடித் தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும் பேரினவாதமும் இந்தியாவும்

மன்னார் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் மீன் பிடிக்கப்படும் முக்கியமான கரையோரப் பகுதிகளில் அப்பகுதி மீனவர்கள் தற்போது புதியதொரு பிரச்சினையையும் நெருக்கடியையும் எதிர் நோக்கியுள்ளனர். பாரம்பரியமாக அப்பிரதேசங்களில் மீன்பிடித் தொழிலில் தமிழ் மீனவர்களே தொழில் செய்து வந்தனர். ஆனால் இப்பொழுது அவ்விடங்களில் சிங்கள முதலாளிகளின் மீன்பிடிப் படகுகள் தெற்கில் இருந்து கொண்டுவரப்பட்டு அப்பகுதி மீன்வளங்களை அள்ளப் படுகின்றன. இது அப்பகுதி மீனவர்களின் கடற் பிரதேசங்களில் அத்துமீறிய மீன்பிடிப்பாகவே அமைந்துள்ளது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் தாழ்வுப்பாடு மீன்பிடிக் கரையோரங்களில் இவ் அத்துமீறல் நடந்தேறி வருகின்றது.

தமது தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் இழப்புகளையும் சுட்டிக்காட்டி மீனவர்கள் அப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மன்னார் ஆயர், அரச உயர் அதிகாரிகள் உட்பட உயர் மட்டத்தினருக்கு மகஜர்கள் மூலம் தெரியப் படுத்தியுள்ளனர். ஆனால் இதுவரையில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. இதனால் அப்பகுதி மீனவர்கள் அன்றாடம வாழிவாதாரத்திற்கு துன்பப்படவேண்டியே உள்ளது.

நில அபகரிப்பு, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், இருந்து தமது பழைய இடங்களில் வாழ முடியாமை, கடற் பரப்பில் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாமை போன்ற பேரினவாத ஒடுக்கு முறைப் பாதிப்புக்களால் துன்புறுத்தப் படுபவர்களாகவே வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய பேரினவாத நிகழிச்சி நிரலின் அடிப்படையிலேயே மன்னார் மீன்பிடித் துறைமுகங்களில் தெற்கில் இருந்து மீன் பிடிப் படகு களும் தொழிலாளர்களும் கொண்டுவரப்பட்டு மீன் பிடித் தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு அரசாங்கத் தரப்பின் ஆசியும் அனுமதியும் நேரடியாக இருந்து வருவதாகவே உள்ளூர் மீனவர்கள் பேசிக் கொள்கின்றனர்.

**பேரினவாத நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே மன்னார் மீன்பிடித் துறைமுகங்களில் தெற்கில் இருந்து மீன்பிடிப் படகுகளும் தொழிலாளர்களும் கொண்டுவரப்பட்டு மீன்பிடி மேற்கொள்ளப்படுகின்றது**



இவ்வாறு தமிழ் மக்களின் கடற்பிரதேசங்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவோர் சாதாரண சிங்கள மீனவர்கள் அல்ல. இவர்கள் பெரும் வள்ளங்களை வைத் திருக்கும் அரச ஆதரவுப்பெற்ற முதலாளிகளே ஆவர். இவர்களே பேரினவாதத்தை தூண்டி தமிழ் சிங்கள மீனவர்கள் மத்தியில் துவேஷத்தையும் முரண்பாட்டையும் வளர்த்து அதனூடே இலாபமடைகின்றார்கள். எனவே இவ்வாறு தமது மீன் பிடி தொழிலுக்கு ஏற்பட்டுள்ள அத்துமீறலையும் அச்சுறுத்தலையும் நிறுத்த வேண்டும என மன்னார் மீனவ மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இன்று வடக்கு கிழக்கு மீனவர்கள் ஒரு புறம் இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறலையும் மறுபுறம் தெற்கின் அத்து மீறிய திட்டமிட்ட மீன்பிடிப்பையும் எதிர் கொள்வோராக இருந்து வருகின்றனர். இந்திய பெரு வணிகர்கள் தமது ரோலர் படகுகள் மூலம் இலங்கை கடற்பரப்பின் மீன்வளங்களை சூறையாடுகின்றனர். இவர்கள் மீன் பிடிக்கக் கைக்கொள்ளும் முறைகள் எதிராகால மீன்பிடித் தொழிலுக்கு அச்சுறுத்தலாகவும் மாறியுள்ளது. இவ் ஒடுக்குமுறைகளுக்கும் கொள்ளையடிப்புக்கும் எதிராக மக்கள் போராட வேண்டிய நிர்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

1>> கொல்லப்பட்ட ரிசானாவும்.....

எழுதாவிதிகளக இருந்து வருகின்றன.

சவுதியில் ரிசானா பணக்காரர் வீடொன்றில் பணிப்பெண்ணாகச் சேர்க்கப்பட்டாள். ஒரு சில மாதங்கள் மட்டுமே அவ்வீட்டில் பணிபுரிந்தார். அங்கு நான்குமாதக் குழந்தைக்குப் பாலூட்டும்போது அக்குழந்தை மூச்சுத் திணறி இறந்துவிட்டது. இது திட்டமிட்ட ஒரு கொலையல்ல. குழந்தைப்பராமரிப்பில் அனுபவமின்மையாலும் அக்குழந்தையின் அராபியத்தாயின் அக்கறையின்மையாலும் இடம் பெற்ற மரணமாகும். ஆனால் பழி முழுவதும் பணிப்பெண் ரிசானாவின் மீதே விழுந்தது. அன்றிலிருந்து மரணதண்டணை கைதியாக சிறைவாசம் அனுபவித்த ரிசானாவின் தலையை ஏழு வருடங்களின் பின்னர் 'சரீஆ' சட்டத்தின் வாள் துண்டாடியது. இவ்வாறு சவூதி அரேபியாவில் இடம்பெறுவது வழக்கமானது என்று கூறப்பட்டபோதிலும், ரிசானா முறையான பொலீஸ் விசாரணைக்கும், நீதிமன்றத்தின் முன் நேர்மையான நீதி விசாரணைக்கும் உள்ளக்கப்படவில்லை என்பது மிக அடிப்படையான பிரச்சினை. அவர் மீதான விசாரணைகள் முழுமையாக அரபு மொழியிலேயே இடம்பெற்றுள்ளதுடன் பொலீஸ் விசாரணை, நீதிமன்ற விசாரணைகளின் போது தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ரிசானாவின் வாக்குமூலம், சாட்சியம் என்பவை முறையாக மொழிமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. 'சரிஆ' சட்டம் அரபு மொழித் தெரியாத ஒருவருக்கு தனது பக்க நியாயத்தை முன்வைக்க இடம் கொடுக்கவில்லை. இவ்வழக்கு விசாரணை நடைமுறையும் தண்டணையும் காட்டுமிராண்டித்தனமானதாகும். ரிசானாவின் சிரச்சேதமும் அதில் இருந்து சிதறித் தெறித்த இரத்தத் துளிகளும் மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்பெண்களாகக் கொடுமைகளும் வேதனைகளும் அனுபவித்து வரும் பத்துலட்சம் இலங்கைப் பணிப்பெண்களினதும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தோனேஷியா போன்ற நாடுகளின் பல பத்து இலட்சம் பணியாளர்களினதும் முகம்களில் வீழ்ந்து வடியும் சோகக் கோடுகளாகிக் கொண்டன. ரிஸானா போல் பல பெண்கள் சவுதியின் சிறைக்கூடங்களின் பின்னால் காட்டுமிராண்டிகளின் நீதி விசாரணையில் குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளனர். டுட்டி டுரிஷில்லாவதி,27(*Tuti Tursilawati binti Warjuki, 27,Indonesia*) என்ற இந்தோனேஷிய இளம் பெண்ணும் தன்னை கற்பழிக்க முயன்ற எசமானிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளச்செய்த கைமோசக் கொலைக்காக நீதியான விசாரணையின்றி மரண தண்டணையை எதிநோக்கியுள்ளார்.

சவூதிக்கும் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுக்கும் பணிப் பெண்களாகச் செல்லும் பெண்களின் மீது திணிக்கப்படும் பொருளாதார நெருக்கடி ஆழ நோக்க வேண்டியது. மத்திய கிழக்குக்குச் செல்லும் அத்தனை பேரும் தமது குடும்பங்களில் இருந்துவரும் தமது வறுமையைப் போக்க வேறு வழியின்றி, சமூகப் பொருளாதார இழிச் சூழலிலேயே அங்கு போகிறார்கள். அங்கு பணிப்பெண்களாகச் செல்வோர் பல்வேறு கொடுமைகளுக்கும், இரத்தவெறிப் பிடித்த ஷேக்குகளின் பாலியல் வன்முறைக்கும் மத்தியில் குறைந்த கூலிக்கு வேலை செய்யவேண்டியுள்ளது.

இவ்வாறு பல லட்சம் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் அடிமைத்தனமான வேலைகளுக்கு தொடர்ந்து அனுப்பப்படுவதை எல்லா ஆட்சிகளுமே ஊக்குவித்து வந்துள்ளன. அத்தகைய வேலைவாய்ப்பின் மூலமே அரசாங்கம் அந்நியச் செலவாணியைப் பெருமளவில் ஈட்டுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளிலும் சரி உள்நாட்டு உல்லாசப் பயணத் துறையிலும் சரி பணம் வந்தால் போதும் என்பது அரசின் கொள்கை. பெண்கள், சிறுவர் உரிமைகள் அவர்களுக்கு தேவையற்றது. இதில் மத்திய கிழக்கு நாடுகளில் நமது நாட்டுப் பெண்கள் எதிர்கொள்ளும் உரிமை மீறல், கொடுமைகள் ஒரு பொருட்டல்ல.

காலங்காலமாக நம்மை ஆண்ட அரசாங்கங்கள் உள்நாட்டு பொருளாதாரத்தை சீர்குலைத்து, உழைத்து வாழ்ந்த மக்களை ஏவல் வேலை செய்து பிழைக்க வேண்டிய இழிநிலைக்கு கொண்டு சென்றுள்ளனர். இந்த அவலங்களின் பின்னாலுள்ள நவதாராண்மைவாதப் பொருளாதார கொள்கையை நாம் எதிர்க்காத வரை பல ஆயிரம் ரிசானாக்கள் மத்திய கிழக்கை நோக்கி படையெடுப்பதை தடுக்க முடியாது.

மத்திய கிழக்கில் நடைபெறும் பெரும்பாலான போராட்டங்கள் மக்கள் ஜனநாயகத்துக்குரியன அல்ல. பெரும்பாலும் அவை அமெரிக்க நலன்கட்கானவை. உலகில் மனித உரிமை, ஜனநாயகம் பற்றி வாய்கிழிய கத்தும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு தனது அடியாளான சவுதியிலோ ஏனைய எஜமான விசுவாமுடைய நாடுகளிளோ நடைபெறும் மனித உரிமை மீறல்கள், ஜனநாயக மறுப்பு என்பன அக்கறைக்குரியனவல்ல.

இது இவ்வாறிருக்க நாட்டின் சனத்தொகையில் அரைவாசிப்பேர்(*53%*) பெண்கள். ஆனால் இன்றைய ஒடுக்குமுறைச் சமூக கட்டமைப்பும் அதன் ஆளும் வர்க்கக் காவலர்களும் நம் நாட்டுப் பெண்கள் மீதான பழைமைவாதப் பெண்ணடிமை நுகத்தடியினை இறுக்கி வைத்தே வருகின்றனர். இவற்றுடன் கூடவே இன்று மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமன்றி உள்நாட்டிலும் பெண்கள், சிறுமிகள் பாலியல் வன்புணர்ச்சிகளுக்கும் ஏனைய வன்முறைகளுக்கும் உள்ளாகின்றனர். மரபு, வழக்கம் எனப் பெண்கள் அவர்களுக்குரிய தளங்களில் பல்வேறு ஒடுக்குதல்களுடனும் இழிவுகளுடன் நடாத்தப்படுகின்றனர். இவை பற்றிய கேள்விகள் மக்கள் மத்தியில் உரத்து எழுப்பப்பட வேண்டும். சமூக, அரசியல் தளங்களில் விவாதங்கள் எழுப்பப்பட வேண்டும். அதன் மூலம் பெண்கள் மத்தியில் சமூக அடிப்படையிலான சிந்தனைப் போக்கை வார்த்து அதனை செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும்.

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 20

வெகுஜனன்

> 2002ம் ஆண்டில் இடம்பெற்ற அரசாங்கம் – புலிகள் புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு பின் இடம்பெற்ற பொதுத்தேர்தல் என்பதாற், புலிகள் இயக்கம் அதிற் பங்கு கொள்ள முடிவெடுத்தது. அதன் மூலம் பாராளுமன்ற அரங்கில் தன்னை வெளிப்படுத்த முயன்றது. ஆனால், தனித்து நின்று வடக்குக் கிழக்கில் முழுமையான வெற்றியைத் தேடிக்கொள்ள இயலாது என்ற யதார்த்தத்தை புலிகள் விளங்கிக் கொண்டனர்.

2003ன் நடுப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கம் வடக்குக் கிழக்கிற்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான ஒரு நகல் திட்டத்தை முன்வைத்தனர். அதுவரை தமது சார்பில் எதுவித தீர்வு யோசனையையும் முன்வைக்காது இருந்து வந்த புலிகள் இயக்கம் இத்தகைய இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனையை முன் வைத்தமை பேரினவாதத் தரப்பினர் அனைவரையும் திகைக்க வைத்தது. கடும்போக்காளர்களான ஹெல உறுமயவினரும், ஜே.வி.பியினரும் எதிர்த்துத் துள்ளிக் குதிக்க ஆரம்பித்தனர். ரணில் தலைமையிலான அரசாங்கம் விழுங்கவும் முடியாது கக்கவும் இயலாது தத்தளித்ததுடன் அதனை நிராகரிப்பதாகக் கூறிக் கொண்டது.

இருந்தபோதிலும், இத்தகைய ஒரு சூழலுக்குள் பேரினவாதிகளும் ஜனாதிபதி சந்திரிகாவும் ரணில் மீதே தாக்குதல் தொடுத்தனர். ஜே.வி.பி. பேரினவாத உச்சநிலைப் பிரசாரத்தை முன்னெடுத்து அதற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதான ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்பி நின்றது. ஜாதிக ஹெல உறுமயவும் தனது பங்கினை ஆற்றிக்கொண்டது. இச் சந்தர்ப்பதைப் பயன்படுத்துவதற்கு காத்திருந்தது போன்று இந்தியா நடந்து கொண்டது. நோர்வேயின் அனுசரணையுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை வேண்டாவெறுப்புடன் அவதானிக்க வந்த இந்தியாவைக் குளிர்மைப் படுத்துவதற்காக நோர்வேயின் பேச்சு வார்த்தைப் பிரதிநிதியும் தரகருமான எரிக்சொல்ஹைம் கொழும்பு வந்த ஒவ்வொரு தடவையும் புதுடில்லிக்கு பயணிப்பதையும் ஒழுங்காக மேற்கொண்டு வந்ததுடன் பேச்சுவார்த்தையின் அவ்வப்போதான பெறுபேறுகள் பற்றி இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கு விளக்கம் அளித்தும் வந்தார். அவ்வாறு இருந்து வந்த போதிலும், நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தை முன்நகர்வதைக் குழப்புவதிலே இந்தியா குறியாக இருந்து வந்தது. கிழக்கிலங்கையில் அக்காலப் பகுதியில் இடம்பெற்ற தமிழ்-முஸ்லீம் முறுகல் மோதல்கட்குப் பின்னால் இந்தியக் கரங்கள் இருந்து வந்ததாகவே சந்தேகிக்கப்பட்டது.



2003ன் பிற்பகுதியில் பேச்சுவார்த்தை முயற்சிகள் முற்றாகச் சீர்குலைந்த நிலையில் இந்திய அரசு இலங்கை அரசாங்கத்துடன் கொள்கையளவிலான ஒரு தற்காலிக உடன்படிக்கைக்கு வந்து கொண்டது. இலங்கையின் பாதுகாப்பிற்கான சகல உதவிகளையும் வழங்குவது எனவும் விடுதலைப் புலிகளின் கடற்போக் குவரத்துக்களைக் கண்காணிப்பதாகவும் வடக்கின் விமானத் தளத்தைப் புனரமைத்துக் கொடுப்பதெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இது விடுதலைப் புலிகளுக்குச் சினமூட்டியதுடன் யுத்தத்திற்கான ஒரு மறைமுகத் திசைகாட்டலாகவும் அமைந்தது.

இச் சூழலில், ஜனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ரணில் தலைமையிலான அரசாங்கத்தைக் கலைத்து பாராளுமன்றத்திற்கான 2004ம் ஆண்டுத் தேர்தலுக்கு வழிவகுத்தார். இத்தேர்தலில் தெற்கிலும் வடக்கிலும் புதிய கூட்டணிகள் உருவாகின. தெற்கில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் பொதுசன ஐக்கிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக உருவெடுத்தன. ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா ஜே.வி.பியுடனான கூட்டை அதிகம் விரும்பவில்லை. தனது கணவரான விஜய குமாரதுங்காவைச் சுட்டுக் கொன்ற ஜே.வி.பி.யுடன் கைகோர்ப்பதில் தயக்கம் காட்டினார். அதே வேளை, பொதுசன முன்னணி தனித்து நின்று பதவிக்கு வரமுடியாது என்பதும் உணரப்பட்ட சூழலில், மகிந்த ராஜபக்ஷ உட்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சாரார் வற்புறுத்திய நிலையில், ஜே.வி.பியுடனான கூட்டு முன்னணி சாத்தியமாகியது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் எந்தப் பிசாசுடனும் இணங்கிப் பின்னாற் செல்லக் கூடிய சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்கள் பதவிகட்காகப் பின்னாற் செல்லவேண்டியாயிற்று. புதிய கூட்டணி வெற்றிலைச் சின்னத்துடன் தேர்தலில் இறங்கியது.

அதேவேளை, வடக்கு கிழக்கிலும் புதியதொரு கூட்டணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் விரிவு பெற்றது. ஏற்கனவே, 2001ம் ஆண்டுத் தேர்தலை முன்னிட்டு தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன இணைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இது தமிழ் மக்களின் விருப்பம் என்று கூறப்பட்டாலும் அது இந்தியாவின் விருப்பத்தின் பேரிலேயே நடந்தேறியது. 2000ம் ஆண்டினதும் 2001ம் ஆண்டினதும் பொதுத் தேர்தல்களிலும் புலிகள் இயக்கம் எவ்வித அக்கறையும் காட்டாது பார்வையாளர்களாகவே இருந்தனர். அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தேர்தல் நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறவில்லை. ஆனால் வன்னி மாவட்டத் தேர்தல் நடவடிக்கைகள் வவுனியாவிலும் மன்னாரிலும் இருந்த அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் 2002ம் ஆண்டில் இடம்பெற்ற அரசாங்கம்-புலிகள் புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு பின் இடம்பெற்ற பொதுத்தேர்தல் என்பதாற் புலிகள் இயக்கம் அதிற் பங்கு கொள்ள முடிவெடுத்தது. அதன் மூலம் பாராளுமன்ற அரங்கில் தன்னை வெளிப்படுத்த முயன்றது. ஆனால், தனித்து நின்று வடக்குக் கிழக்கில் முழுமையான வெற்றியைத் தேடிக்கொள்ள இயலாது என்ற யதார்த்தத்தை புலிகள் விளங்கிக் கொண்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்து வந்த வாக்கு வங்கியையும் அவர்கள் கவனத்திற் கொண்டனர். அதே வேளை, புலிகள் இயக்கத்தை முற்றுமுழுதாக நிராகரித்துத் தேர்தலில் வெல்ல முடியாது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் நன்கு உணர்ந்திருந்தனர். ஆனாற், தமது பாராளுமன்ற ஆதிக்க அரசியலுக்காகக், கடந்த காலங்களைப் பற்றிய எவ்வித விமர்சனமோ சரி பிழை பற்றிய கலந்து பேசுதலோ இன்றிப் புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவ நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு 2004ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகள் இயக்கத்துடன் ஒன்றாகப் போட்டியிட முன்வந்தனர். அதற்காகக் கூட்டமைப்பினர் கிளிநொச்சி சென்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் முன்வந்தனர். முறையே இரா. சம்பந்தன், தமிழ்ச்செல்வன் ஆகியோரின் தலைமையிலான குழுக்களின் பேச்சுவார்த்தை தொடர்ந்தது.

மேற்படி பேச்சுவார்த்தையில் தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர். எல்.எவ், ரெலோ ஆகியன கூட்டமைப்பில் இருப்பதற்குப் புலிகள் இணைங்கினர். ஒரு கட்டத்தில் புலிகளே தமது பிரதான எதிரி எனக் கூறி வந்த மேற்படி மூன்று கட்சிளும் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிகள் என ஏற்று கொண்டனர். இந்தியாவின் கையாட்கள் எனக் கூறி மேற்படி மூன்று இயக்கங்களையும் நிராகரித்ததுடன் அவற்றின் தலைவர்கள் முதல் போராளிகள் வரை பல நூற்றுக்கணக்கானோரைப் புலிகள் இயக்கம் கொன்றொழித்திருந்தது. அதே போன்று, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ இயக்கங்களால் புலிகள் இயக்கத்தை சேர்ந்தோரும் அதன் ஆதரவாளர்களும் நூற்றுக்கணக்கிற் கொல்லப்பட்டிருந்தனர். அத்துடன், தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரான அ. அமிர்தலிங்கமும் பாராளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனும் புலிகளாற் கொல்லப்பட்டவர்களாவர். அதுமட்டுமன்றி புலிகளால் விரட்டப்பட்ட தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் இலங்கை அரசாங்கத்தினதும் ராணுவத்தினதும் நிழலிலும் ஆதரவிலும் இருந்து வந்தன என்பது பழைய கதையாயினும், அவற்றை எல்லாம் மறந்து 2004ல் தேர்தல் கூட்டணி அமைக்கப் புலிகளும் தமிழரசுக் கட்சியும் ஈ.பி.ஆர். எல்.எவ்., ரெலோ ஆகியன தம்முள் இணங்கிக் கொண்டனர். இவர்களுடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் புலிகளின் பரிந்துரையில் இணைக்கப்பட்டது. அதேவேளை, வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும் த. சித்தார்த்தன் தலைமையிலான புளொட் இயக்கமும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இவ்வாறு 2004ம் ஆண்டின் பொதுத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரிலும் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலும் மேலே கூறப்பட்ட தமிழ்த் தேசியவாதக் கட்சிகளாலும் புலிகள் இயக்கத்தாலும் எதிர்கொள்ளப்பட்டது. மேற்படி தேர்தலில் புலிகள் இயக்கம் மிக மும்முரமாக ஈடுபட்டது. ஏற்கனவே புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் புலிகள் இயக்கம் தனது அரசியல் வேலைகளைச் செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. அதற்கான பணிமனைகள் வடக்குக் கிழக்கில் இயங்கி வந்தன. இப்பொதுத் தேர்தற் பட்டியலில் மேற்குறிப்பிட்ட கட்சிகளின் தலைவர்களும் அவர்கள் முன்மொழிந்த உறுப்பினர்களும் புலிகள் இயக்கம் பிரேரித்த உறுப்பினர்களும் இடம்பெற்றிருந்தனர். புலிகள் இயக்கம் இத் தேர்தலில் தமது நிலைப்பாட்டையும் தாமே ஏகப் பிரதிநிதிகள் என்பதையும் தெற்கிற்கும் உலகிற்கும் காட்ட முழு அளவில் வேலை செய்தனர். அதனால், தேர்தலில் நிற்க முன்வந்தோரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிர்ந்த கட்சிகளின் உறுப்பினர்களை அவர்கள் தமது வழமையான ஜனநாயக விரோத வழிகளில் மறைமுகமாக மிரட்டவும் செய்தனர். அதனால் அவர்கள் நேரடியாகவும் பகிரங்கமாகவும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட முடியாத நிலை காணப்பட்டது.

புதிய ஜனநாயகக் கட்சி இவ்விரு தேர்தல்களையும் ஒரு சவாலாகவே ஏற்று அதில் பங்குப் பற்றியிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்விதமான தேர்தல் கூட்டங்களையும் நடாத்த முடியாமல் துணிவற்று நின்றதுடன் மக்களுக்கு எதனைக் கூறுவது என்பதிலும் தடுமாறி நின்றது. ஆனாற் புதிய ஜனநாயகக் கட்சி சகல தொகுதிகளிலும் பெரிய, நடுத்தர, சிறிய அளவுகளிற் கூட்டங்களை நடாத்தி மக்களுக்கு கொள்கை விளக்கத்தையும் நாட்டின் அரசியல் நிலைமை, தேசிய இனப்பிரச்சினை, தமிழ்த் தலைமைகளின் ஆதிக்க அரசியற் போக்கு, பேரினவாத ஒடுக்குமுறை போன்றவற்றை எடுத்து விளக்கி வந்தது. அதாவது, அவ்விரு தேர்தல்களையும் புதிய ஜனநாயக கட்சி தகுந்த அரசியல் மேடையாக்கியது. ஆனால் அவற்றையடுத்து வந்த மூன்றாவது தேர்தலான 2004ன் தேர்தலில் பங்கு கொள்வதைத் தவிர்த்தது. இதனைப் புலிகள் இயக்கம் பொறுத்துக் கொள்ளவில்லை. கட்சித் தலைமையோடு பேசித் தேர்தலில் தமக்கு ஆதரவு தரும் ஊடக அறிக்கை ஒன்றைவிடும்படி வற்புறுத்தியது. கட்சி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எச் சந்தர்ப்பத்திலும் அவ்வாறு செய்வதில்லை என கட்சித் தலைமை உறுதியான முடிவை எடுத்திருந்தது. புலிகள் வெவ்வேறு வழிகளில் முயன்றும் கட்சியின் முடிவு மாறவே இல்லை.

இப் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் புலிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு கிழக்கில் தெரிவாகினர். இது ஒரே சின்னத்தின் கீழான ஆகக் கூடிய தமிழர் பிரதிநிதித்துவமாகக் காணப்பட்டது. இது பேரினவாதிகளை அதிக சினத்திற்கு ஆளாக்கியது. அத் தேர்தலில், வழமை போன்று, ஜனநாயகம் பெயரளவிலானதாகவே இருந்தது. புலிகள் இயக்கத்தினர் பல்வேறு முறைகேடுகளிலும் கள்ளவாக்குகள் இடுவதிலுங் கூட ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. எவ்வாறாயினும் தெரிவு செய்யப்பட்டோர் பாராளுமன்றம் சென்றனர். சந்தர்ப்பவாத அரசியல் பேசுவதில் வல்லவரான இரா. சம்பந்தன் பாராளுமன்றத்தில் கூட்டமைப்பின் குழுத் தலைவராகிக் கொண்டார். புலிகள் அவர்களை அடிக்கடி கிளிநொச்சிக்கு அழைத்து வழிகாட்டல்களைக் கொடுத்து வந்தனர். இவ்வாறு இருந்த போதிலும், இக் கூட்டமைப்பினரைத் தமிழர் பிரச்சினை பற்றி இலங்கைக்கு வெளியேயோ உள்ளேயோ பேசுவதற்குப் புலிகள் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்கள் வந்தபோது தங்களது சார்பான பாராளுமன்ற உறுப்பினர்களையே அனுப்பிப் பேச வைத்தனர்.

இத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் மேலே கூறப்பட்ட நிலை காணப்பட்ட அதேவேளை, தெற்கில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது வெற்றிபெற்றது. அதில் ஜே.வி.பி.யின் ஆசனங்களின் பங்கு அதன் ஆதரவுத் தளத்தின் அளவை மீறி ஓங்கி நின்றது. 2004ன் தேர்தலில் ஜே.வி.பி.க்கு மொத்தம் 38 ஆசனங் கிடைத்தன. அதன் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அது மூன்று முழு அமைச்சர் பதவிகளையும் பெற்றுக் கொண்டது. அத் தேர்தலுக்குப் பின்பான புதிய அரசாங்கத்தில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராகினார். அத்துடன் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் பதவிக் காலம் 2005ல் முடிவடைய இருந்தது. இக்காலப் பகுதியிலேயே சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் அவரது நம்பிக்கைக்குரியவராகவும் புலிகளை வெளிநாடுகளில் செல்வாக்கிழக்க வைத்தவருமான வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மண் கதிர்காமர் புலிகளால்

பக் 12 பார்க்க

தேசபக்தன்



எங்கெல்லாம் குறுகிய கால, நீண்ட கால இலக்குகளைப் பற்றிய ஒளிவு மறைவற்ற தெளிவும் உறுதியான ஆனால் விறைப்பற்ற ஒரு பொது வேலைத் திட்டமும் உறவுகளில் நேர்மையும் இருக்குமோ, அங்கெல்லாம் ஒரு கூட்டணி தான் சாதிக்க விரும்பியதையும் அதற்கு மேலாயும் சாதிக்கிறது.

# கூட்டணிகளும் கூட்டுச் செயற்பாடுகளும்

அரசியலில் கூட்டணிகளும் கூட்டுச் செயற்பாடுகளும் பல்வேறு சூழ்நிலைகளில் உருவாகின்றன. எவ்விதமான கூட்டணிக்கும் கூட்டுச் செயற்பாட்டுக்கும் ஒரு பொது நோக்கோ பொதுத்தேவையோ அவசியமாயும் அடிப்படையாயும் அமைகிறது. நோக்குக்களும் தேவைகளும் ஒரு கூட்டணியினது செயற்திறனையும் நிலைப்பையும் தீர்மானிக்கின்றன. கூட்டுச் செயற்பாடுகள் நீண்டகால நோக்கிலானவையல்ல. எனினும், தெளிவாக அடையாளங் காணப்பட்ட தேவைகளும் அச் செயற்பாட்டில் இணையும் மனிதரதும் அமைப்புக்களதும் குறிப்பான நோக்கங்களும் வெளிவெளியாக அறியப்பட்டு உடன்பாடு காணப்படும் போது, அந்த ஒத்துழைப்புப் பின்னர் வேறு நோக்கங்கட்காகவும் முன்னெடுக்கப்பட இடமுண்டு. பரந்துப்பட்ட அடிப்படையிலான உடன்பாடும் ஒத்துழைப்பும் தொடரும் போது, அமைப்புக்களிடையே கூட்டணிகளும் தெளிவான சமூக அரசியல் இலக்குக்களைக் கொண்ட நீண்டகால ஐக்கிய முன்னணிகளும் உருவாக இயலும்.

எங்கெல்லாம் குறுகிய கால, நீண்ட கால இலக்குகளைப் பற்றிய ஒளிவு மறைவற்ற தெளிவும் உறுதியான ஆனால் விறைப்பற்ற ஒரு பொது வேலைத் திட்டமும் உறவுகளில் நேர்மையும் இருக்குமோ, அங்கெல்லாம் ஒரு கூட்டணி தான் சாதிக்க விரும்பியதையும் அதற்கு மேலாயும் சாதிக் கிறது. மாறாக, ஒரு அமைப்போ ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புக்களோ இரகசிய வேலைத் திட்டங்களையோ குறுகிய நோக்கங்களையோ நிறைவேற்ற ஒரு கூட்டணியைப் பாவிக்கக் கருதும்போது, அக்கூட்டணி அதன் இலக்கை எய்தத் தவறுவதுடன் எதிர்பாரத்பதற்கு மாறான தீய விளைவுகளையும் சந்திக்க நேரிடுகிறது.

சந்தர்ப்பவாதக் கூட்டணிகள் பலவற்றை நாம் இலங்கையிற் கண்டுள்ளோம். எல்லாச் சந்தர்ப்பவாதக் கூட்டணிகளிலும், அவற்றின் உறுப்பு அமைப்புக்கள் (முக்கியமாக முற்போக்கானவை) தமது அடிப்படைக் கொள்கைக்கட்குத் துரோகமிழைப்பது தவிர்க்க இயலாதது. ஏனெனில் இத்தகைய கூட்டணிகள் பொதுப்படக் குறுக்கு வழியில் எதையேனும் சாதிப்பதை வேண்டியே உருவாகின்றன.

அடிப்படை முரண்பாடுகளைக் கொண்டிருந்த முதலாளிய அரசியற் கட்சிகளும் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் இலங்கையில் உருவாக்கிய கூட்டணிகள் யாவுமே பாராளுமன்ற ஆசனங்களை இலக்காகக் கொண்டவை. அவை ஈற்றில் இடதுசாரி இயக்கத்திற்கும் பெருங் கேடு விளைவித்ததை அறிவோம். முதலாளியக் கூட்டணிகளில் சிங்களப் பேரினவாதக் கட்சிகளும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்க் கட்சிகளும் இணைவதை நாம் காணுகிறோம். இவ்வாறான கூட்டணிகள் மூலம் ஆதிக்க நிலையிலுள்ள பிற்போக்குச் சக்திகளே வலுப்பெறுகின்றன. சில தனிமனிதர்கள் தம்மை வளப்படுத்திக் கொள்ளுகின்றனர். எனினும் சமூகத்திற்கு நன்மையாக எதுவும் நிகழுவதில்லை.

நமக்கு உடனடியாக முக்கியமானது, ஒருபுறம் நாட்டின் மக்களை உடனடியாக எதிர்நோக்கும் பிரச்சனைகட்கு முகங்கொடுப்பதுடன் குறுகியகாலப் பணிகளை நிறைவேற்றும் நோக்குடன் கூட்டணிகளையும் கூட்டுச் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதாகும். இன்னொருபுறம், அதைத் தொடர்ந்து, நாட்டின் மக்களது நீண்ட கால நலன்களை உறுதிப்படுத்த வல்ல ஒரு சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான கூட்டணிகளையும் கூட்டுச் செயற்பாடுகளையும் இயலுமாக்க வேண்டும்.

இடதுசாரிக் கட்சிகளே ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களினது சார்பில் பேசவும், செயற்படவும் வல்லவை. எனவே ஒரு இடதுசாரிக் கட்சிக்கு ஏற்ற கூட்டணி எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதைக் கவனிப்போம்.

இலங்கையின் இடதுசாரிக் கட்சிகள் மிகக் குறைந்தளவிலேயே ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இணைந்து செயற்பட்டுள்ளன. ஒரு பொது எதிரிக்கு மாறாக இணைவதற்கும் அவர்கட்கு இயலாது போனதைப் பலமுறை கண்டிருக்கிறோம். இடதுசாரிகள் தமது வலிமையைப் புலப்படுத்திய 1947 பொது வேலை நிறுத்தமும் 1953 ஹர்த்தாலும் ஒரு புரட்சிகர எழுச்சிக்கு வழிகோலாததற்குப் பல காரணங்கள் இருந்தபோதும், ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இணைய இயலாமையின் பங்கைப் புறக்கணிக்க இயலாது. குறிப்பிட்ட சில கட்சிகளும், தலைமைகளும் முதலாளியக் கட்சிகளுடன் ஐக்கியப்பட்டுக் கூட்டணிகளை ஏற்படுத்த ஆயத்தமாயிருந்தளவுக்குப் பிற இடதுசாரிகளுடன் இணைவு காண அக்கறை காட்டவில்லை என்பதை நாம் அறிவோம். தேசிய முதலாளியத்திற்கு முற்போக்கான ஒரு வரலாற்றுப் பணி உள்ளது என்பதை மறுத்த ட்ரொட்ஸ்கியவாதிகளே, முதலில் 1956இலும் பின்பு 1964இலும், தேசிய முதலாளியத்துடன் ஆட்சியிற் பங்காளிகளானார்கள். இரண்டாவது இணைவு தொழிலாளி வர்க்கம் ஐக்கியப்பட்ட ஒரு போராட்டத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது நிகழ்ந்ததையும் அதனால் நேர்ந்த இழப்பையும் நாம் அறிவோம். இதுவரை பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் பல்வேறு காரணங்களைக் கூறி முதலாளியக் கட்சிகளுடன் கூட்டணிகளை ஏற்படுத்தியுள்ள போதும், எந்த ஒரு கூட்டணியினது முனைப்பையும் தீர்மானிக்கும் ஆற்றல் இடதுசாரிகளின் கைகளில் இருந்ததில்லை. சரியாகச் சொல்வதானால், அரைச் சரணாகதி என்ற விதமாகவே 1977 வரையிலான இக் கூட்டணிகள் இருந்தன. அதன் பின்பு, தனித்து நின்று ஒரு தேர்தல் தொகுதியிலும வெல்ல இயலாத நிலையில் பாராளுமன்ற இடதுசாரிகள் ஸ்ரீ.ல.சு.கவிடம் முழுமையாகச் சரணடைந்து விட்டனர். தேர்தல் கூட்டணி அரசியல் என்பது, நடைமுறையில் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளை முதலாளிய அரசியற் கட்சிகளுள் கலந்து விடும் செயலாக மாறிவிட்டது.

இவற்றினின்று வேறுபட்ட ஒரு இடதுசாரிக் கூட்டணியை உருவாக்கும் முயற்சி 1998இல் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் போராட்ட அரசியலை மனதிற் கொண்டு உருவாக்கிய புதிய இடதுசாரி முன்னணி மாகாணசபைத் தேர்தலில் பெற்ற வாக்குகள் ஒரு வலுவான இடதுசாரி முன்னணியை மட்டுமன்றி வெகுசன இயக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கான சாடையாக அமைந்தன. எனினும், அதைத் தனது தனிப்பட்ட பதவி மோகத்திற்குப் பலியாக்க முற்பட்ட நவ சம சமாஜக் கட்சித் தலைவர், இடதுசாரி ஐக்கியத்திற்கும் ஆப்பு வைத்துப் போனதிலிருந்து கற்க வேண்டிய பாடங்கள் பலவுள்ளன. புதிய இடதுசாரி முன்னணியை உடைப்பதில் ஜே.வி.பியின் பங்களிப்பும் நமது கவனத்திற்குரியது.

ஒரு நேர்மையான இடதுசாரிக் கட்சி, பிற கட்சிகளுடன் கூட்டணிகட்கும் கூட்டுச் செயற்பாடுகட்கும் உடன்பட முன்பு, அக் கட்சிகளின் வர்க்க நிலைப்பாடு, வரலாற்றுப் பின்னணி, நீண்டகால-குறுகியகால நோக்கங்கள் போன்ற யாவற்றையும் கணிப்பில் எடுக்க வேண்டும் என்பதைப் புதிய இடதுசாரி முன்னணியின் தோல்வி நமக்குக் கற்பிக்கிறது.

அதே வேளை, புதிய இடதுசாரி முன்னணியை உடைக்க ஜே.வி.பி. கையாண்ட பிரித்தாளும் உபாயங்கட்கு இடங்கொடாமற் தவிர்த்ததன் மூலம் புதிய ஜனநாயகக் கட்சி (தற்போது பு.ஜ.மா.லெ.க) தனது மக்கள் அதரவுத்தளத்தை பேணிக் கொண்டதும் கவனிக்கத்தக்கது. ஸ்ரீ.ல.சு. கட்சியின் பின்னால் மக்கள் நிற்கிறார்கள் என்பதற்காக ஸ்ரீ.ல.சு.கவுடன் கூட்டணி அமைக்கப் பாராளுமன்ற இடதுசாரிகள் முந்தியதும் ஜே.வி.பியுடன் கூட்டணி ஏற்படுத்த நவசம சமாஜக் கட்சி முயன்று ஏமாந்ததும் ஏன் என்று ஆராய்ந்தால் ஐக்கிய முன்னணி என்பதன் அடிப்படைகளை அந்த இடதுசாரிக் கட்சிகள் தவற விட்டுவிட்டன என்பது தெளிவாகும்.

தனித்து நின்று தனது குறுகிய கால இலக்கை அடைய இயலாத போது, ஒரு அமைப்பு, பரந்துபட்ட முன்னணியையோ கூட்டணிகளையோ கூட்டுச் செயற்பாடுகளையோ நாடும் தேவைக்குட்படுகிறது. எந்த ஒரு கூட்டணியிலும் சில விட்டுக் கொடுப்புக்கள் தேவை. அவ் விட்டுக் கொடுப்புக்கள் ஒரு அமைப்பின் அடிப்படை நிலைப்பாட்டிற்கு முரண்படுமானால் அது நல்லதல்ல. ஒரு பொது எதிரிக்கு மாறானன போராட்டத்தில் விட்டுக்கொடுப்புக்கள் தேவை எனும் அதே வேளை, எதை எப்போது எதற்காக விட்டுக் கொடுப்பது என்பதிற் தெளிவு முக்கியமானது. அதேவேளை அத்தகைய விட்டுக்கொடுப்பு தற்காலிகமானதும் நிபந்தனைக்குட்பட்டதும் என்பதில் எவ்வித ஒளிவு மறைவும் இருக்கலாகாது.

**சுருங்கக் கூறின்,**

1. ஒரு கூட்டுச் செயற்பாடு ஒரு குறிப்பிட்ட உடனடி அல்லது குறுகிய காலம் பிரச்சினையில் உடன்படக்கூடிய அமைப்புக்களிடையே இயலுமானது. இவ்வாறான நடவடிக்கைகளை ஒரு தரப்புத் தவறான நோக்கங்கட்குப் பயன்படுத்தவும், அது பிறரைத் தனது நலனுக்காகப் பாவிப்பதைத் தவிர்க்கச் சில முன்னெச்சரிக்கைகள் தேவை.

   நடவடிக்கைகள் பற்றிய செயற்திட்டம் தெளிவாக இருக்க வேண்டும். ஒரு அமைப்புப் பிறவற்றின் மீது ஆதிக்கம் செலுத்த முனையும் போது, கூட்டுச் செயற்பாடு தவிர்க்கத் தக்கது.

   உதாரணமாக 1980களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்ட போது கம்யூனிஸ்ட் கட்சி (இடது) (இப்போது பு.ஜ.மா.லெ.க.) அதை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் போகத் திட்டமிட்டது. அதை அறிந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினர், இடது கம்யூனிஸ்ட்டுகளைத் தம்முடன் இணைந்து தமக்குப் பின்னால் ஊர்வலத்தில் வருமாறு கோரினர். இடது கம்யூனிஸ்ட்டுக்கள் அக்கோரிக்கையை மறுத்தனர். இங்கு இளைஞர் இயக்கங்களின் மேலாதிக்கப் போக்கு ஏற்க இயலாததாக இருந்ததாற், கூட்டுச் செயற்பாடு நிகழவில்லை. இருதரப்பினரும் வெவ்வேறாக எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தினர்.

2. ஒரு கூட்டணியை அமைப்பதற்கான ஒத்துழைப்பின் போது, எல்லா விடயங்களிலும் முழுமையான உடன்பாடுகாண இயலாவிட்டாலும், அடிப்படையான விடயங்களில் வரையறைக்குட்பட்ட உடன்பாடேனும் தேவை. அப்படியல்லாத கூட்டணிகள் சந்தர்ப்பவாதக் கூட்டணிகளாகச் சீரழிய நேரும்.

   உதாரணமாகத், தெளிவான சில கொள்கை, நடைமுறை உடன்பாடுகளின் அடிப்படையில் அமைந்த புதிய இடதுசாரி முன்னணி சீர்குலைந்த பின்னும், அதன் பிரதான பங்காளிகளாய் இருந்த புதிய ஜனநாயகக் கட்சியும், ஐக்கிய சோஷலிசக் கட்சியும் அச்சீர்குலைவால் உட்பாதிப்படையவில்லை. அது மட்டுமன்றி அவர்களுடைய நம்பகத் தன்மையும் பாதிக்கப்படவில்லை. பேரினவாதத்தை இம்மியளவும் விட்டுக் கொடுக்க மறுத்த ஜே.வி.பியுடன் கூட்டமைக்க நவசமசமாஜக் கட்சி எடுத்த இரண்டு முயற்சிகளும் நவசமசமாஜக் கட்சிக்கு ஏமாற்றத்தையே தந்தன. அவற்றின் மூலம் ஜே.வி.பி. நவசமசமாஜக் கட்சியைப் பலவீனப்படுத்தியது. அண்மையில் அக்கட்சி மனோ கணேசனுடன் கூட்டாளியாகியதன் நோக்கம் கொள்கை சார்ந்ததல்ல. வெறும் பதவி மோகத்தால் ஏற்பட்ட அக்கூட்டு இப்போது அக் கட்சியை முதலாளிய யூ.என்.பியின் பின்னால் அலைய வைத்துள்ளது.

   ஜே.வி.பி. போன்ற ஒரு பேரினவாதப் போலி இடதுசாரிக் கட்சி மக்களின் உரிமைக்கான போராட்டம் ஒன்றை முன்னெடுத்தால் அதிற் சம பங்காளிகளாக ஒரு மாக்சிச லெனினிசக் கட்சி பங்குபற்ற இயலும். பங்குபற்ற மறுப்பது மக்கள் விரோத நிலைப்பாடாகலாம். ஆனால் ஜே.வி.பியின் பின் சென்று தன் அடையாளத்தை இழப்பது தவறானது. அவ்வாறே, வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கைதிகளின் உரிமைகட்காகவோ, படை முகாம்களை நீக்கவோ குரல் கொடுத்துப் போராடினால் அதிற் சம பங்காளிகளாகப் பங்குபற்றலாம். ஆனால், விடுதலைப் புலிகளினவை போன்று, பிற அமைப்புக்களின் அடையாளங்களை மறுக்கும் போராட்டங்கள் எவ்வளவு நியாயமானவை என்றாலும் ஆதரவு தெரிவிப்பதற்கப்பால் பங்குபற்றதல் என்ற பேச்சுக்கே இடமிராது.

3. ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இணையவோ ஒரு கூட்டணியாகச் செயற்படவோ முற்படும் போது, அடிப்படையான சில விடயங்கள் தெட்டத்தெளிவாக்கப்பட வேண்டும். பொது வேலைத் திட்டமென்பது இணையும் அமைப்புக்களின் இடைப்பட்ட, குறுகியகால இலக்குகளை மனதிற்கு கொண்டே வகுக்கப்படுவது. உடனடியகவே சோசலிசப் புரட்சி என்று பேசுகிற கட்சிக்கும் புரட்சியின் கால கட்டங்கள் பற்றிப் பேசுகிற கட்சிக்கும் இடையே பொது வேலைத் திட்டம் ஒன்று வகுப்பது எளிதல்ல. எனினும் குறுகியகால உடன்பாடு ஒன்று இயலுமானது.

   பிரதான முரண்பாடான தேசிய இன முரண்பாடு பற்றி எதிர்த் துருவங்களில் நிற்கிறக் கட்சிகளிடையே ஒரு பொது வேலைத்திட்டம் மிகக் கடினமானது. பேரினவாத அரசியலிலிருந்து மீளுவதற்குத் தடுமாறுகிற ஒரு அமைப்பு அந்தத் தவறைத் திருத்த

>>12

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு 39

**இமயவரம்பன்**

## பாராளுமன்ற இடதுசாரிகளின் பொருளாதாரச் சிந்தனைக் குழப்பம்



**தன்னிறைவு என்பது இலங்கை போன்ற ஒரு நாட்டின் பூரணமான இறக்குமதித் தடைமூலம் பெறக்கூடியதல்ல. எவற்றைத் தம் தேவை கருதி இறக்குமதியாக்குவது, எவற்றை ஏற்றுமதியாக்குவது என்பன தெளிவான ஒரு பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் முடிவாகாவிடின், நாட்டின் தன்னிறவைக் கருதி மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி முயற்சிகளும் பாதிக்கப்படும் என்பதை 1970களின் நடுப்பகுதியிற் காண முடிந்தது.**

ஐக்கிய முன்னணி அரசாங்கம் தன்னை ஒரு சோசலிச அரசாங்கமாகக் காட்டிக் கொள்ள முற்பட்டபோதும் அதன் பிரதான அரசியற் கட்சி ஒரு தேசிய முதலாளியக் கட்சியாகும். அதற்கு ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் பரிமாணம் இருந்தது. 1950களிலும் 1960களிலும் உலகளாவ நடந்த கொலனிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களின் காரணமாகவும், குறிப்பாகச் சிங்கள மக்கள் மத்தியில் ஓங்கியிருந்த தேசிய உணர்வில் ஒரு மேற்குலக விரோதப் பரிமாணம் இருந்ததன் காரணமாகவும் தேசிய முதலாளியக் கட்சியான ஸ்ரீ.ல.சு.க. அப் போக்குக்களை உள்வாங்கியிருந்தது. எனினும் ஸ்ரீ.ல.சு. கட்சியால் மக்களினதும் நாட்டினதும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க இயலவில்லை. சர்வதேசத் தளத்தில் ஏகாதிபத்தியப் பொருளாதார ஆதிக்கத்திற்கு எதிராகத் தாக்குப் பிடிக்க உள்நாட்டில் வலுவான ஒரு தேசியப் பொருளாதாரம் தேவைப்பட்டது. வணிக உறவுகளையும் அபிவிருத்திக் கொள்கைகளையும் உலக ஏகாதிபத்திய முறையினின்று விலக்கிக் கொள்ளவுமான ஒரு தேவை இருந்தது. அதற்குத் தலைமை தாங்கும் ஆற்றல் இலங்கையின் தேசிய முதலாளியத்திற்கு இருக்கவில்லை. எனவே சனரஞ்சகமான சில கொள்கைகளையும் பேரினவாத அரசியலையும் கொண்டு அது ஒரு வகையான சீர்திருத்த அரசியலை முன்னெடுத்தது.

1956இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காலத்திலிருந்தே மேற்குலக நாடுகள் ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான ஆட்சியைச் சந்தேகத்துடன் நோக்கி வந்தன. முதலில் பிலிப் குணவர்த்தனவின் தலைமையிலான புரட்சிகர சமசமாஜக் கட்சியுடனான கூட்டணியும் பின்பு 1964இல் சமசமாஜக் கட்சியுடனான கூட்டரசாங்கமும் சோசலிச நாடுகளுடனான நட்புறவும் மேற்குலகில் இலங்கையை சோசலிசப் போக்குடைய நாடாகக் கருத இடமளித்தது. எனினும், மேற்குலகின் பகைமை, இலங்கையைத் தனது தேசிய நலன் கருதிச் சில ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டியது. அதற்கப்பால் இலங்கையை ஒரு சோசலிச நாடாக்குவதற்கு ஸ்ரீ.ல.சு.கவுக்கு ஒரு நோக்கமும் இருக்கவில்லை.

1964ம் ஆண்டு வரை, ஸ்ரீ.ல.சு.க தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட தேசியமயமாக்கலில் போக்குவரத்துச் சேவையினதும், வங்கி, காப்புறுதித்துறைகளின் அரசுடைமையாக்கலை விட்டால் உற்பத்தியுறவு முறையில் அடிப்படை மாற்றம் எதுவும் இருந்ததாகக் கூறமுடியாது. எனினும் 1960களிற் தொடங்கி அரசாங்கத்தின் கீழான பல்வேறு தொழிற்துறைகள் தொடக்கப்பட்டன. எனவே அரச கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுத்தாபனங்கள் உற்பத்தித் துறையில் கணிசமான ஆதிக்கம் செலுத்தின.

தோட்டங்களின் தேசிய மயமாக்கல் மட்டுமே தனியார் துறையிலிருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுக்கான முக்கிய நகர்வு எனலாம். ஆனால் அது தொழிலாளர் நலன் சார்ந்த பெயர்வு அல்ல என முன்பு கண்டோம். எனவே அரச கூட்டுத்தாபனங்களின் பெருக்கம் எவ்வகையிலும் சோலிசத்திற்கான ஒரு நகர்வாக இருக்கவில்லை. அதைவிடவும், பல அரச கூட்டுத்தாபனங்களிலும் உயர் பொறுப்புக்களை வகித்தோர் அரசியற் காரணங்கட்காக நியமிக்கப்பட்டவர்களாக இருந்தனர். உண்மையான சமூக அக்கறையுடையோராகவும் தமது தொழிற்துறை சார்ந்த ஆற்றல் உடையோரயும் வெகு சிலரே இருந்தனர் எனலாம். சில கூட்டுத்தாபனங்களின் செயற்பாடு அந்நிய மூலதன ஊடுருவலுக்கும் கட்டுப்பாடற்ற இறக்குமதிக்கும் தடையாயிருந்தது உண்மை. எனினும் அரசாங்கத்தின் பொருளாதார இலக்குகளும் அளவுகோல்களும் ஒரு திட்டமிட்ட தேசியப் பொருளாதார அடிப்படையில் அமையவில்லை என்பது கவனத்திற்குரியது.

சமசமாஜக் கட்சியின் தலைவரான என்.எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்ததால் அக் கட்சியினரிடையிலும் ஐ.மு. அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் பலரிடையிலும் அவர் சோசலிச நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. சமசமாஜக் கட்சி உண்மையிலேயே அரசாங்கத்தை சோசலிசப் பாதையில் நகர்த்தும் என்று சமசமாஜக் கட்சியின் முக்கியமான பொறுப்புக்களில் இருந்தவர்களும் சொல்லி வந்தார்கள். அவர்கள் அரசு பற்றியும் அதன் வர்க்கத் தன்மை பற்றியும் எவ்வளவு குழம்பி இருந்தார்கள் என்பதையே அது சுட்டிக்காட்டியது. அவர்களிற் சிலர் தம்மை முக்கிய ட்ரொஸ்கிய மாக்சியவாதிகள் என்று அறிவித்துக் கொண்டவர்கள் என்பது கவனத்துக்குரியது.

என்.எம். பெரேரா 1970ம் ஆண்டு கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக 50,100 ரூபா தாள்களைச் செல்லுபடியற்றதாக்கினர். அது கறுப்புப் பணத்தை ஒழிக்கவில்லை. 1971ம் ஆண்டு ஜே.வி.பி. எழுச்சிக்குப் பின்பு சில கோமாளித்தனமான அரசுடைமையாக்கல்களும் நிகழ்ந்தமை உணவு விடுதிகள் சிலவும் அரசியல் காரணங்கட்காகத் தேசியமயமாக்கப்பட்டன. தோட்டங்களின் தேசியமயம் தோட்டங்களில் ஒரு புதிய அதிகாரவர்க்கத்தை அதிகாரத்தில் அமர்த்தி தோட்டத் தொழிலாளர்கட்கு மேலும் பாதகமான ஒரு சூழலையே ஏற்படுத்தியது. அதைவிட அதை இயலுமாக்கிய காணி உச்சவரம்புச் சட்டமொன்றின் கீழே பலருடைய தென்னந்தோட்டங்கள் உட்பட்ட காணிகள் சுவீகரிக்கப்பட்டன. எனினும் இந்த உச்ச வரம்பு சில நிலவுடைமையாளர்களை அதிகம் பாதிக்காத விதமாகக் கம்பனிகளாகப் பதிவு செய்யப்பட்ட காணிகட்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டன.

இக் காலகட்டத்தில் அரசாங்கத்தில் ஒட்டியிருந்த இடசாரிக் கட்சிகள் அரசியற் பின்னிடைவுகள் பலவற்றைச் சந்தித்தன. இரண்டு கட்சிகளின் தொழிற்சங்களிலிருந்தும் தலைமை உறுப்பினர்கள் உட்படப் பலர் ஸ்ரீ.ல.சு.க. தொழிற்சங்கங்கட்கு மாறினர். அக் கட்சிகளின் ஆதரவாளர்களும் உறுப்பினர்களும் தம்மை ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு நெருக்கமாக்கிக் கொண்டனர். இக் கட்சிகளும் அவை சார்ந்த தொழிற்சங்களும் தமது வளர்ச்சிக்குத் தமது அரசியல் அதிகாரத்தில் தங்கியிருந்ததும் அதன் மூலம் தமது ஆதரவாளர்கட்கு அரசாங்கப் பதவிகள், உத்தியோகங்கள், இடமாற்றங்கள், புலமைப்பரிசில்கள் உட்பட்ட பலவாறான சலுகைகளையும் வசதிகளையும் பெற்றுக்கொடுக்க முற்பட்டமையும் இதற்கு மேலும் உதவியது. ஏனெனில் சலுகைகளை நாடுவோருக்கு ஸ்ரீ.ல.சு. கட்சியிடமிருந்து பெறக் கூடியன அதிகமாக இருந்தன.

1971 எழுச்சிக்குப் பின்பு அரசாரங்கம் இளைஞர்களின் பிரச்சினைகளைப் பற்றிச் சிறிது கவனங் காட்டியது. ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களில் ஒரு சிறு பகுதியினர் தவிர்ந்த ஏனையோர் விடுவிக்கப்பட்டு அவர்கட்கான பொருளாதாரப் புனர்வாழ்வுத் திட்டங்கள் சில வகுக்கப்பட்டன. எனினும், நாட்டின் பொருளாதாரம் தேக்க நிலையிலேயே தொடர்ந்தது. அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு, 1974இல் ஏற்பட்ட எண்ணெய் விலை உயர்வால் மேலும் மோசமாகியது. இக் காலத்தில் ஏற்பட்ட வரட்சி தோட்ட உற்பத்திகளையும் நெல் விளைச்சலையும் பாதித்தது. அதே வேளை, கொழும்பிலும் தோட்டங்களிலும் மட்டுமன்றிச் சிறு நகரங்களிலும் கோதுமைப் பாவனை அதிகரித்திருந்த நிலையில், அமெரிக்காவிலிருந்து சலுகை விலையிற் பெறப்பட்ட (அமெரிக்க மேலதிக உற்பத்தியான) கோதுமை மா இறக்குமதி 1974இல் மிகவும் குறைக்கப்பட்டிருந்தது. எனவே உணவுப் பொருட் தட்டுப்பாடும் ஒரு பாரிய பிரச்சினையாயிற்று. இச் சூழலில் அந்நியச் செலாவணியை மீதப்படுத்துவது நாட்டின் பொருளாதாரக் கொள்கையில் ஒரு முக்கிய அம்சமாகியது. பலவாறான நுகர்பொருட்களது இறக்குமதிகள் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டன. இவற்றற் கிழங்கு, வெங்காயம், மிளகாய் வற்றல் போன்றவற்றின் இறக்குமதிக் கட்டுப்பாடு உள்ளூரில் அவற்றை உற்பத்தி செய்யுமாறு விவசாயிகளை ஊக்குவித்தது. இது சிறு விவசாயிகளின் பொருளாதாரத்தின் உயர்ச்சிக்கும் உதவியது. அரிசித் தட்டுப்பாட்டின் காரணமாக மரவள்ளிப் பயிர்ச் செய்கை ஊக்குவிக்கப்பட்டது. எனினும் மேற்கூறிய எவையுமே திட்டமிட்ட பொருளாதாரம் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அதேவேளை, சில தொழிற்துறைகள் சோசலிச நாடுகளின் உதவியுடன் விருத்தியாயின. எவ்வாறாயினும் 1971 கிளர்ச்சிக்குப் பிற்பட்ட காலத்தில் அரசாங்கத்தினுள் வலதுசாரிப் போக்குகள் வலுப்பட்டு வந்தன. அனுர பண்டாரநாயக்கவை மையப்படுத்தி அவை வெளிப்பட்ட போதும், பொதுப்பட, இடதுசாரிகளின் செல்வாக்கு அரசாங்கத்தினுள் சரியத் தொடங்கியமைக்கு அவர்கள் வெகுசன அரசியலிலிருந்து வெகுதூரம் விலகிமையே முக்கிய காரணம் எனலாம்.

அன்றைய இலங்கையின் பொருளாதாரத்தை சோசலிசப் பொருளாதாரம் என்று அழைப்பது சோசலிச எதிரிகளிடையே வழமையாயிற்று. ஒருபுறம் வணிகம் தவிர்ந்த பொருளாதாரத் துறைகளில் அரசாங்கமே பெரும் பங்கு வகித்தது. ஆயினும் அதற்கு முந்திய யூ.என்.பி. ஆட்சிக்காலங்களிலும் தனியார் முதலீட்டுடன் தொடங்கிய பெரிய தொழில்கள் எதுவும் இல்லை என்பது கூறப்படுவதில்லை. மறுபுறம் அந்நியச் செலவாணிப் பிரச்சினையைச் சமாளிக்க எடுத்த நடவடிக்கைகள் பலவகையான நுகர்பொருள்கட்கும் இடையிடையே அத்தியாவசியப் பொருள்கட்கும் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. சோசலிசத்தின் எதிரிகள் இதைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர்.

திட்டமிட்ட ஒரு பொருளாதாரக் கொள்ளை இல்லாது தொழிலாளர்களின் கட்டுப்பாட்டிலன்றி உயர் அதிகாரிகளின் கையில் தொழில் நிறுவனங்களை இருப்பது சோசலிகமாகாது என்பது மாக்சிய லெனினியர்களால் வலியுறுத்தப்பட்டாலும் பாராளுமன்ற இடதுசாரிகள் பலரும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை சோசலிச அரசாங்கம் என்று கூறத் தயங்கவில்லை. அதன் பயனாக சோசலிசம் என்றால் அதிகாரக் கெடுபிடிகளும் வினைத்திறனற்ற நிருவாகமும் உற்பத்திப் பண்டங்கட்குத் தட்டுப்பாடும் என்ற எண்ணம் நகர்சார்ந்த மக்களிடையே வலுவாகியது.

தன்னிறைவு என்பது இலங்கை போன்ற ஒரு நாட்டின் பூரணமான இறக்குமதித் தடைமூலம் பெறக்கூடியதல்ல. எவற்றைத் தம் தேவை கருதி இறக்குமதியாக்குவது, எவற்றை ஏற்றுமதியாக்குவது என்பன தெளிவான ஒரு பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் முடிவாகாவிடின், நாட்டின் தன்னிறவைக் கருதி மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி முயற்சிகளும் பாதிக்கப்படும் என்பதை 1970களின் நடுப்பகுதியிற் காண முடிந்தது. எவ்வாறாயினும், பல குறைபாடுகட்கும் இடையே இலங்கையில் விவசாயத்துறையிலும் தொழிற்துறையிலும் சுயசார்ப்புக்கு உடன்பாடான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை வரவேற்கத்தக்கன. ஆனாற் போதியனவல்ல. அவை ஒரு திட்டமிட்ட பொருளாதாரத்துக்குரியன அல்ல என்பதும் எவ்வகையிலும் சோசலிச நோக்குடையன அல்ல என்பதும் ஐ.மு. ஆட்சி சோசலிச ஆட்சி அல்ல என்பதும் மீள வலியுறுத்தப்பட வேண்டியவை.

# சீரழிக்கப்படும் சுகாதாரத்துறை

## வறியவர்களுக்கு மறுக்கப்படும் இலவச சுகாதார சேவை

ஒரு நாட்டை வழிநடாத்தும் மக்கள் சார்பு அரசாங்கம் என்றால் அது கவனத்தில் கொள்ள வேண்டிய துறைகளில் முதன்மையானது கல்வியும் சுகாதாரமும் ஆகும். அதனாலேயே சோஷலிச அமைப்புக்களில் கல்வியும் சுகாதாரமும் சமூகத்தின் இரண்டு கண்கள் போன்று பேணி பாதுகாக்கப்பட்டு அது நாட்டின் சகலருக்கும் இலவசமாக சென்றடைவது உறுதி செய்யப்பட்டு வந்தது. ஆனால் சகல துறைகளிலும் தனியார் மயத்தையும் அந்நிய மூலதனத்தையும் செங்கம்பளம் இட்டு வரவேற்கும் எமது நாட்டின் தரகு முதலாளித்துவ அரசுகளுக்கு இத்துறைகள் பற்றிய அக்கறை சற்றேனும் இல்லாதிருப்பதுடன் அவற்றை சீரழிவுப் பாதைக்கும் இட்டு வந்துள்ளன.

தொடர்ந்து வரும் சுகாதாரத்துறையின் மீதான தனியார் துறை மற்றும் அந்நிய முதலீடு எமது சுகாதாரத் துறையை முழுமையாக தனியார் மயப்படுத்தி அதனை இலாபம் கொழிக்கும் துறையாக மாற்றுவதற்கான நிகழ்ச்சி நிரலின் தொடர்ச்சியேயாகும். இது சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றன விதிக்கும் கடன் நிபந்தனையான அரசப் பொது செலவினத்தில் இலவச சேவைகளுக்கான ஒதுக்கீடுகளை முழுமையாக இல்லாது செய்து அவற்றில் தனியார் முதலீட்டுக்கான வாய்பை ஏற்படுத்த வேண்டும் என்பதன் அமுலாக்கமேயாகும். ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாக கொக்கரிக்கும் மகிந்தவின் அரசு *IMF*, உலக வங்கிகளினதும் ஏகாதிபத்தியங்களினதும் நிபந்தனைகளையும் திட்டங்களையும் முன்னைய அரசாங்கங்களை விட மிக ஒழுங்காகவும் விரைவாகவும் செய்கின்றது.

அரசு 2013ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துறைக்கான ஒதுக்கீடாக 12,500 கோடி ரூபாவை மட்டுமே ஒதுக்கியுள்ளது. எனினும் யுத்தம் முடிந்த நிலையில், பாதுகாப்புக்கென்று 29,000 கோடி ரூபாய் 2013ம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ளமை இந்த அரசு எதை நோக்கிச் செல்கின்றது என்பதனை காட்டுகின்றது. இலங்கையின் சுகாதாரத்துறையை மக்களின் தேவைகளுக்கு ஏற்ப சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கு தற்போதுள்ள டாக்டர்களின், தாதியரின் எண்ணிக்கையை அதேயளவு எண்ணிக்கையால் அதிகரிக்க வேண்டுமென சுகாதாரத் துறை தொழிற்சங்க பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டிருந்தார். 14,000 டாக்டர்களையும் 25,000 தாதியர்களையும் சேவையில் இணைத்தால் மட்டுமே இன்றைய சுகாதார சேவையை சீருக்குக் கொண்டு வரலாம் என்று கூறப்படுகிறது.

இலங்கையில் 20 வீதமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கண்பார்வை சிறுநீரகம் என்பன பாதிக்கப்படலாம். அரச மருத்துவமனைகளில் கண்பார்வை பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்காக மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. ஒரு மருத்துவர் ஒரு நோயாளியின் கண்களைப் பரிசோதிப்பதற்கு ஒரு சில நிமிடங்களே செலவிடக் கூடியதாய் உள்ளது. நோயாளர்கள் அதிகரித்துள்ள அளவிற்கு மருத்துவர்கள் போதாமையே இந்த நிலைக்குக் காரணம்.

தினமும் நூறுபேர் நீரிழிவு நோயின் பாதிப்பால் இலங்கையில் மரணிக்கின்றனர். டெங்கு நோயை எடுத்துக்கொள்வோம். 2010ம் ஆண்டில் 34,105 பேரும், 2011ல் 28,473 பேரும், 2012ம் ஆண்டு நவம்பர் நடுப்பகுதிவரை 37500 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச தகவல் கூறுகிறது. டெங்கு பரவலைத் தடுக்க கியூபாவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட *BTT* பக்றீரியா உரிய முறையில் தெளிக்கப்படவில்லையென்று அரசு ஒத்துக்கொள்கிறது. இதைத் தெளிப்பதில் அரசுக்கென்ன இடைஞ்சல்? விடை எளிது, நுளம்புச் சுரள் மற்றும் நுளம்பு வலை கம்பனிகளின் கடும் அழுத்தத்தின் காரணமாகவே அவை தெளிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. நாடுபூராவும் உள்ள குப்பைக் கூழங்கள் முறையாக அகற்றப்படுவதில்லை. கோடிக் கணக்கில் செலவிட்டு கட்டப்பட்ட வடிகால்கள் உரியபடி சுத்திகரிக்கப்படுவதில்லை.

2011ம் ஆண்டில் அரச வைத்தியசாலைகள் கொள்வனவு செய்த மருந்துவகைகளில் 97கோடியே 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருந்துகள் தரம் குறைந்தவை எனக் கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில் கூறியுள்ளார். இதே ஆண்டில் 410 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகள் திறந்த சந்தையில் வாங்கப்பட்டதாகவும் அதன்போது 140 கோடி ரூபாய்கள் மருந்து வழங்கல் பிரிவிற்கு நட்டம் ஏற்பட்டதாகவும் கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அரச வைத்தியசாலைகளில் தரம் குறைந்த மருந்துகளைப் பயன்படுத்தியதால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் குடும்பங்களுக்கு 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் (5,687,500) ஐம்பத்தாறு இலட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபா நட்டஈடு வழங்கப்பட்டது.

இலங்கை மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் தயாரித்த சத்திரசிகிச்சைக்கு தேவையான பஞ்சு, லின்ட் போன்றன தரக்குறைவாய் இருந்தமையால் 19 இலட்சம் பெறுமதியான நுகர்வு பொருள்களும், தரக்குறைவான 33 இலட்சம் பெறுமதியான மருந்துகளையும் மருத்துவ கொள்வனவு பிரிவு நிராகரித்துள்ளது. தரமற்ற அமெரிக்காவின் கூட்டுக் குளிசையை இறக்குமதி செய்த இலங்கை ஔடதப் பொருள் கூட்டுத்தாபனம், அந்த மருந்துத் தொகுதியை இந்த நாட்டுக்கு அனுப்பிய நிறுவனத்திடமிருந்து 1 கோடி 20 இலட்சம் ரூபாவை நட்டஈடாகக் கோர வேண்டும் எனக் கணக்காய்வாளர் நாயகம் கேட்டுக் கொண்ட போதும் அது தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தை நவீனமயப்படுத்தி அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்தினால் நீரிழிவு நோய் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட இருதய நோய் போன்றவற்றிற்கு தேவையான மருந்துகளை இங்கேயே உற்பத்தி செய்யலாம். நாட்டில் 20 வீதமான மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தேவையான மருந்துகளை ஏன் இலங்கை மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் தயாரிக்க முடியாது? புற்றுநோயை எடுத்துக்கொண்டால், பிரதான புற்றுநோய் சிகிச்சை மையமான மகரகம மருத்துவமனையில் தரமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்கள் அமர்வதற்குக் கூட உரிய வாங்கில்கள் இல்லை. புற்றுநோயாளர்கள் மணிக்கணக்கில் நிலத்தில் இருக்க வேண்டும்.


அச்சனா பிரியதர்ஷினி

**சீரழிந்து செல்லும் சுகாதார துறையை சீரமைப்பது என்பது தனியார் மயமாக்கலினாலோ அந்நிய முதலீட்டினாலோ சாத்தியமாகாது என்பதுடன் அவை அவற்றை மேலும் சீரழிவுக்கு இட்டு செல்வதுடன் வறியவர்களுக்கு இலவச மருத்துவ சேவையை மறுக்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற ஏகாதிபத்திய தரகு நிறுவனங்களின் மூன்றாம் உலக நாடுகள் மீதான சதித்தனமான நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியேயாகும்.**

மார்பக, சூலகப் புற்றுநோய்களுக்கு தேவையான டொசெற்ரக்சல் *(Docetaxel)*ஐ ஒரு நாளைக்கு ஆறுதடவை என மூன்று வார இடைவெளியில் கெமோ தெரப்பியுடன் பயன்படுத்த வேண்டும். ஒரு குப்பியின் விலை 14,000 ரூபா. ஆறு தடவைக்கும் 84000 ரூபா தேவை. வசதியுள்ளவர்கள் தனியார் மருந்தகங்களில் இதை வாங்கி வருகின்றனர். வாங்க முடியாதவர்களுக்கு தரம் குறைந்த மருந்துகளைக் கொடுக்கின்றனர். வெளியே தரமான மருந்துகள் இருக்கையில் அதனை அரசு ஏன் இறக்குமதி செய்ய முடியவில்லை? பந்தயக் கார் இறக்குமதிக்கு வரிச்சலுகை செய்தவர்களுக்கு மருந்துகள் இறக்குமதி செய்ய மட்டும் பணப் பஞ்சம்?

தரம் குறைந்த மருந்துகளை புற்றுநோயாளருக்கு பயன்படுத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் 2012 நவம்பர் மாதத்தில் நியூ போஜென் *(Neupogen)* என்ற மருந்துக்கு மாற்றான தரம் குறைந்த மருந்து அரசாங்க மருத்துவமனைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த மருந்து 2013 ஆகஸ்ட் வரை கொள்வனவு செய்யப்படவுள்ளது. இந்தக் கொள்வனவுக்கு பின்னால் யார் உள்ளனர்? தரம் குறைந்த பெற்றோலியத்தை இறக்குமதி செய்து வாகனங்களை செயலிழக்கச் செய்தவர்கள் இன்று தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்து மக்களின் உயிர்களைப் பறிக்கின்றனர்.

இன்று அரச சுகாதார சேவையின் மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் விதமான நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணமே உள்ளன. மருத்துவர்களினதும் தாதியர்களினதும் கவனக் குறைவானது முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அதிகரித்துச் செல்கின்றது. மருத்துவர்கள் அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் நேரம் தவிர்ந்த நேரங்களில் தமக்கு சொந்தமான சிறு வைத்திய நிறுவனங்களிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் வேளை செய்கின்றனர். இதில் இயல்பாகவே அவர்கள் பணம் கொட்டும் தனியார் வைத்தியசாலைகளிலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர்.

அரச வைத்திய சாலைகளில் காணப்படுகின்ற கவனக்குறைவானது நோயாளர்களின் நிரந்தரமான உடலுறுப்பு இழப்பிற்கும் மரணத்திற்கும் இட்டுச் சென்றுள்ளன. அண்மையில் மாத்தறையின் மிகப் பின்தங்கிய பிரதேசத்தில் இருந்து கொழும்பு சட்ட பீடத்தின் இறுதியாண்டில் கல்வி கற்கும் மாணவி அச்சலா பிரியதர்ஷினி கீழே விழுந்த தால் ஏற்பட்ட எழும்பு முறிவிற்காக மாத்தறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் வைத்தியர்களின் கவனக் குறைவான தும் முறையற்றதுமான சிகிச்சையினால் அவரின் இடது கை கொழு ம்பு தேசிய வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மூலம் துண்டிக்கப் பட்டது. அம்மாணவி இடது கைப் பழக்கம் உள்ளவர் என்பது கவனத் திற்குரியது. உண்மையில் அவர் சட்ட பீட மாணவியாக இருந்த கார ணத்தினாலேயே பெரும் சர்ச்சையானது. எனினும் இவ்வாறான பல் வேறு சம்பவங்கள் அரசாங்கத்தினாலேயே ஊடகங்களின் கவனத் திற்கும் வெளியுலகிற்கும் தெரிய முன்னர் நடந்த இடத்திலேயே மூடி மறைக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் அரசு வைத்திய சாலைகளில் நாள்தோறும் பல மில்லியன் நோயாளர் சிகிச்சைப் பெற்று குணமடைந்து செல்லும் போது இது போன்ற ஒரு சில விடயங்களை பெரிதுப்படுத்த தேவையில்லை என திமிர்த்தனமாக கருத்து வெளியிட்டுள்ளார். எனினும் மாணவியின் பிரச்சினை ஒரு தலைவலியாக மாறியுள்ளதால் சுகாதார அமைச்சர் வழமைப் போல் 4 பேர்க் கொண்ட விசாரணைக் குழுவை அமைத்துள்ளார். அரசியல் கட்சிகளும் தமது பங்கிற்கு அதனை தமது தேவைக்காக பயன்படுத்தி வருகின்றன. அரச வைத்தியசாலைகளின் கவனக்குறைவால் இன்று இம்மாணவியைப் போல் பலபேர் முடமாகி இருக்கின்றனர். அதே போன்று புற்றீசல்கள் போல பெருகி வரும் தனியார் மருத்துவமனைகளிலும் கவனக்குறைவாலும் அசட்டைத்தனத்தாலும் நாளாந்தம் பலர் பாதிப்படைந்து வருகின்றனர். அன்மையில் கொழும்பில் உள்ள பிரபலத் தனியார் மருத்துவமனையொன்றில் 5 வயது சிறுமியொருத்தி தாயின் கண்முன்னேயே வைத்தியர்களின் கவனக்குறைவால் உயிரிழந்துள்ளார். *MRI Scaning* நோய்ப் பரிசோதனையில், சோதனை இயந்திரத்தினுள் குழந்தை உள்ளே அனுப்பபட்ட நிலையில் அதனுள் உள்ள பரிசோதனை பலூன் வெடிப்படைந்த நிலையில் குழந்தை மரணமடைந்துள்ளது.

சுகாதாரத்துறையில் தொடரும் தனியார் மயத்தால் மருத்துவக் கம்பனிகளும் இறக்குமதி தரகர்களும் மூலம் கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கின்றனர். பார்மா நிறுவனம் 2012 மார்ச்மாதம் முடியவுள்ள கணக்காண்டில் 12 கோடி 90 இலட்சம் மொத்த லாபம் ஈட்டியுள்ளது. கொழும்பு பார்மசி 8 கோடி 55 இலட்சத்தை மொத்த லாபமாகச் சென்ற நிதியாண்டில் பெற்றுள்ளது. இவை கணக்கில் வந்த மிக சொற்ப அளவே.

வெளிநாட்டு நிபுணர்கள் என்ற பெயரில் மருத்துவர்கள் பெரும்பாலும் இந்தியாவிலிருந்தே இங்கு வந்து கடமையாற்றுகின்றனர். இலங்கை மருத்துவ கவுன்சிலே அவர்களின் தகைமைப் பற்றி பரிசீலித்து அனுமதி வழங்குகிறது. இந்தவிடயம் உயர்நீதிமன்றம் வரை சென்றது. முன்பு ஒரு வருடத்திற்கு அனுமதி வழங்கிய கவுன்சில் விண்ணப்பதாரிகளின் தகைமை தொடர்பான சர்ச்சையைத் தொடர்ந்து அனுமதியை சிலமாதங்களுக்கு வரையறை செய்தது. இலங்கை மருத்துவ கவுன்சிலின் பதிவாளர் டாக்டர் என்.ஜே. நோனிஸ் "இருதய சிகிச்சை செய்த ஒரு சத்திர சிகிச்சை வைத்திய சத்திர சிகிச் சையைத் தொடர்ந்து எந்த நேரத்திலும் குறித்த நோயாளியைக் கவனிப்பதற்கு தயார்நிலையில் இருக்க வேண்டும்" என்கிறார். ஆனால் தனி யார் மருத்துவமனைகளில் தங்கிச் சிகிச்சை பெறும் 70 வீதமான நோயாளர்களை மருத்துவமனைகளில் தங்கியிருக்கும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அனுபவமற்ற, குறைந்த தகைமையுடைய வெளிநாட்டு டாக்டர்களே நோயாளியைக் கவனிக்க நியமிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலையும் டாக்டர் நோனிஸ் குறிப்பிட்டார்.

இன்று மருத்துவத் துறையில் சர்வதேசரீதியிலும் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளிலும் மருத்துவ மாபியாக் கும்பல்களே கொடிகட்டிப் பறக்கின்றனர். மக்கள் உரிய மருத்துவம் இன்றி மடிகின்றனர். மேலும் உடல் உறுப்புக்களை திருடும் சிவப்புச் சந்தையும்*(Red Market)* விரைவாக விரிவாகி வருகின்றது. சுகாதாரத்துறை, கல்வித்துறைப் போன்ற துறைகள் தரகு முதலாளிய அரசியல்வாதிகளால் திட்டமிட்டே சீரழிக்கப்படுவதுடன் அவை தங்க முட்டையிடும் வாத்துகளாகவும் நிதி முதலீட்டாளர்களால் பார்க்கப்படுகின்றன. அரசுகள் தமக்கு கீழிருக்கும் துறைகளை தமது ஊழலாலும் மோசடியாலும் தாமே சீரழித்துவிட்டு அவற்றை நட்டத்தில் ஓடுகின்றது எனக் காட்டி வினைத்திறனானதும் விளைதிறனானதுமான செயற்பாட்டுக்கு தனியார்மயமே ஒரேவழி என நிதி மூலதனம் போடும் எச்சில் எலும்புகளுக்காகப் பிரச்சாரம் செய்கின்றனர்.

சீரழிந்து செல்லும் சுகாதார துறையை சீரமைப்பது என்பது தனியார் மயமாக்கலினாலோ அந்நிய முதலீட்டினாலோ சாத்தியமாகாது என்பதுடன் அவை அவற்றை மேலும் சீரழிவுக்கு இட்டு செல்வதுடன் வறியவர்களுக்கு இலவச மருத்துவ சேவையை மறுக்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற ஏகாதிபத்திய தரகு நிறுவனங்களின் மூன்றாம் உலக நாடுகள் மீதான சதித்தனமான நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியேயாகும். சீரழியும் அரசு துறைகளைத் தனியார் மயமாக்கினால் சீராகிவிடும் என்ற பொதுக் கருத்தை வாக்கு சீட்டு அரசியல் வாதிகளும் அவர்களின் முகவர்களான ஊடகங்களும் உருவாக்குகின்றன. இக்கருத்து திட்டமிட்டு மக்களிடம் நம்பவைக்கப்படுகின்றது. தனியார்மய, தாராளமய கொள்கையையும் உலக மயமாக்கலையும் எதிர்ப்பதன் மூலமும் தரகு முதலாளிய அரசுகளை போராடி வீழ்த்துவதன் மூலமுமே நாம் நமக்கான சுகாதாரத் துறை உட்பட் மக்கள் நலன்களுக்கான துறைகளை உருவாக்கலாம்.

-சிறீ-

## தோழர் நா. சண்முகதாசனின் 20வது நினைவு தினக் கூட்டம்

இலங்கையின் புரட்சிகரப் பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடித் தலைவர் நா. சன்முகதாசனின் 20வது நினைவு தினக் கூட்டம் 10.12.2013 அன்று கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பெருந் தொகையான மக்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்திற்கு புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல் தலைமைத் தாங்கினார். 'ஒரு கம்யூனிஸ்டின் அரசியல் நினைவுகள்' என்னும் தோழர் சண் எழுதிய நூல் வெயியிடப்பட்டது. நூல் வெளியீட்டு உரையை பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்த்தினார். மேலும் கூட்டத்தில் அஜித் இலங்கை கம்யூனிஸட் கட்சி(மாவோ) செயலாளர் சுரேந்திர ரூபசிங்க உரை நிகழ்த்தினார். மாக்சிய ஆய்வாளரும் விமர்சகருமான பேராசிரியர் சிவசேகரம் 'இடதுசாரி இயக்கங்கள் எதிர்நோக்கும் சவால்கள்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். இந் நினைவு தினக் கூட்டத்தில் நினைவுப் பேருரை நிகழ்த்த அழைக்கப்பட்ருந்த தமிழகத்தின் பேராசிரியர் அ. மார்க்ஸ் நிகழ்வுக்கு வருகைதந்திருந்த போதும் நிகழ்வு ஆரம்பிப்பதற்கு சுமார் அரை மணித்தியாலத்திற்கு முன்னர் குடிவரவு குடியகழ்வு அதிகாரிகளினால் அவர் உரையாற்றுவது தடுக்கப்பட்டது. இந்நிகழ்வினை மாக்சிய கற்கை நெறிகளுக்கான சண்முகதாசன் நிலையம், கொழும்பு ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வின் நன்றியுரையை நிகழ்ச்சியின் இணைப்பாளர் வீ. தனபாலசிங்கம் வழங்கினார். நிகழ்வுகளை த.வி. ரிஷாங்கன் தொகுத்து வழங்கினார்.

## தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் 23வது நினைவுத் தினக் கூட்டம்

இலங்கை பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடிகளில் ஒருவரும், புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஆரம்பப் பொதுச் செயலாளரும், வெகுஜனப் போராட்டங்களின் வழிகாட்டியுமாக வாழ்ந்து மறைந்த தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் 23வது நினைவுத் தினம் கடந்த நவம்பர் 25.11.2012 அன்று நடைபெற்றது. கூட்டம் பேராசிரியர் தில்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தோழர் தணிகாசலம் 'பண்பாடும் கருத்தியலும்' எனும் தலைப்பில் நினைவுச் சொற்பொழிவாற்றினார். தோழர் மணியம் பற்றிய நினைவுரையை தோழர் சி. இராஜேந்திரன் நிகழ்த்தினார்.


மேலும் தோழர் மணியம் நினைவு தினக் கூட்டம் 27.11.2012 அன்று யாழ்பாணத்திலும் இடம்பெற்றது. புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் முன்னிலைத் தோழர் செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர் இ. தவராஜா 'சமூக மாற்றத்தில் தனி மனிதனின் பங்கு' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கினார்.

இவ் இரண்டு நிகழ்வுகளிலும் சமகால அரசியல் மற்றும் தேசிய இனப்பிரசினை, தீர்வுகள் தொடர்பில், தேசிய இனப் பிரச்சினையில் கருத்தியல் போராட்டத்திலும், நடைமுறையிலும் தோழர் மணியம் வகித்த பாத்திரம் பற்றியும் அவரது தேசிய இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டின் இன்றைய முக்கியத்துவம் தொடர்பிலும் திறந்த கலந்துரையாடல் இடம்பெற்றது. இவ்விரு நிகழ்வுகளையும் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் நினைவுக் குழு ஒழுங்கு செய்திருந்தது.

# திவிநெகும: பகற்கொள்ளைக்கான புதிய வழிகள்

அரசியலமைப்பின் ஊடாகச் சர்வாதிகாரத்தை நிலைநாட்டியவர்கள் பலர். இலங்கையும் அத் திசையிற் சென்றுகொண்டிருப்பதை உணர நீங்கள் அணுவிஞ்ஞானியாக இருக்க வேண்டியதில்லை. இலங்கை அரசியலமைப்பின் 18வது திருத்தத்தின் மூலம் சர்வாதிகாரப் பாதையில் முக்கிய மைல்கல்லை எட்டியது. அண்மையிற் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திவிநெகும சட்டமூலம் அதற்கான இன்னொரு படியாகியுள்ளது. யாருக்கும் தெரியாமல் இரசியமாகவும் அவசரமாகவும் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்ட இச் சட்டமூலம் என்ன என்பதே பலருக்குத் தெரியாது.

திவிநெகும சட்டமூலத்தின் படி, சமுர்த்தி அதிகார சபையையும் தெற்கு அபிவிருத்தி அதிகார சபையையும் மலையக அபிவிருத்தி அதிகார சபையையும் ஒன்றிணைத்துப் பொருளாதார அமைச்சின் கீழ் திவிநெகும திணைக்களம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டு அது பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வரும். இதன் மூலம் சுமார் 5,000 கோடி ரூபா நிதியானது இத் திணைக்களத்தின் கீழ் வரும். அதே வேளை இத்திணைக்கள ஊழியர்கள் இரகசியக் காப்பாற்றல் உடன்படிக்கையிற் கைச்சாத்திட வேண்டும். அதன்படி நீதிமன்றத்தில் அன்றி வேறெங்கும் அவர்கள் தங்கள் பணி தொடர்பான தகவல் எதையும் தெரிவிக்க முடியாது. தவறித் தெரிவிக்குமிடத்து அவர்கள்மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம்.



**திவிநெகும சட்டமூலத்தின் படி, சமுர்த்தி அதிகார சபையையும் தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையையும் மலையக அபிவிருத்தி அதிகாரசபையையும் ஒன்றிணைத்துப் பொருளாதார அமைச்சின் கீழ் திவிநெகும திணைக்களம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டு அது பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் வரும். இதன் மூலம் சுமாட 5,000 கோடி ரூபா நிதியானது இத் திணைக்களத்தின் கீழ் வரும்**

ஊழல் தாண்டவமாடும் தேசத்தில் 5,000 கோடி ரூபாவுக்கு பொறுப்பாகவுள்ள திணைக்களத்தில் நடக்கக்கூடியவற்றை யாரும் அறியவேண்டியதில்லைத்தானே.

இந் நேரத்தில் தான் ஊழியர் சேமலாப நிதி யிலிருந்தும் ஊழியர் நம்பிக்கை நிதியிலிருந்தும் இலங்கைப் பங்குச் சந்தையில் சட்டவிரோதமாக முதலிடப்பட்டு கிட்டத்தட்ட 12 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இது புதிய பிரதம நீதியரசர் தெரிவுசெய்யப்பட்டு சில நாட்களில் நிகழ்ந்துள்ளது. அரசியலமைப்பு ரீதியில் இலங்கையின் மாகாணங்களுக்குரித்தான பல அதிகாரங்களை இச்சட்டம் பறித்தெடுக்கிறது. இது மிச்சம் மீதியாயுள்ள சொற்ப அதிகாரப் பரவலாக்கத்தையும் இல்லாமற் செய்கிறது. சட்டமூலத்திற்கு மாகாணங்களின் சம்மதம் பெறப்பட வேண்டும் என்ற நிலையில் இயங்காத நிலையில் இருந்த வட மாகாணத்தில் அதன் ஆளுனரின் சம்மதம் இதற்குப் பெறப்பட்டமை முறையற்றது என இம்சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சொல்லப்பட்டது. இதன் பின்னரே பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரனை வந்ததும் குறிப்பிடத்தக்கது. இன்று நீதிமன்றமோ நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் குற்றுயிரும் குலையுயிருமாக ஊசலாடுகிறது. நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரனை கொண்டுவரப்படுவதற்கு சில நாட்களிற்கு முன்னர் நீதித்துறை பல்வேறுபட்ட மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவதாகவும் நீதித்துறையின் சுதந்திரம் பிரச்சினைக்குள்ளாவதாகவும் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் மஞ்சுள திலகரத்ன குறிப்பிட்ட அடுத்தவாரமே குண்டர்களின் தாக்குதலுக்கு இலக்கானார். நீதிமன்றத்தின் தீர்ப்புத் தெளிவாயில்லை எனச் சாட்டுச் சொல்லிச் சட்டமூலத்தைப் பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்க சபாநாயகர் அனுமதியளிக்க சட்டமூலம் சட்டமானது.

பெருந்தொகையான பணம் மண்டிக் கிடக்கும் சுரங்கத்தை வேட்டையாடியே தீரவேண்டுமல்லவா. இது நாடு எங்கே சென்றுகொண்டிருக்கின்றது என்பதற்கு மேலும் சான்று கூறுகிறது.

8>> வட்டுக்கோட்டை பக் 8

கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக்கும் இடத்தை நோக்கி நகர்வுகள் முன்சென்று கொண்டிருந்தன.

இச் சூழலில் பேச்சுவார்த்தை என்பதற்கோ அரசியல் தீர்வுக்கோ உரிய இடங்கள் தேய்ந்து கொண்டே சென்றன. ஆனால் மக்களை ஏமாற்றுவதற்காகச் சர்வ கட்சி ஆலொசனை என்றும் நிபுணர் குழு அறிக்கை தயாரிப்பு என்றும் வீணே விடயங்கள் இழுத்தடித்துச் செல்லப்பட்டன. அதற்கு, சமசமாஜக் கட்சியின் அமைச்சரான திஸ்ஸ விதாரண தலைமைப் பாத்திரத்திற்கு நியமிக்கப்பட்டு நீண்ட கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டன. ஆனால் உருப்படியாக எது வுமே நிகழவில்லை. அப்படி நிகழ்வதை மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விரும்பவில்லை. அதே வேளை இருதரப்பிலும் உள்ளார்ந்த யுத்தத் தயாரிப்புகள் இடம்பெற்று வந்தன. ஆளணி சேர்ப்பதிலும் ஆயுதங்கள் கொள்வனவு செய்வதிலும் அரசாங்கத் தரப்பும் ராணுவமும் தீவிரமாகச் செயற்பட்டு வந்தன. புலிகளும் தமது ராணுவ ஆயுத வலிமையை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இவ்வாறான சூழலிலேயே 2005ம் ஆண்டின் இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. இத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மகிந்த ராஜபக்'வும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ரணில் விக்கிரமசிங்காவும் போட்டியிட்டனர். இவர்களுக்கிடையிலான போட்டியே பிரதானமானதாக இருந்தது. இத்தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனேயே புதிய ஜனநாயக கட்ச இவ் ஜனாதிபதித் தேர்தலை மக்கள் நிராகரித்து வாக்குச்சீட்டுக்களைப் பழுதடைச் செய்ய வேண்டும் எனவும் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தது. அவ்வேளை புலிகள் இயக்கம் எவ்வித முடிவுக்கும் வரவில்லை. ஆனால் தேர்தல் இடம்பெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற முடிவைப் புலிகள் இயக்கம் வெளிப்படுத்தியது. இது மகிந்த ராஜபக்ஸவிற்கு சாதகமாக அமைநதது. வடக்கு கிழக்குத் தமிழ் மக்களது வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சென்றடையக் கூடிய ஒரு சூழல் நிலவிய போக்கை புலிகள் இயக்கத்தின் பகிஷ்கரிப்புத் தீர்மானம் முறியடித்தது. வடக்கு கிழக்கின் வாக்கு வங்கியை நம்பியிருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு இது பேரிடியாகியது. மகிந்த ராஜபக்ஸ இலகுவாக ஐம்பத்தி ஒரு வீத வாக்குகள் பெற்று ஜனாதிபதியானார். இவ்வாறான பகிஷ்கரிப்புத் தீர்மானத்தைப் புலிகள், எடுத்திருந்தமைக்கு பல்வேறு காரணங்கள் ஊகிக்கப்பட்டன. அதில் ஒன்று மகிந்த ராஜபக்ஸ தரப்பில் இருந்து பெரும் தொகைப் பணம் புலிகளுக்கு வழங்கப்பட்டது என்பதாகும். அதற்கான ஆதாரம் இதுவரை வெளிப் படுத்தப்படாத போதும் அதில் ஏதோ ஒரு உண்மை இருப் பதாகவே மக்கள் மத்தியில் பேச்சப்பட்டது.

எவ்வாறாயினும் பணத்தைப் பெற்றோ அல்லது வேறு காரணத்தாலோ அமெரிக்க மேற்குலகிற்கு எதிரான மகிந்த ராஜபக்ஸவை ஜனாதிபதியாக்குவதன் மூலம் தமது நோக்கங்களை அடையலாம் எனப் புலிகள் நம்பினர். ஆனால் அவர்களது கணக்கு தப்புக் கணக்காகவே அமைந்து கொண்டது. யுத்தத்தை மிக வன்மத்துடன் நடத்தி முடிக்கக் கூடிய ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை அதிகாரத்திற்குக் கொண்டு வருவதில் புலிகள் தமது தூர நோக்கற்றதும் விவேகமற்றதுமான போக்கை வெளிப்படுத்திக் கொண்டனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் தலைமையின் கீழ் யுத்தம் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பதை அடுத்து நோக்குவோம்.

8>> மாத்தளை மாவட்ட...

கம்பனிகளின் சொத்துக்கள். இங்கு இடம் பெறும் அனர்த்தங்கள், தீ விபத்துக்கள் போன்றன கம்பனிகளின் பிரச்சினையாகவே கருதப்படும். உண்மையில் மலையக மக்கள் என்போர் உண்மையில் அரசின் சட்டத்தின்படியும் நிர்வாகத்தின் படியும் இந்நாட்டின் குடிமக்களே அல்லர் என்பதே உண்மை.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட நிலமற்ற மக்களுக்கு பாதுகாப்பான குடியிருப்புக்களைப் பெறுவது சிக்கல் நிறைந்ததாக உள்ளது. நிக்கலோய பிரதேசம் என்பது மக்கள் வாழ்வதற்கு பொருத்தமற்ற இயற்கை அனர்த்த அபாயப் பிரதேசமாகியுள்ளது. பிட்டகந்த, கந்தேநுவர, செல்வகந்த, உனுகல மற்றும் மடகும்புர, வெலங்காவத்த, திக்கும்புர பிரதேசங்களிலும் பல பகுதிகள் பாதுகாப்பற்ற பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன் மண்சரிவால் பாதிக்கப்பட்ட இறத்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த கிராம மக்களுக்கு, எல்கடுவ பிளான்டேஸனுக்கு சொந்தமான ரத்வத்த பிளான்டேஸன் குருப்பைச் சேர்ந்த மாவுசாகலை தோட்டத்தில் இல 05 எனும் பகுதியில் 2 ஏக்கர் நிலம் வீடுகள் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறை மக்களுக்கும் ஏன் இவ்விதம் நிலங்களை வழங்க முடியாது? என மக்கள் வினவுகின்றனர். அத்துடன் இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை பெருந்தோட்டப் பகுதி தோட்ட மக்களின் நிலங்கள் வலுக்கட்டாயமாக பறிக்கப்பட்டும் வருகின்றது. அரசு இவ்வாறான சம்பவங்களின் சாவியாக உள்ளது.

ஆகவே கட்சி, தொழிற்சங்க பேதமின்றி இவ்விடயம் தொடர்பாக அக்கறையுள்ள அனைவரும் ஐக்கியப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அரசியல் இலாபம் கருதாமலும் மக்களின் உடனடித் தேவையையும் பெருந்தோட்டங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்தும் அரசின் இவ்வாறான இனவாத மற்றும் உதாசீனப் போக்கிற்கு எதிராக ஐக்கியத்தைக் கட்ட வேண்டும் என பெருந்தோட்டங்களைப் பாதுகாக்கும் மக்கள் ஒன்றியம் சிநேகபூர்வமாக கேட்டுக் கொள்கின்றது.

பெருந்தோட்டங்களில் அரசாங்கத்தால் தரிசு நிலம் என ஒதுக்கப்பட்ட 37,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பொருத்தமான பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் குடியமர்த்தப்பட வேண்டும் என்பதுடன் மாத்தளை மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தோட்ட மக்களையும் உரிய முறையில் இக்காணிகளைப் பகிர்தளித்து குடியமர்த்த வேண்டும் என நாம் கோருகின்றோம்.

9>> கூட்டணிகள்...

உதவுவது சரியானது. ஆனால் தவற்றைத் திருத்தும் முயற்சிகட்கான அறிகுறிகள் இல்லாதபோது இணைவது ஆபத்தானது.

திருமணமானால் தீய பழக்கமுள்ளவன் திருந்திவிடுவான் என்ற நம்பிக்கையுடன் ஒரு பெண் திருமண உறவிற் புகுவதைவிட இது மிகவும் ஆபத்தானது. முதலில் சில கூட்டறிக்கைகள் மூலமாக இல்லாவிடினும் தனித்தனியாகவேனும் தாம் உடன்படுகிற விடயங்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்க இயலாதுள்ள இரு அமைப்புக்கள் சேர்ந்து செயற்படும்போது யாரோ யாராலோ ஏமாற்றப் பட வாய்ப்பு அதிகம். எனவேதான் ஒரு 'மாக்சிச லெனினிச' அமைப்புதான் எவ ருடனும் எந்தவிதமான கூட்டணிக்குள் ளும் புகுமுன்பு சில குறைந்தபட்ச ஆலொசனைகளை முன்வைத்து அதன் அடிப்படையில் ஒரு வேலைத்திட்டத்தை வகுப்பது அவசியம்.

கல்விமான்களான சமசமாஜக் கட்சித் தலைவர்கள் படிப்பறிவு குறைந்த ஸ்ரீ.ல.சு.க தலைவரைச் சரிக்கட்டி வழிக்குக் கொண்டு வரலாம் என்று எண்ணி ஏமாந்ததை இவ்விடத்து நினைவூட்டுவது தகும்.

5>> சகோதரர்களின் சர்வாதிகாரம்...

'மாவிற்குப் பதிலாக அரிசி' என்ற அமைச்சர்கள் சிலரின் பேச்சு வெறும் வாய்க்கு வந்த பேச்சே அன்றி தோட்டத் தொழிலாளர்கள் உட்பட சாதாரண அன்றாடம் உழைக்கும் மக்களின் யதார்த்த நிலை புரிந்தவர்களின் பேச்சல்ல.

இவ்வாறான பொருளாதார நெருக்கடிகள் பிரச்சினைகளின் மத்தியில் மகிந்த அரசின் ஜனநாயக வேடம் ஒவ்வொன்றாகக் கழற்றப்பட்டு வருகிறது. பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பள உயர்வு மற்றும் இலவசக் கல்விக்கு நிகர தேசிய வருமானத்தில் ஆறு வீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை மறுப்பதிலும் அரசாங்கத்தின் தனியார் பல்கலைகழங்களை அனுமதிக்கவும் கல்வியை முழுமையாக தனியார் மயமாக்கவும் முன்னெடுக்கும் திரைமறைவு வேலைகள் வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இப்போது நீதித் துறையிலும் தமது கைவரிசையை காட்டியுள்ளனர். இச்சந்தர்ப்பங்களில் அரசின் அராஜக போக்கிற்கு எதிராக நடந்த போராட்டங்களை முடக்க தன்னாளான அனைத்து திரைமறைவு அரச பயங்கரவாதத்தினையும் கட்டவிழ்த்திருந்தது.

இவ்வாறு நாட்டின் அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் மக்கள் விரோதப் போக்கினை வெளிப்படையாக காணக்கூடிய ஒரு சூழல் தோன்றியுள்ளது. இவற்றிற்கு எழும் எதிர்ப்புக்களை முகம் கொடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு யுக்திகளைப் பயன்படுத்த முன்னிற்கிறது. வழமை போன்று பௌத்த சிங்களப் பேரினவாதத்தைச் சூடேற்றி அவற்றை தமிழ் முஸ்லீம் மலையக மக்களுக்கு எதிரானதாக் முன்தள்ள முயன்று வருகிறது. பிரிவினைக் கோரிக்கை உயிர்ப்புடன் இருப்பதாகவும் புலம்பெயர்ந்த நாடுகளில் புலிகள் இலங்கைக்கு எதிராகச் சதி செய்து வருவதாகவும் பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அதேவேளை முப்படைகளையும் பொலீஸையும் பலப்படுத்தியும் நவீனப்படுத்தியும் வருவதில் ராஜபக்ஷ சகோதரர்கள் எல்லாவற்றையும் விட முன்னுரிமை கொடுத்து வருகின்றார்கள். அதனாலேயே யுத்தம் முடிவுற்ற மூன் றறை வருடங்களின் பின்பும் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புப் படைகளுக்கு 29000 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலே நாட்டு மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் அனைவருக்குமான பொதுப் பிரச்சினைகளேயாகும். ஒவ்வொன்றும் ஒன்றுடன் தொடர்புபட்டவையும் ஒன்றிலிருந்து மற்றயவை பிரிக்க முடியாதவைகளுமாகும். இவற்றை ஆழ்ந்த அரசியல் நோக்கின் ஊடாகவே நோக்க வேண்டும். இனம் மதம் மொழி பிரதேசம் போன்ற அடையாள அரசியல் போக்கு கள் மேல் கிளம்பியதால் மக்கள் தனித்தனியே பிரிக்கப் பட்டு ஒருவர் மற்றவரில் இருந்து தூர வைக்கப்பட்டு அந்நியப்படுத்தப்பட்டவர்கள் ஆனார்கள். ஒரே வர்க்கத்தினரான உழைக்கும் மக்கள் தமது வர்க்க வாழ்நிலையை மறந்து அடையாள அரசியலுக்குப் பலியாகிக் கொண்டனர். நாட்டின் வட கிழக்கு உட்பட சகல பகுதிகளிலும் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் தம்முள் ஒருவரை ஒரு வர் எதிரிகளாகப் பார்க்கும் போக்கு வளர்க்கப்பட்டது. அதனால் அனைத்து மக்களினது பொது எதிரிகள் இலகு வாகவே மக்கள் கண்களில் படாது மறைந்து கொள்ளும் வாய்ப்பும் வளர்ச்சி கண்டது. இந்நிலை ஆளும் வர்க்க சக்திகளுக்கு முழு வாய்ப்பு வசதிகளை வழங்கிக் கொண் டன. அதனையே ராஜபக்ஷ சகோதரர்கள் தலைமைத் தாங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நன்கு பயன்படுத்தி வருகின்றது.

இதற்குரிய ஒரே மாற்று பல்வேறு பிரச்சினைகளாலும் நெருக்கடிகளாலம் பாதிக்கப்பட்டு நிற்கும் தொழிலாளர் கள் வவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் குறுகிய பாராளுமன்ற அரசியலுக்கு அப்பால் தமக்குரிய தளங்களில் வெகுஜன மார்க்கத்தின் கீழ் அணி திரள்வதேயாகும். உழைக்கும் மக்களாகிய நாம் அரசியல் ரீதியில் சரியான சிந்தனையைக் கட்டியெழுப்பாத வரையும் வாக்குப் போ டும் அரசியலை நம்பும் வரையும் விடுதலையும் விமோசன மும் சாத்தியமில்லை.



# ஆகவே தோழர்களே...!

**மாக்ஸிம் கார்க்கி**

சுரண்டலற்ற பொதுவுடமை சமூகம் என்பது கனவா? மக்கள் நம் பக்கம் வருவார்களா? தலை கீழாக நின்று பார்த்தாலும் மக்களை திருத்த முடியவில்லையே?

ரசியப் புரட்சி முடிந்து 9 -ஆம் ஆண்டு தொடங்குகிறது. பொதுவுடமைக் கட்சிகள் மட்டும் வரலாற்றின் இவ்வொளியை ஏந்திச் செல்கின்றன. மேல்நிலை வல்லரசுகளின் கிடுக்கிப் பிடியில் மாட்டிக் கொண்டுள்ள உலகில் சோசலிச நாடு என்று எதுவும் இல்லை. மனித குலத்தின் இருளகற்ற சிவப்புச் சூரியன் தோன்றுவானா? சுரண்டலற்ற பொதுவுடமை சமூகம் என்பது கனவா? மக்கள் நம் பக்கம் வருவார்களா? தலை கீழாக நின்று பார்த்தாலும் மக்களை திருத்த முடியவில்லையே? கார்க்கியிடம் கேட்டோம். ரசியப் புரட்சியின் பின் பாட்டாளி வர்க்கத்துக்காக இலக்கியத்தின் துணை கொண்டு போராடியவர், தோழமையுடன் சொன்னார் கார்க்கி.

என் வாலிபப் பருவத்தில் வாழ்க்கையைப் பற்றி என்றைக்கும் குறைபட்டுக் கொண்டதாக எனக்கு நினைவில்லை. என்னைச் சூழ்ந்து வாழ்ந்த மக்களுக்கோ குறைபட்டுக் கொள்வதிலே ஒரு பிரியம் இருந்தது. ஆனால் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வதில் விருப்பமில்லாமலிருப்பதை அவர்கள் மறைப்பதற்காகத்தான், வஞ்சகமாக இப்படிச் செய்கிறார்கள் என்று உணர்ந்து கொண்டதும், அவர்களைக் காப்பியடிப்பதைத் தவிர்க்க நான் முயன்றேன். அதிகமாகக் குறைபட்டுக் கொள்கிறவர்கள் தான் எதையும் எதிர்த்து சமாளிக்கத் திறனற்றிருக்கிறார்கள் என்றும், பொதுவாகவே மற்றவர்களின் மேல் எல்லாவற்றையும் போட்டுவிட்டு தாம் சுகமாக இருக்கப் பார்க்கிறவர்கள் என்றும் வெகு சீக்கிரத்திலேயே கண்டு கொண்டேன்.

எனக்குப் புரியாத விஷயங்கள் நிறைய இருந்தன என்றாலும், இந்த மாதிரி மனிதர்களுக்கு "சகஜமான" வாழ்க்கையை முழுக்க விட்டுத் தொலைப்பதற்கு முடியவில்லை என்று பட்டது. குட்டி பூர்சுவா என்ற நாடகத்தில் வருகிற குடிகாரப் பாடகன் சொல்கிற மாதிரி, இவர்கள் "அறையிலிருக்கிற மேஜை நாற்காலிகளை மாற்றி மாற்றி வைத்து ஒழுங்கு செய்வது" தவிர வேறொன்றும் செய்யத் திறனில்லாதவர்களே. வாழ்க்கையில் அழகோ பொருளோ எதுவும் இருக்கவில்லை. சில்லிட்டுப்போன ஒட்டிக் கொள்கிற அர்த்தமின்மைதான் இருந்தது. இந்த நிலை எல்லோருக்கும் பழக்கமாகி விட்டிருந்ததால் யாருமே அதன் வறுமையை துயரச் சாயலை, ஆழமின்மையைக் கவனிக்கவில்லை.

என்னைச் சுற்றி எங்கு பார்த்தாலும் கருமித்தனமான சின்னப் புத்தி படைத்த மக்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் பேராசை, பகைமை, கெட்ட எண்ணம், சண்டை சச்சரவுகள், வழக்காடல்கள் எல்லாம் எதிலிருந்து கிளம்பின தெரியுமா? தனது கோழிக் குஞ்சின் காலை அண்டை வீட்டுக்காரரின் பிள்ளை ஒடித்து விட்டான், அல்லது சன்னல் கண்ணாடியை உடைத்து விட்டான், அல்லது ஒரு இனிப்புப் பண்டம் கெட்டுப்போய் விட்டது, முட்டைக்கோஸ், சூப் அவசியத்துக்கு மேலாக வெந்துவிட்டது, அல்லது பால் கெட்டு விட்டது என்ற காரணங்களுக்காக, ஒரு இறாத்தல் சர்க்கரைக்கோ ஒரு கஜம் துணிக்கோ கடைக்காரன் கூடுதலாக ஒரு தம்படி வாங்கி விட்டானே என்பதற்காக, அவர்கள் மணிக்கணக்காக உட்கார்ந்து வருந்த முடியும். அண்டை வீட்டுக்காரனுக்கு ஏதாவது ஒரு சிறு துன்பம் ஏற்பட்டாலும் அவர்களுக்கு நிஜமான மகிழ்ச்சி பிறந்துவிடும் அனுதாபப் படுவதாகப் பாசாங்கு பண்ணி அதை மறைப்பார்கள். பிலிஸ்டைன் (அற்பவாதம்) கனவு காணும் பரலோகத்தில் நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன். அதுதான் மக்களிடையை அற்பத்தன மான காசாசை பிடித்த

**பழைமையின் சின்னத்தனமான இழிந்த பாரம்பரியத்தை உங்களிடமிருந்தும் உங்கள் சூழலிலிருந்தும் அழித்துவிட நீங் கள் கற்றுக்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால், பிறகு நீங்கள் எப்படி பழைய உலகத்தைத் துறப்பதற்கு சக்தி பெற முடியும்?**



பகைமையை உண்டாக்கி வந்தது. சட்டிப்பானைகள், கோழி, வாத்துக்கள், முட்டைக்கோஸ், காய்கறிகள், ரொட்டிகள், அப்பங்கள், மாதாகோவில் விஜ யங்கள், ஜனன மரணச் சடங்குகள், மூக்குப் பிடிக்கத் தீனி, பன்றித்தனமான நடத்தை- இதுதான் நான் வளர்ந்த சூழலைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையின் உள்ளடக்கம். அந்த அருவருக்கத்தக்க வாழ்க்கை எனக்கு சமயங்களில் மறந்து போகிற அளவுக்கு மயக்கத்தை உண்டாக்கிவிடும்.

ஆம், தோழர்களே! வாழ்க்கையின் பண்பற்ற தன்மையும் கொடுமையும் விளைவிக்கிற பீதியை நான் வெகுவாக அனுபவித்திருக்கிறேன். ஒரு சமயம் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குக் கூடச் சென்றிருக்கிறேன். அதைப் பற்றி நினைக்கிற போதெல்லாம் சுடுகிறமாதிரி ஒரு வெட்கமும் என் மீது எனக்கே ஒரு வெறுப்பும் உண்டாகிறது. அந்தப் பீதியை நான் வென்று விலக்கியது எப்போது தெரியுமா? கெட்ட குணத்தை விட அதிகமாக மக்களிடம் குடிகொண்டிருப்பது அறியாமைதான் என்று நான் உணர்ந்து கொண்ட போதுதான். என்னைப் பயமுறுத்தி வந்தது அவர்களுமல்ல என் வாழ்க்கையுமல்ல. சமூகத்தைப் பற்றியும் மற்றவற்றைப் பற்றியும் என்னிடமிருந்த அறியாமை, வாழ்க்கையின் எதிரே தற்காத்துக் கொள்ளத் தெரியாத நிலை, கையறுந்த நிலை, இவைதான் எனக்குப் பயத்தையளித்து வந்தன என்று தெரிந்து கொண்டபோதுதான்.

ஆம், அதுதான் உண்மை விஷயம். இதைப்பற்றி நீங்களும் நன்றாக யோசிக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். ஏனென்றால், உங்களில் சில பேர் முனகுவதற்குக் காரணம் உங்களுடைய தற்காப்பற்ற நிலை பற்றிய உணர்வும், மனிதனை உள்ளும் புறமும் ஒடுக்கி வதைக்கிறதற்குப் "பழைய உலகம்" உபயோகிக்கிறதனைத்தையும் எதிர்த்து நிற்பதற்குள்ள திறமையில் நம்பிக்கையின்மையும்தான்.

விஞ்ஞானம், கலை, தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் மனித பலம் சாதித்த, உண்மையிலே மதிப்பும் நிரந்தரமான பயனும் சௌந்தர்யமும் உள்ள, சாதனைகள் அனைத்தும் சில நபர்களால் சிருஷ்டிக்கப்பட்டவை. அவர்கள் அவற்றை வர்ணனைக்கெட்டாத கஷ்ட நிலைமைகளிலே வேலை செய்துதான் சிருஷ்டித்தனர் சமுதாயத்தின் ஆழ்ந்த அறியாமைக்கும், கிறிஸ்து மத நிறுவனத்தின் கொடிய பகைமைக்கும், முதலாளி வர்க்கத்தினரின் பேராசைக்கும், கலை-விஞ்ஞானங்களைப் போற்றிப் பேணும் வள்ளல்களின் சபலத்துக்குரிய தேவைகளுக்கும் ஈடுகொடுத்து எதிர்த்தபடிதான் சிருஷ்டித்தார்கள். இளைஞர்களாகிய நீங்கள் இதை உணர்ந்திருத்தல் வேண்டும். பண்பாட்டைச் சிருஷ்டித்தவர்களில் சாதாரண உழைப்பாளிகள் பலர் இருந்து வந்துள்ளனர் என்பதையும் நினைவில் நிறுத்த வேண்டும் உதாரணம், பாரடே என்கிற மகத்தான பொருளியல் விஞ்ஞானியும் புனைவாளராகிய எடிஸனும். நூல் நூற்கும் யந்திரத்தைப் புனைந்த ஆர்க்கரைட் ஒரு முடிதிருத்தும் தொழிலாளி. கலைச்சித்திர வேலைப்பாடுள்ள மண்பாண்டத் தொழிலைச் சிருஷ்டித்த தலைசிறந்த நபர்களில் பெர்னார்ட் பாலிஸ்ஸி என்பவரும் ஒருவர். அவர் ஒரு கொல்லன். உலகறிந்த தலை சிறந்த நாடகாசிரியராகிய ஷேக்ஸ்பியர் ஒரு சாதாரண நடிகர். மோலியேரும் அப்படியேதான்.

மக்கள் எப்படித் தமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள முடிந்தது என்பதற்கு இம்மாதிரி நூற்றுக் கணக்கான உதாரணங்களைத் தரக்கூடும். உங்களிடத்திலும் உங்கள் பலத்திலும் நம்பிக்கை கொள்ளும் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள். இடையூறுகளைச் சமாளிப்பதன் வழியேதான், சித்தத்தை எஃகுபோல் ஆக்கிக் கொள்வதின் வழியேதான் அந்த நம்பிக்கையைப் பெறமுடியும்.

பழைமையின் சின்னத்தனமான இழிந்த பாரம்பரியத்தை உங்களிடமிருந்தும் உங்கள் சூழலிலிருந்தும் அழித்துவிட நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால், பிறகு நீங்கள் எப்படி பழைய உலகத்தைத் துறப்பதற்கு (இந்தச் சொற்கள் தொழிலாளர் விடுதலை கீதம் என்று 1875- லிருந்து இருந்து வரும் ஒரு ருஷ்யப் புரட்சிப் பாடலிலிருந்து எடுக்கப்பட்டவை) சக்தி பெற முடியும்? அந்தப் பாடல் போதிக்கிறபடி நடப்பதற்கு உங்களுக்கு வலிமையும் விருப்பமும் இல்லாவிட்டால் அதை உங்களால் பாட முடியாது. தன்னைத் தானே வென்றுகொள்வது கூட ஒருவனுக்கு எவ்வளவோ வலுவூட்டி விடுகிறது. உடற்பயிற்சி ஒருவனுக்கு அதிக ஆரோக்கியமும் தெம்பும் தருகிறது என்று உங்களுக்குத் தெரியும். அதே மாதிரியான பயிற்சியை மனத்திற்கும் சித்தத்துக்கும் தர வேண்டும்.

**மாக்ஸிம் கார்க்கியின் "நான் எவ்வாறு எழுதக் கற்றுக்கொண்டேன்" நூலிலிருந்து தொகுக்கப்பட்டது)**
**நன்றி: வினவு**

# பெண் விடுதலை கானல் நீரல்ல!

**நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கப் பிற்போக்குத்தனம் பெண்களின் மீதான ஒடுக்குமுறைக்கு-பாலியல் தாக்குதலுக்கு ஆணிவேராக இருக்கும் அதேநேரத்தில், அதன் மீது திணிக்கப்பட்டுள்ள உலகமயமாக்கம் இத்தாக்குதல்களை முன்னெப்போதும் கண்டிராத வகையில் தீவிரப்படுத்தியிருக்கிறது.**

நிலப்பிரபுத்துவ தந்தைவழி சமூக அமைப்பு, மறுகாலனியாக்கம் எனுமிரு நுகத்தடிகளையும் அடித்து நொறுக்காமல் பெண்கள் மீதான வன்முறைகளை தடுத்து நிறுத்திட முடியாது. இந்திய தலைநகர் டெல்லியில் துணை மருத்துவ மாணவி, கும்பல் பாலியல் வல்லுறவுத் தாக்குதலுக்கு ஆளானதைத் தொடர்ந்து நடந்த ஆர்ப்பாட்டங்கள் தற்போதைக்கு ஓய்ந்துவிட்டன. ஆனால் பெண்கள் மீதான பாலியல் வன்முறைத் தாக்குதல்கள் இன்னமும் தொடர்கின்றன. தூக்கில் போடுவது, ஆணுறுப்பை வெட்டுவது எனத் தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டுமென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியபோதிலும், இத்தகைய கொடூரங்களில் ஈடுபடும் கிரிமினல்கள் எவரும் அதற்காக அச்சப்படுவதாகத் தெரியவில்லை.

இதற்கான காரணம், இன்றைய சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியலமைப்பில் உள்ளது. இந்தியச் சமூகமானது ஜனநாயகத்துக்கான அரசியல் போராட்டங்களின் ஊடாக உருவாகி வளர்ந்த சமூகமல்ல. நீண்ட நெடுங்காலமாக நீடித்துவரும் சாதி, மத, ஆணாதிக்கம் நிறைந்த நிலப்பிரபுத்துவ தந்தைவழி சமூக அமைப்பும், அதற்கு அக்கம்பக்கமாக தரகு முதலாளித்துவ உற்பத்திமுறையும், அதற்கேற்ற அரசியல், பண்பாட்டு நிறுவனங்களும் காலனிய காலத்திலிருந்து திணிக்கப்பட்டு நிலைநாட்டப்பட்டன.

நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கப் பிற்போக்குத்தனம் பெண்களின் மீதான ஒடுக்குமுறைக்கு-பாலியல் தாக்குதலுக்கு ஆணிவேராக இருக்கும் அதேநேரத்தில், அதன் மீது திணிக்கப்பட்டுள்ள உலகமயமாக்கம் இத்தாக்குதல்களை முன்னெப்போதும் கண்டிராத வகையில் தீவிரப்படுத்தியிருக்கிறது. ஒருபுறம், பெண்களை நுகர்வுப் பண்டமாக்கி, எவ்வித விழுமியங்களுமின்றி பாலியல் வன்முறைகளைத் தீவிரமாக்கியிருக்கும் உலகமயமாக்கம் மறுபுறம், ஆதிக்க சாதி மற்றும மத அமைப்புகள் பெண்கள் மீது கேள்விக்கிடமற்ற முறையில் தொடுக்கும் தாக்குதல்கள், கட்டுப்பாடுகள், கௌரவக் கொலைகள்- என இத்தாக்குதல்கள் அதிகரித்திருக்கின்றன.

சாதியானாலும், பாலியல் வன்கொடுமையானாலும் இரண்டுக்குமே அடிப்படையாக உள்ள அரசியல்- பொருளாதார கட்டமைவை இன்றைய அரசு பாதுகாக்கிறது. பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறப்படும் அரசு எந்திரமே பெண்களுக்கு எதிராக உள்ளது. அதிகாரவர்க்கம், போலீசு, இராணுவம், நீதித்துறை முதலான அரசின் உறுப்புகளே பெண்களுக்கு எதிரான முதன்மைக் குற்றவாளிகளாக உள்ளன. அதை யாரும் தட்டிக் கேட்கவோ, நீதியைப் பெறவோ முடியாதபடி சட்டத்துக்கு மேலானதாக, தனிவகைச் சாதியாக இருந்துகொண்டு சமூகத்தையே அச்சுறுகின்றன. ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தைக் கொண்டு பெண்கள் மீது கேள்விமுறையற்ற வன்முறைகளில் ஈடுபடும் இராணுவத்தினரை சிவில் கோர்ட்டுகளில் கிரிமினல் சட்டங்களின்கீழ் தண்டிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நீதிபதி வர்மா கமிட்டி பரிந்துரைத்த முக்கியமான சில சீர்திருத்தங்களைக்கூட ஏற்க மறுக்கிறது அரசு. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றிய ஆதாரங்கள் குவிந்துள்ள போதிலும், மாநில போலீசு இயக்குனர் முதல் மகளிர் நல அமைச்சகம், வாரியங்கள் உள்ளிட்ட எந்த அரசாங்க உறுப்புகளும் தமது பரிந்துரைகளை வர்மா கமிஷனுக்குக் கொடுக்கவுமில்லை.

வரதட்சணை தடுப்புச் சட்டமும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டமும் பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மீதான வன்முறைத் தாக்குதல்களை தடுக்காத நிலையில், சட்டங்களை அமலாக்கும் இன்றைய அரசியலமைப்பு முறையே பெண்களுக்கு எதிராக உள்ள நிலையில், கடுமையான சட்டங்களாலும் தண்டனைகளாலும் பெண்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களுக்கு முடிவு கட்டிவிட முடியாது.

நிலப்பிரபுத்துவ தந்தைவழி சமூக அமைப்பு, மறுகாலனியாக்கம் – எனுமிரு நுகத்தடிகளையும் அடித்து நொறுக்காமல் பெண்கள் மீதான வன்முறைகளை தடுத்து நிறுத்திட முடியாது. இவ்விரு நுகத்தடிகளையும் கட்டிக்காத்து வருகின்ற இன்றைய சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார அமைப்பை அடியோடு மாற்றியமைக்கும் திசையில், குடும்பம் உள்ளிட்டு சமூகத்தின் சகல அரங்குகளிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டும் போராட்டங்களைக் கட்டியமைப்பதும், இன்றைய அரசியலமைப்பு முறையை வீழ்த்திவிட்டு புதிய ஜனநாயக அரசியலமைப்பை நிறுவும் திசையில் போராட்டங்களை வளர்த்தெடுப்பதுமே ஒடுக்கப்பட்டுள்ள பெண்ணினத்துக்கு விடுதலையையும் உரிமைகளையும் பெற்றுத்தரும்.

புதிய ஜனநாயகம், பிப்ரவரி – 2013

# சிரியாவில் நடப்பதென்ன?

## சவூதி அரேபியா என்ற அமெரிக்காவின் அடியாள் பற்றிய கள்ள மௌனம் ஏன்?

உலகோன்


எமது ஊடகங்களும் எல்லாம் தெரிந்த உலக அரசியல் நிபுணர்களும் சிரியாவில் நடப்பதை ஜனநாயகத்திற்கான மக்கள் போராட்டமாகவும் சிரியாவின் ஜனாதிபதி அசாத்தைக் கொலைகாரன் போலவும் சித்தரித்து எழுதிவருகிறார்கள். அவர்கள் சொல்கிற செய்திகளை விட சொல்லாமல் விடுவன அதிகம். இவர்கள் மேற்கத்திய ஊடகங்களினதும் அமெரிக்காவினதும் அதனது கூட்டாளிகளினதும் பிரசாரத்தை உள்ளுரிற் செய்கிறார்கள். "அரபு வசந்தம்" என்ற போர்வையில் லிபியாவில் தாம் விரும்பிய ஆட்சி மாற்றத்தைச் செய்ததுபோல சிரியாவிலும் செய்ய அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் நினைக்கின்றன. ஆனால் லிபியா போல் சிரியா இலகுவானதாக இல்லை. இதற்கிடையில் சிரியாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அமெரிக்காவின் அடியாளாக சவூதி அரேபியா செயற்படுகிறது. சவூதி அரேபியா ஏதோ புனிதக் கடமையில் ஈடுபடுவது போல எமது ஊடகப் புலிகள் எழுதுகிறார்கள். இன்று மத்திய கிழக்கில் மக்கள் நலன்களுக்கு பெரிய குறுக்கீடாக இருப்பது சவூதி அரேபியா ஆகும். அமெரிக்காவின் அடியாளாக மத்தியகிழக்கைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சவூதி அரேபியா விரும்புகிறது. அதற்குப் பெரிய தடையாக இருப்பவற்றில் ஈரானும் சிரியாவும் பிரதானமானவை.

முதலில் சிரியாவைப்பற்றிச் சொல்லாமல் விடப்பட்ட செய்திகளைப் பார்ப்போம்:

- சிரியாவின் வலதுசாரி எதிர்க்கட்சிக்கு 2005ம் ஆண்டிலிருந்து அமெரிக்கா நிதியுதவி வழங்கிவருகிறது.
- ஆறு ஆண்டுகட்குப் பிறகு 2011 ஜனவரியில் சிரியாவின் தலைநகர் டமஸ்கஸில் தனது தூதரகத்தைத் மீண்டும் திறந்து ரோபேட் ஃபோர்ட் என்பவரைத் தூதுவராக நியமித்தது. இவர் 1970களில் எல் சல்வடோரில் எதிர்ப்புரட்சிச் சக்திகளை ஒன்றிணைத்து ஆட்சியைக் கவிழ்த்த ஜோன் நெக்ரோபொண்ட் என்ற அமெரிக்க இராஜதந்திரியின் கீழ்ப் பணியாற்றியவர். அத்துடன், 2004-2005 காலப்பகுதியில் நெக்ரோபொண்ட் ஈராக்கில் அமெரிக்கத் தூதராக இருந்தபோது அவருடன் நெருங்கிச் செயற்பட்டு எதிர்ப்புரட்சிச் சக்திகளை ஒருங்கிணைத்தவருமாவர்.
- ஃபோட், நேரடியாக சிரிய அரசுக்கு எதிரான குழுக்களை ஒன்றிணைக்கும் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவற்றை ஒரேயணியிற் கொண்டுவந்தார். அவர் வந்து இரண்டு மாதங்களில் சிரிய அரசுக்கெதிரான கிளர்ச்சி தொடங்கியது.

அரசுக்கெதிரான மக்கள் எழுச்சிகள் வழமையிற் பெருநகரங்களில் நிறைவான மக்கள் எழுச்சியுடனேயே தொடங்குவது வழமை. ஆனால் சிரிய அரசாங்கத்திற்கெதிரான ஆயுதப் போராட்டம், ஜோர்டானுடனான எல்லையில் உள்ள டாரா என்ற சிறிய நகரில் 2011 மார்ச்சில் தொடங்கியது. சில காலத்தின் பின்னர் சிரிய எதிர்குழுக்குளுக்கு ஜோர்டானுக்கூடாக ஆயுதம் அனுப்பியதை சவூதி அரேபியா ஒப்புக் கொண்டது. அமெரிக்காவும் அதன் நேட்டோக் கூட்டாளிகளும் தன்னெழுச்சியான மக்கள் எழுச்சிகளைத் தங்கள் தேவைகட்குப் பயன்படுத்திக் கொண்டன. சிரியாவின் ஆயுதக் கிளர்ச்சிக்கு சிரிய அரசாங்கம் பதிலளித்த வேளை, அரபு லீக்கும் ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் சிரிய அரசாங்கம் மக்கள் எழுச்சிக்கெதிராக வன்முறையைப் பிரயோகிக்கிறது என்று காரணங் காட்டிப் பொருளாதாரத் தடைகளை விதித்தன.

- இன்று சிரிய எதிர்க்கட்சிகளின் "சிரிய தேசியக் கவுன்சிலில்" இருப்பவர்கள், அமெரிக்க நிதியுதவி பெறும் புலம்பெயர்ந்த சிரியர்களே. சிரியாவின் ஆட்சிமாற்றம் அமெரிக்க நலன்களுக்காகவே என அவர்கள் வெளிப்படையாகவே அறிவிக்கிறார்கள்.
- துருக்கி, அமெரிக்காவின் சேவகனாக சிரியாவின் ஆட்சி மாற்றத்திற்காக வேலை செய்கிறது. "சிரிய விடுதலை இராணுவத்தின்" பயிற்சித் தளங்களும் இராணவத் தளங்களும் துருக்கியில் உள்ளன. அவற்றுக்கான நிதியுதவி சவூதி அரேபியாவாலும் கட்டாராலும் வழங்கப்படுகிறது. அந்த இராணுவத்திற் பல வெளிநாட்டவர்கள் இணைந்துள்ளமை ஆதாரங்களுடன் நிறுவப்பட்டிருக்கிறது.
- நேட்டோ போர் விமானங்கள் சிரிய எல்லையில் உள்ள துருக்கி வான்படைத்தளத்தில் ஏராளமான ஆயுதங்களைக் குவிக்கின்றன. முஹம்மர் கடாஃபிக்கு எதிராகப் பயன்பட்ட ஆயுதங்களும் லிபிய இடைக்கால தேசிய கவுன்சிலின் ஆட்களும் அவ்விடத்திற்கு அனுப்பப்பட்டு "சிரிய விடுதலை இராணுவத்திற்குப்" பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்படுகின்றன.
- சிரிய அரசாங்கத்தின் மீது பெரும் பழியைச் சுமத்தப் பயன்பட்ட ஹோல படுகொலைகளைச் செய்தது சிரிய அரச இராணுவமல்ல, "சிரிய விடுதலை இராணுவமே" என்பது சாட்சியங்களுடன் நிரூபணமாகியும் சிரிய அரசாங்கத்துக்கெதிரான பாரிய பொய்ப் பிரசாரம் உலகளாவிய ஊடகங்களால் முன்னெடுக்கப்படுகிறது.



அதே வேளை, ஆவணப்படுத்தப்பட்ட "சிரிய விடுதலை இராணுவத்தின்" மனித உரிமை மீறல்கள் பற்றி யாரும் வாய் திறப்பதில்லை.

- ஐ.நாவினதும் அரபு லீகினதும் பிரதிநிதியாக சிரிய விவகாரங்களுக்கான சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட கோஃபி அனான் முன்வைத்த போர்நிறுத்தத்தை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அசாத் அதை ஏற்க மறுத்ததாகவே ஊடகங்கள் சொல்லின. அனான் மௌனம் காத்தார். மேற்குலகு போர்நிறுத்தத்தை விரும்பவில்லை. ஏனெனில் லிபியா போன்றதொரு விரைவான ஆட்சி மாற்றத்தை அமெரிக்கா விரும்புகிறது.

ஒன்றரை ஆண்டுகள் கடந்தும் சிரியாவில் தான் விரும்பிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அமெரிக்காவுக்கு முடியவில்லை. லிபிய அனுபவங்கள் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கு சில படிப்பினைகளைக் கொடுத்துள்ளன. அதனால், சிரியாவைப் பற்றி ரஷ்யாவும் சீனாவும் விழிப்பாயிருக்கின்றன. அமெரிக்கா இப்போது சிரிய விவகாரத்தில் வெளிப்படையாகவே ரஷ்யாவையும் சீனாவையும் மிரட்டுகிறது. ஆனால் அமெரிக்கா நினைப்பது போல உலகம் இல்லை என்பதை ரஷ்யாவும் சீனாவும் நிரூபிக்கின்றன.

ஊடகங்கள் காட்டுவது போலன்றி, சிரியா, மதச் சகிப்புடைய மதச்சார்பற்ற பல்லின நாடாக நீண்டகாலமாகவே இருந்துவந்துள்ளது. அதன் ஜனாதிபதி அசாத் ஷியா பிரிவிற்குட்பட்ட அலவ்வி மதப் பிரிவினராயினும் அவரது மனைவி சுன்னி பிரிவினராவர். சிரியா கணிசமான எண்ணிக்கையிற் குர்தியர்களையும் ஆமேனிய கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய நாடாகும். இன்று சிரியாவுக்குள் இன, மதப் பிரிவினைகளை ஏற்படுத்தி உள்நாட்டு யுத்தமொன்றை நடத்த ஏகாதிபத்தியம் துடிக்கிறது. சிரியாவில் ஆட்சி மாற்றத்திற்கான முயற்சி அதனுடன் சேர்ந்த ஒரு செயற்பாடாகும்.

சவூதி அரேபியா சிரியாவில் ஆட்சி மாற்றத்தை வேண்டுகிறது. சவூதி அரேபியாவின் பிராந்திய அதிகாரத்துக்குச் சவால் விடும் ஒரு நாடாக சிரியா இருப்பதும் சவூதி அரேபியாவிற்கு கீழ்ப்படிய மறுக்கும் ஹிஸ்புல்லா, ஹமாஸ் இயக்கங்கட்கு சிரியா வழங்கிவந்துள்ள ஆதரவும் ஈரானுடனான சிரியாவின் நெருக்கமும் சவூதி அரேபியாவிற்கு பாரிய தலையிடிகளை வழங்குகின்றன. அதனால், சவூதி அரேபியா, சிரியாவில் அரபு வசந்தம் என்ற போர்வையை தனது வசதிக்காகப் போர்த்துக் கொள்கிறது. அதே அரபு வசந்தம் தனது மண்ணுக்கு வந்தபோது கொடிய இராணுவக் கரங்கொண்டு அடக்கிய சவூதி அரேபியா, அண்டை நாடான பாஹ்ரேனில் மக்கள் எழுச்சி ஏற்பட்டபோது தனது இராணுவத்தை அனுப்பி அவ்வெழுச்சியை முளையிலேயே கிள்ளியது.

2011இல் அமெரிக்காவின் ஆயுத விற்பனை 2012ம் ஆண்டை விட மும்மடங்கு கூடியுள்ளது. ஆயுதம் வாங்கிய நாடுகளில் முதலிடத்தில் இருப்பது சவூதி அரேபியா. அதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் அதிகளவில் ஆயுதங்களை கடந்தாண்டு விற்றிருப்பது சவூதி அரேபியாவிற்கே. குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகட்கான ஆயத விற்பனைச் சட்டவிதிகளை மீறி சவூதி அரேபியாவிற்கு ஆயுதங்கள் விற்கப்பட்டிருக்கின்றன.

சிரியாவில் மனித உரிமை மீறல்களைப் பற்றி வாய்கிழியப் பேசும் சவூதி அரேபியாவிற் தான் குற்றவாளிகளின் கைகளைத் துண்டிப்பதும்

***அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விரிவாக்கத்திற்கும் குறிப்பாக மத்திய கிழக்கில் அதன் கை ஓங்குவற்கு கூட்டுக் களவானியான அடியாள் வேலையை சவூதி அரேபியா பார்க்கிறது. உலகெங்கும் இஸ்லாமியத் தீவிரவாதத்தை ஊட்டி வளர்ப்பதன் மூலம் "நாகரிகங்களிடையிலான மோதல்" என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் உலகெங்கும் அமெரிக்கா போர்தொடுக்க சவூதி அரேபியா களம் அமைத்துக் கொடுக்கிறது.***

அவர்களைக் கல்லெறிந்து கொல்வதும் நடைபெறுகின்றன. அங்கு தேர்தல்கள் இல்லை. மன்னராட்சி நடைபெறுகிறது. பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறன. ஜனநாயகம் என்ற பேச்சிற்கே அங்கு இடமில்லை. அரசியல் கட்சிகள் தடைசெய்யப்பட்டுள்ளன. 60% மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள். இந்த சவூதி அரேபியாவைத் தான் நமது ஊடகப் புலிகள் போற்றிப் புகழ்கிறார்கள்.

இதே சவூதி அரேபியா தான் உலகெங்கும் வஹாபி, ஸலாஃபி முஸ்லிம் குழுக்களை அனுப்புகிறது. உலகெங்கும் இஸ்லாமியத் தீவிரவாதத்தை வளர்க்கிற அதே வேளை, அவை முஸ்லீம் மக்களைப் பிளவுபடுத்துகின்றன. ஏகாதிபத்தியத்திற்கு உவப்பான வேலையை, அதாவது முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதை, சவூதி அரேபியா அமெரிக்காவிற்காகச் செய்கிறது. இவை பேசப்படுவதில்லை. ஆனால் இவை கவனிக்கப்பட வேண்டியவை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விரிவாக்கத்திற்கும் குறிப்பாக மத்திய கிழக்கில் அதன் கை ஓங்குவற்கு கூட்டுக் களவானியான அடியாள் வேலையை சவூதி அரேபியா பார்க்கிறது. உலகெங்கும் இஸ்லாமியத் தீவிரவாதத்தை ஊட்டி வளர்ப்பதன் மூலம் "நாகரிகங்களிடையிலான மோதல்" என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் உலகெங்கும் அமெரிக்கா போர்தொடுக்க சவூதி அரேபியா களம் அமைத்துக் கொடுக்கிறது. இன்று சிரியாவில் நடப்பதைப் புரிந்து கொள்வது உலக அரசியலின் சில இயங்கு நிலைகளைப் புரிந்துகொள்ள உதவும். அத்துடன் விடுதலை எவ்வாறெல்லாம் அர்த்தப்படுத்தப்படுகிறது என்பதையும் சில "விடுதலைப் போராட்டங்கள்" யாரால் யாருக்காக நடத்தப்படுகின்றன என்பதையும் விளங்கவும் உதவும்.

---

# நாலிலொரு அமெரிக்கர் மூன்றிலொரு இந்தியர் பட்டினியில்

## வல்லரசுக் கனவு?

அமெரிக்கப் பொருளாதாரத்தின் கந்தறுந்த நிலையை அண்மையில் ஒக்ஸ்ஃபம் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையொன்று மீண்டுமொருதடவை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. பொருளாதார நெருக்கடியிலிருந்து அமெரிக்கா மீண்டுவிட்டதாகவும் நிலைமை சீர்ப்பட்டுவிட்டதாகவும் பொருளியலாளர்களும் வல்லுனர்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒக்ஸ்ஃபம் அறிக்கைப்படி அமெரிக்க மக்கள் தொகையில் 25%க்கு மேற்பட்டோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். ஏழில் ஒருவர் பசியால் வாடுகிறார். அமெரிக்கப் பெருங் கனவுக்கு என்ன நடந்தது?

மற்றொரு புள்ளிவிபரம் அமெரிக்கா ஆண்டொன்றுக்கு சுமார் 780 பில்லியன் அமெரிக்க டொல்ர்களை போரிற்காக செலவிடுகின்றது என்பதை காட்டுகின்றது. ஆனால் அமெரிக்கர்களின் வீட்டு வசதி மேம்பாட்டுக்காக வெறும் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களே செலவிடப்படுகின்றது. பரக் ஒபாமா, சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்ற 2009ல் போருக்கான செலிவனங்களை 08 வீதத்தினால் அதிகரித்துள்ளார். அமெரிக்காவின் சனத்தொகையில் 13%ற்கு மேல் வாழும் ஆப்ரிக்க-அமெரிக்கர்களில் "17" வயது நிரம்பிய ஆண்களில், பாடசாலைகளில் கற்பவர்களின் எண்ணிக்கையை விட சிறையில் வாடுபவர்களின் எண்ணிக்கை அதிகம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆயிரக்கணக்கான ஆப்ரிக்க-அமெரிக்கர்களை அமெரிக்க அரசும் பெருவணிக நிறுவனங்களும் திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் பாவனை, மது மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகளுக்கு*(Fast food)* அடிமையாக்கி வருகின்றது.

அமெரிக்கா ஆண்டுதோறும் தனது உள்நாட்டு கடன்களுக்கான வட்டியாக சுமார் 4139 பில்லியன் டொலர்களை செலுத்துகின்றது. இது இரண்டு வருடங்களுக்கு உலகின் வறுமையை இல்லாமல்செய்ய போதுமானது.


2001ல் அமெரிக்கா ஆப்கானில் நுழைந்தது முதல் ஆப்கானின் ஹெரோயின் உற்பத்தி 10%னால் அதிகரித்துள்ளது. அமெரிக்க அரசு போதைப் பொருட்களுக்கான போரில் 44.5 பில்லியன் டொலர்களை வருடாந்தம் செலவிடுகின்றது. இது அமெரிக்காவிற்கு உள்ளேயும் வெளியிலும் உள்ள அடிப்படை சுகாதார வசதிகளற்ற மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவு செய்யப் போதுமானது எனவும் இவ்ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அமெரிக்காவாலும் பிரிட்டனாலும் உற்பத்தி செய்யப்படும் ஆயதங்கள், சுகாதார காரணங்கள் அல்லாத மரணங்களில் 94%ற்கு காரணமாக உள்ளது.

அதேவேளை வல்லரசுக் கனவில் திளைக்கும் இந்தியாவின் வறுமை 27.5% இலிருந்து 37.2% ஆக அதிகரித்துள்ளது. இப்புதிய கணக்கின்படி 410 மில்லியன் இந்தியர்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள னர். இதன்படி 100 மில்லியன் இந்தியர்கள் வறுமைக் கோட் டின் கீழ் புதிதாக வந்திருக்கிறார்கள். இதிற் கவனிப்புக் குரிய இன்னொரு விடயம், ஐக்கிய நாடுகள் சபையால் நிர்ணயிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்கமைய, நாளாந்த வருமானமாக 1.25 அமெரிக்க டொலர்களைக் கொள்ளாதவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோர் என கணிக்கப்படுவார்கள். இத்தொகை ஒருவர் சீவிப்பதற்குப் போதுமானதல்ல. எனினும் உலகில் பட்டினி குறைவடைகிறது என்பதைக் காட்டுவற்காக ஐ.நா. இவ்வாறான குறைந்த தொகையை எல்லையாக வைத்துள்ளது. இது ஒருபுறமிருக்க, இந்த அளவுகோல் இந்தியாவில் வறுமையைக் கணிக்கப் பயன்படுவதில்லை. இந்தியாவில் வறுமைக்கோட்டு எல்லையை நகர்ப்புறங்களில் 64 அமெரிக்கச் சதமாயும் கிராமப்புறங்

**அமெரிக்க மக்கள் தொகையில் 25%க்கு மேற்பட்டோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள்**

**அமெரிக்கா ஆண்டொன்றுக்கு சுமார் 780 பில்லியன் அமெரிக்க டொலர்களை போரிற்காக செலவிடுகின்றது**

**அமெரிக்கர்களின் வீட்டு வசதி மேம்பாட்டுக்காக வெறும் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களே செலவிடப்படுகின்றது**




களில் 52 அமெரிக்கச் சதமாயுங் கெண்டே வறுமை கணிக்கப்படுகிறது. ஐ.நா. நிர்ணயித்த வறுமைக்கோட்டின் அடிப்படையில் கணித்தால் இன்னும் பல கோடி இந்தியர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே வருவார்கள். ஆனால் இந்தியர்கள் உலகின் முதல் பத்து, முதல்நூறு பணக்காரர்கள் பட்டியலை மட்டும் நிறைக்கிறார்கள். இதே இந்தியா, பல மில்லியன் டொலர்களைச் செலவழித்து செய்மதிகளை ஏவகிறது. ஏவுகணைகளைப் பரீடசித்துத் தன்னை ஒரு வல்லரசாகக் கனவு காண்கிறது. அமெரிக்கா உலகெங்கும் போர் தொடுக்கிறது; புதிய போர்க்களங்களைத் திறக்கிறது. சிரியாவில் ஆட்சி மாற்றத்திற்கு மில்லியன் கணக்கான டொலர்களைச் செலவிடுகிறது. ஏகாதிபத்தியத்தாலும் ஏகாதிபத்தியமாக வளரும் விருப்புடைய நாடுகளும் செய்யக் கூடியது இவ்வளவே. அல்லற்படுவதென்னவோ மக்கள் தான்.

# ‘நனவெரிந்த சாம்பலில்’

**நனவெரிந்த சாம்பலில், லோகன் செல்லம், மித்ரா ஆலட்ஸ் அன்ட் கிரியேஷன்ஸ், சென்னை**

**மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் அனுபவிக்கும் இடர்களையும் தமது இலக்கிய ஆக்கங்கங்களில் வெளிப்படுத்துவது மட்டும் மக்கள் இலக்கியப் பண்பாகி விடாது. விளைவுகளுக்காக மட்டுமன்றி காரணங்களுக்காகவும் இலக்கிய எழுத்துக்கள் தம்பணி ஆற்ற வேண்டும்.**




ஜியோதிஸ்மன்

புலம்பெயர் தமிழ்ச்சூழலில் நல்ல இலக்கியப் படைப்புக்கள் நூலுருப் பெறுவது அவசியமானது மட்டுமன்றி, ஆரோக்கியமான தமிழ் இலக்கியச் சூழலுக்கும் அதைவிட முக்கியமாக தொடர்ச்சியான கலந்துரையாடலுக்கும் பயனுள்ளது. லோகன் செல்வன் அவர்களது “நனவெரிந்த சாம்பலில்” கவிதைத் தொகுதியின் வருகை அவ்வகையில் மட்டுமன்றி அதறகப்பாலும் அதன் உள்ளடக்கத்தின் காரணமாக வரவேற்பிற்குரியது.

ஒருவருக்குக் கவியாற்றல் கைவரப் பெற்றமையால் மட்டும் அவராற் சிறப்பான கவிதைகளைப் படைக்க இயலும் என்ற முடிவிற்கு வந்துவிட முடியாது. ஒரு கவிதையின் சிறப்பிற்கு கருத்துச் செறிவும் அவசியமாகிறது. இவ்வாறு கவித்துவமும் கருத்து நிலையும் இணைந்து பயன்தரும் கவிதைகளாக அமைவதற்கு கவிதை படைப்போரின் சமூக நோக்கு மக்கள் சார்புடையதாக இருத்தல் வேண்டும். சமூக முரண்பாடுகளை அடையாளம் காண்பதாயும் அவற்றின் இயங்குதளத்தை வெளிச்சமிட்டுக் காட்டுவதாயும் மக்களுக்கு அறிவூட்ட வல்லதாயும் அமையும் கவிதைகள் பயனுள்ள சமூகப் பங்களிப்புக்களாக அமைந்து விடுகின்றன. அத்தகைய கவிதைகளும் கவிஞர்களும் சமூக நிலைப்பைப் பெற்றும் கொள்கின்றனர். அவ்வகையில் ஒரு பயனுள்ள தொகுதியாக இத்தொகுதியைக் கொள்ளலாம்.

தமிழ்க் கவிஞர்களில் இயல்பெழுச்சி மிக எழுதக்கூடியவர்கள் சிலரே. “நனவெரிந்த சாம்பலில்” தொகுதியை வாசித்தபோது அச்சிலரில் லோகன் செல்லனும் ஒருவராக எனக்குத் தெரிந்தார் என்பேன். கவிதைகளை எப்படிப் படிப்பது என்று சிந்திக்கும்போது நாம் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம், படிப்பது என்பது வெறுமனே கண்ணாற் படிப்பது அல்ல என்பதுதான். உண்மையிற் படிப்பது என்பது மனதால் படிப்பது; அதாவது கருத்தை உள்வாங்கிக் கொள்வது. அவ்வகையில், மிகவும் இலகுவாக உள்வாங்கத்தக்க மொழியில் இத்தொகுதியில் உள்ள கவிதைகள் இருக்கின்றன. அறிவுடன் பேசுமுன் அவை மனத்துடன் பேசுகின்றன. மனத் தின் ஊடாக அறிவுடன் பேச முயல்கின்றன. இத்தொகுதியின் கவிதைகள் வாசகனின் மனதை இலகுவாகச் சென்றடைகின்றன. மனம் கனத்து அறிவைச் செயற்பட வைக்கும் ஊக்கியாக, மனத்திற்கு அறிவிற்கும் இடையிலான இடைநிலைப் பாத்திரத்தை வகிப்பனவையான எண்ணங்களை மனத்திலிருந்து அறிவை நோக்கிச் செயற்படுத்தும் திசைவழியாக இக்கவிதைகள் திகழ்கின்றன.

பயணப்பட விரும்பும் ஒரு தேசத்துக்குப் பயணிக்கிறோம். பல தரப்பட்ட மனிதர்களைச் சந்திக்கிறோம், சிந்திக்கிறோம், அளவளாவுகிறோம், உலாவுகிறோம், ஆர்ப்பரிக்கிறோம், அதிசயிக்கிறோம், நீளமாகப் பெருமூச்சு விடுகிறோம், வியப்புடன் பார் க்கிறோம். இவை அனைத் தையும் இத்தொகுதியின் கவி தைகட்கூடாக பயணம் செய் யும் போது அனுபவிக்க முடி யும். எங்குமே நெருடல் இல் லாத, தொல்லைகள் தராத சரளமான நடை, சொற்களை வலிந்து அணிந்து கொள்ளும் நாடக பாணி இல்லாத எழுத்து, விலகல் நடை அல்லாத மனசுக்கு நெருக்கமான இயல்பான இதமான எழுத்தோட்டம் என்பன வாசிப்பு அனுபவத்துக்குத் துணைபுரிகின்றன. இவை இக்கவிதைத் தொகுதியின் பலமான அம்சங்கள்.

இத்தொகுதியில் எழுத்துப் பிழைகள் ஏராளம். இவை வாசித்தபதற்குத் தடையாகவும் சில இடங்களில் கவிஞர் சொல்லவிரும்புகிற பொருளை விளங்கிக்கொள்ள சிரமமானதாகவும் மாற்றி விடுகின்றன. இவை தவிர்த்திருக்கக்கூடியவை. அடுத்த என் கவனிப்புக்குள்ளான விடயம் கவிதைகள் அங்குமிங்குமெனச் சிதறிக் கிடக்கின்றன. கவிதைகள் பொருள் சார்ந்தோ அல்லது காலம் சார்ந்தோ நூலில் ஒழுங்குபடுத்தப்படவில்லை. இவை இத்தொகுதியின் முக்கியமான பலவீனம்.

மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் அனுபவிக்கும் இடர்களையும் தமது இலக்கிய ஆக்கங்கங்களில் வெளிப்படுத்துவது மட்டும் மக்கள் இலக்கியப் பண்பாகி விடாது. விளைவுகளுக்காக மட்டுமன்றி காரணங்களுக்காகவும் இலக்கிய எழுத்துக்கள் தம்பணி ஆற்ற வேண்டும். அந்த வகையில் சமூக முரண்பாடுகளையும் அவற்றின் அடிப்படைகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கான நோக்கையும் கொண்டிருக்கும் எந்தவொரு ஆக்க இலக்கியக்காரரும் தமக்குக் கைவரப்பெற்ற ஆற்றல் மூலம் மக்கள் இலக்கியப் பரப்பிற்கு பங்களிப்புச் செய்பவராகின்றார்.

சமூக விடுதலை என்பது பண்பாட்டு விடுதலையும் ஆகும். ஒன்றில்லாமல் மற்றது இல்லை. எனவே புதிய பண்பாடு பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நம்முடையது என்று நாம் எதற்கும் உரிமை கொண்டாட அது முற்றிலும் நமது முன்னோரால் உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டியதில்லை. ஒரு கலை வடிவம் நமது சமூகத்தின் நிலையையும் அது செல்ல வேண்டிய திசையையும் நமது மக்களின் சிந்தனையின் உயர்வையும் அடையாளப் படுத்துமாயின் அதுவே நமது கலை வடிவம் ஆகம்.


இக் கவிதைகள் வாழ்வின் யதார்த்தங்களையும் ஏற்ற இறக்கங்களையும் மட்டுமன்றித் தனி மனித வாழ்வனுபவங்களின் சக, சய புள்ளிகளையும் அடையாளம் காட்டி நிற்கின்றன எனலாம்.

பரபரப்பு மிகுந்த இன்றைய உலகம் படைப்பின் ஆற்றலை உணர்வதிற் பொறுமையற்றுவிட்டது. படைப்பை மெருகேற்றத் தீட்டிய வண்ணங்கள் பற்றிய கவர்ச்சியில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. பல கவிஞர்கள் தங்கள் கவிதையின் வெளிப்பூச்சுக்கு வர்ணம் பூசுபவர்கள். இவர்கள் நடுவே, லோகன் செல்வன் வேறுபட்டவர். நேர்மையான எழுத்தையும் நேர்மையான நோக்கங்களையும் அவரது படைப்புகளில் அவதானிக்கலாம். இதனால் எளிய மொழியில் செய்திகளின் அழகாக தொகுப்பாகவும் நல்ல கதை சொல்லலாகவும் இருக்கின்ற இக் கவிதைகளின் படைப்பாற்றலும் உட்பொதிந்திருக்கும் செய்தியும் எட்டாமற் போய் விடுமோ என்ற பயத்துக்கு இடமுண்டு.

சமகால வாழ்வின் சிக்கல்களும் அதில் அகப்பட்டுத் திணறும் மனசின் கோலங்களுமே பாடுபொருட்கள். இக் கவிதைகளின் பின்னால் நெல்லிக்கனியில் மறைந்திருக்கும் தித்திப்புப் போல மனதைத்தொடும் விடயங்கள் இருப்பதை மறுக்கவியலாது. படைப்பாளியின் உள்ளாற்றலை அறிந்து கொள்ளல் அத்தகைய எளிதல்ல. வானத்தின் விரிவைப் போன்று, கடலின் ஆழத்தைப் போன்று வியப்புலகாகவே இது தோற்றம் தருகிறது. ஆனாலும் படைப்பின் ஆழம் குறித் தவற்றைத் தெளிவாகவே சொல்லிவிட முடியும். இது படைப்பாளியின் அனுபவம் சார்ந்தது. அதே நேரத்தில், ஒருவன் அனுபவக் கருவை பல காலம் சுமந்து, அதனை பெற்றெடுப்பதில் தாங்கிக் கொள்ளும் வலியைத்தான் சார்ந்து தான், இதன் வெற்றியும் அமைகிறது.

முற்றுப்பெறாத எழுத்துக்களோடு தன் மூடியை அணிந்து கொள்ளும் பேனா, தொடரும் என அறிவிப்போடு மூடப்படும் புத்தகம்... வெளிக்கிளம்பும் பொழுதில் தேடுதல் வேட்டை.... எஞ்சியிருப்பது, புத்தகங்களைப் பையில் திணிக்கும் குழந்தைகளின் அவசரம் மட்டுமே என்ற நிலையில்தான் நாம் இன்று இருக்கிறோம். படைப்புக்கும், படைப்பாளிகளுக்குமான உறவும் உருவாக்கமும் முக்கியமானது. அதேபோலவே படைப்புக்கும் வாசகனுக்குமான உறவும், உரையாடலும் முக்கியத்துவம் பெறுகிறது. இவை அனைத்தையும் சாத்தியமாக்க முனைய வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

எல்லாவித அதிகாரங்களுக்கும் வாய்பேசா மௌனியாக இருந்துவிட்டு அதிகாரம் தமது இருப்பை அசைக்கின்ற போது கிணற்றுக்குள் இருந்து வெளியில் வந்த மனிதனைப் போல் சமூகத்தை எதிர்கொள்கிற மனநிலையிலிருந்து மக்கள் வெளியேற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தடைகளைக் கடந்து இப்பயணம் தோழமையுடன் பயணிக்கும் என்ற நம்பிக்கையில்......




தோழர் அழ பகிரதனின் இப்படியும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு 16.12.2012 அன்று புத்தூர், கலைமதி மக்கள் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தோழர் கண்ணன், தோழர் சோ. தேவராஜா, தோழர் தணிகாசலம், தோழர் சி.கா. செந்திவேல் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டக்களையும் காணலாம். நிகழ்வினை தேசியக் கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாணக் கிளை ஒழுங்கு செய்திருந்தது.





## முரண்மிகு மெய்

விச வாயுக்கள்,
ஊயிர்கொல்லும் குரூர உபகரணங்கள் சகிதம்
கூலிப்படைகளை ஏவி, மனிதம் மறுத்து
இலட்சோப இலட்ச அப்பாவிகளின் உயிர்
குடித்து
ஊன் கொடிய நாட்டிய பொழுதுகள்
இப்போதுமென் கண்முன்னே!

உன் மொழியில் என் பாஷையை எழுதி
சிரமத்துடன் மனனஞ் செய்து
அறிவுடை மனிதர் கூடும் அரங்கேறி
ஒப்புவிக்கும் உன் நரித்தனத்தில்
அன்றில், இனவெறித்தனம் பிடித்தலையும்
உன் சகாக்களின் உடைமாற்றி
இந்து, பௌத்தம், இஸ்லாம், பறங்கியென
வேடங்காட்டி, மேடையேறி முழங்கும்
வெற்று வார்த்தைகளில் மற்றும் காட்சிகளில்
எப்படி இருந்துவிட முடியும் ஒற்றுமையின்
உயிர்?

உறவு, உடைமை, ஊரென
அத்தனையும் இழந்து நிற்கும்
அப்பாவி மனிதர்தம் நிலம் பறித்தும்,
அஹிம்சாமூர்த்தியின் அவதாரம் தரித்தும்
நீ நடாத்தும் நரித்தனங்கள்
நீர்த்துப்போகும் காலத்தின் நீளம்
குறுகி வருவதை நீயறியாய்.

-மாக்ஸ் பிரபாகர்

## புனர்வாழ்வு வெதுப்பகங்களில்

உலக அரசியல் சந்தைக்கும்
உள்ளக வாக்குச் சந்தைக்கும்
உற்பத்திப் பொருளாக!
குட்டிக் குட்டி வெதுப்பகங்களில்
விறகில்லாமல் வேகின்றனர்
மனிதர்கள் சிலர்
புனர்வாழ்வு வெதும்பைகளாக...

தோழர் சுகே



முத்தான வாழ்வுதனை
மூச்சுக்கு நிம்மதியின்றிப் —
பலருக்கு
முத்தாய்ப்புக்கள் ஆயுளுக்கிட்டு
முந்தானையும் கிழிஞ்சல்களாக்கி
முச்சந்திகளில் அனாதைகளாய்
முடிவுகளின்றி இன்றும்...

தோழர் சுகே





கூடங்குளம் அணு உலைக்கெதிரான மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் 17.11.2012 அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதில் மக்களுக்கு அணு உலை தொடர்பாக விழிப்புணர்வூட்டும் துண்டு பிரசுர பிரச்சாரமும் இடம்பெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்தில் சூழல் ஆர்வலர்களும் கலந்துக் கொண்டு மக்களுக்கு அணு உலைகளின் பின்னால் உள்ள ஆபத்துப் பற்றி விளக்கினர். கூடங்குளம் பகுதியில் இந்திய அரசு மேற்கொண்டு வரும் ஒடுக்குமுறையையும், கூடங்குளம் அணு உலையால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் இவ் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்த புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தோழர்கள் அம்பலப்படுத்தினர்.









தேசிய கலை இலக்கியப் பேரவையும் கலைமதி சனசமூக நிலையமும் புத்தூரில் பொங்கல் திருநாளன்று நடாத்திய 'உழவர் பெருவிழா' தோழர் கண்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தோழர்கள் பாடலிசைப்பதையும், சப்ரகமுவ தே.க.இ.பேயின் தோழர் சு. விஜயகுமார் 'காலம் மாறுது' புரட்சிகரப் பாடல்கள் இருவட்டை அறிமுகம் செய்து உரையாற்றுவதையும், சிறப்புரையை புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தோழர் சி.கா. செந்திவேல் உரையாற்றுவதையும், மாலையில் இடம்பெற்ற கிராமிய விளையாட்டுக்களில் கிராமத்து உழைக்கும் மக்களும், பெண்களும், சிறுவர் சிறுமியரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டதையும் படங்களில் காணலாம்.

-யாழ்ப்பாண நிருபர்-







## புதிய நீதி

பணிமனை மற்றும் நிதிப் பற்றாக்குறை, நிர்வாக ஒழுங்கமைப்பு என்பவற்றால் கடந்த மூன்று மாதங்களாக புதிய நீதி வெளிவரவில்லை. தற்போது தை-மாசி இதழ் வெளிவந்துள்ளது. புதிய நீதி தொடர்ந்தும் வெளிவர வாசகர்கள், சந்தாதாரர்கள், விற்பனையாளர்கள், நிதிப்பங்களிப்பு வழங்குவோர் ஆகியோரது ஆதரவை புதிய நீதி வேண்டி நிற்கிறது.

மேலும் பத்திரிகைக்கான கட்டுரைகள், செய்திகள், விமர்சனங்கள், கவிதைகள், படங்கள் மற்றும் ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறும் வேண்டுகிறோம்.

தொடர்பு முகவரி.

ஆசிரியர் குழு<br>
புதிய நீதி,<br>
121, ஹெம்டன் லேன்,<br>
வெள்ளவத்த,<br>
கொழும்பு-06.

தொ.பே: 0779 774 427, 0716 745 642<br>
தொ.நகல்: *0112 473 759.*<br>
மின்னஞ்சல்: *puthiyaneethi2012@gmail.com*

வங்கித் தொடர்பு: *K. Senthivel V. Mahendran, Commercial Bank, Grandpass Branch, A/C. No. 1570018335*






தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ள யாழ் மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தி அரசியற் கட்சிகளும் வெகுஜன அமைப்புக்களும் தொடர்ந்து போராடி வந்தன. அப்போராட்டங்களில் புதிய-ஜனநா யக மாக்சிச-லெனினிசக் கட்சியும் பங்கெடுத்ததுடன், மாணவர்களின் விடுதலைக்காகவும் வடக்கில் இடம் பெறும் இராணுவ ஆட்சிக்கெதிராகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றது. வவுனியாவில் பல்கலைக்கழக மாணவர் விடுதலையை விடுதலையை வலியுறுத்தி நடைப்பெற்ற ஆர்பாட்ட பேரணியையும் போராட்டத்தையும் படங்களில் காணலாம். இதில் அரச படைகளின் அடக்குமுறையை அம்பலப்படுத்தி பு.ஜ.மா.லெ.க யின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல் உரையாற்றுவதையும் காணலாம்.

-வவுனியா நிருபர்-

வெளியிடுபவர்—வெ. மகேந்திரன், இல.15/4, மகிந்தாராம வீதி, கல்கிஸ்சை, அச்சிடுபவர்—கொம் பிரின்ட் சிஸ்ரம், 1/2, டயஸ் பிலேஸ், கொழும்பு—12